# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No: 2 of 2002**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*அன்புக்குரிய வாசகர்களே! ஆத்துமாக்கள் கர்த்தரை ஆராதித்து வாழ்வதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வேதம் போதிப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஆத்துமாவுக்கு கர்த்தர் கொடுத்திருக்கும் அத்தனை முக்கியமான பணியை சபைகளும், ஆத்துமாக்களும் கர்த்தருக்குப் பிடித்தமில்லாத வழிகளில் அவர் முன் செய்து வருகின்றார்கள். நீதியின் தேவனும், பாவத்தை சகிக்காத நம் பரமனும் ஆத்துமாக்களின் அறிவற்ற செயல்களைப் பார்த்து சிரித்துக்கொண்டுதான் இருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தருக்கு முன் நாம் செலுத்திய ஆராதனை அத்தனைக்கும் கணக்குக் கொடுக்காமல் தப்ப முடியாது. அத்தனை முக்கியமான ஆராதனையை கர்த்தர் நடத்தும் வழியில் செலுத்துவது அவசிமல்லவா? அதனால் இவ்விதழில் பல ஆக்கங்கள் ஆராதனையைப் பற்றி ஆராய்கின்றன. இதன் மூலம் கர்த்தர் உங்களோடு பேசி உங்கள் ஆராதனையை சிறப்புறச் செய்யட்டும்.*

*இரகசியக் கிறிஸ்தவர்கள் என்ற ஒரு கூட்டத்தை சிலர் இன்று உருவாக்கி ஆத்துமாவுக்கு பொருந்துகிற விதத்தில் கிறிஸ்தவத்தை மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது வேத்தில் காண முடியாத ஒரு கூட்டம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. துணிந்து இயேசுவுக்கு சாட்சியாக இருக்க மறுப்பவர்கள் விசுவாசிகளாக இருக்க முடியாது. கிறிஸ்துவை இரகசியமாக அனுபவிக்க முடியாது; அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு இரகசியமாக வாழவும் கூடாது. அது பற்றி இவ்விதழில் எழுதியிருக்கிறோம்.*

*தொடர்ந்து வரும் திருச்சபை வரலாறு பற்றிய ஆக்கம் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது என்று நம்புகிறோம். சீர்திருத்தவாதிகளையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறோம். இவ்விதழ் ஜோன் விக்ளிப்பின் சரிதத்தோடு வருகிறது. பல வருடங்கள் வந்து கொண்டிருந்த கேரியின் வாழ்க்கை சரிதம் இவ்விதழோடு முடிவுக்கு வருகிறது. அம்மகாமனிதரின் வாழ்க்கை அநேகரைச் சிந்திக்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இடையில் வராமலிருந்த 1 கொரிந்தியர் 12–14 வேதப்பகுதியின் விளக்கம் மறுபடியும் இவ்விதழில் தொடர்கிறது. இவற்றோடு வழமையாக வரும் சீர்திருத்த போதனைகளை அளிக்கும் 1689 விசுவாச அறிக்கைக்கான விளக்கங்களும், கிறிஸ்தவ கோட்பாடுகளும் தொடர்கின்றன. உங்களுடைய ஆத்மீக வாழ்க்கை இவற்றால் பலமடையட்டும். அதுவே எங்களுடைய எதிர்பார்ப்பும், ஜெபமுமாகும். - ஆசிரியர்*

# ஆராதனை! மனிதனின் சிந்தனைப் போக்கிலா? அல்லது கர்த்தரின் வழியிலா?

கிறிஸ்தவ திருச்சபை தன் தலைவராகிய கர்த்தரை ஆராதிக்கும் பெரும் கடமையைத் தன்னில் கொண்டிருக்கிறது. அது கடமையாக மட்டும் இல்லாமல் திருச்சபை முழு இருதயத்தோடும், ஆனந்தத்தோடும் கர்த்தரின் பாதத்தில் கொடுக்க வேண்டியஆத்மீக பலியாகவும் இருக்கிறது. இத்தகைய ஆத்மீக பலியை ஆத்துமா தன் சொந்த வழியில், தன்னுடைய சிந்தனைப் போக்கின்படி கர்த்தருக்கு முன் செலுத்தலாமா? அல்லது கர்த்தர் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அவர் காட்டும் வழியில் செலுத்தப்பட வேண்டுமா? என்பதைப் பற்றி நாம் இன்று சிந்தித்துப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக கிறிஸ்தவ உலகத்தைக் குழப்பிக் கொண்டிருக்கும் முக்கியமான கேள்வி இது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் தோன்றிய பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்கள் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆவியோடு ஆராதிக்க வேண்டும் என்று போதித்து, அத்தகைய ஆவிக்குரிய ஆராதனையின் அடையாளங்களாக அந்நிய பாஷை பேசுதல், தீர்க்க தரிசனம் சொல்லுதல், உணர்ச்சிவசப்பட்டு சுய நினைவிழந்து ஆடுதல், விழுதல் போன்றன எல்லாம் இருக்க வேண்டும் என்று ஆரம்பித்ததிலிருந்தே திருச்சபையில் ஆத்துமாக்கள் கூடி ஆராதிக்கும் ஆராதனைக்கு பேராபத்து ஏற்பட்டது. இவ்வியக்கங்கள் வேதத்திற்கு தவறான விளக்கங்கொடுத்து வேத அறிவில்லாத ஆத்துமாக்களை கர்த்தரின் வார்த்தைக்கு எதிரான காரியங்களைச் செய்யும்படி வழிநடத்தினார்கள். ஆராதனையில் மேலே நாம் குறிப்பிட்ட அம்சங்கள் இல்லாத இடங்களில் ஆவியானவர் இல்லை என்ற தவறான போதனையை இவ்வியக்கங்கள் ஆத்துமாக்கள் மத்தியில் ஏற்படுத்தின. காலம் செல்லச்செல்ல இவற்றோடு வேறு பல அசியமற்ற அம்சங்களும் காட்டாறுபோல் சீறிப்பாய்ந்து சபை ஆராதனை வேளைகளில் பங்குபெற ஆரம்பித்தன. அவற்றையே இன்று நாம் பல சபைகளிலும், கூட்டங்களிலும் பார்க்கிறோம். கணக்கில்லாத பாடல்களும், எண்ணிக்கையிலடங்காத இசைக்கருவிகளும், தனி நபர் துதி பாடி அவர்களுடைய திறமையைக் காட்டும் தனி நபர் பாடல்களும், ஆட்டங்களும் ஆராதனையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு யார் இவற்றை அதிகமாகவும், புதுப்புது விதங்களில் மெருகேற்றியும் செய்கிறார்களோ அவர்களை நாடிக் கூட்டம் பெருகத் தொடங்கின. ஆராதனையில் எதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், எதைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது தனி மனிதனின் எண்ணத்தைப் பொறுத்தது என்ற அடிப்படையில் இன்று ஆராதனை எல்லா இடங்களிலும் நடந்து வருகின்றது.

தங்களுடைய சபை மக்களை இழந்து போகக்கூடாது என்பதற்காகவும், இப்புதிய சுவிசேஷ ஆராதனை முறையினால் ஈர்க்கப்பட்டதாலும்

*பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்களுக்கு வெளியில் உள்ளவர்களும் இத்தகைய ஆராதனைமுறைகளை இன்று பின்பற்றி வருகிறார்கள். சினிமாத் தியட்டர்களிலும், பொப் இசைக் கூட்டங்களிலும் உள்ள கலகலப்பு இன்று சபை ஆராதனைக்கூட்டங்களில் தெரிகின்றது. இவையில்லாத சபைகளை நோக்கிப் போகிறவர்கள் குறைவு. பிரசங்கமும், நல்ல போதக ஊழியமும், ஐக்கியமும் இருந்தபோதும் ஆராதனையில் கலகலப்பூட்டும் அயிட்டங்கள் இல்லாவிட்டால் சபைகள் வெற்றிகரமாக இயங்க வாய்ப்பில்லை என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. ஆத்துமாக்களுக்கு ஆத்மீக உணவளிப்பதை தவிர்த்துவிட்டு ஆராதனையில் எதையெதையெல்லாமோ சேர்த்து சபைக்கு ஆள் சேர்க்கும் வேலையே எங்கும் நடந்து வருகின்றது.*

*ஆராதனை எப்படி இருக்க வேண்டும்? அது எப்படி இருக்க வேண்டும் என்று கர்த்தர் தமது வேதத்தில் வழி காட்டியிருக்கிறாரா? அதை மனிதனின் சிந்தனை போனபடியெல்லாம் நடத்தலாமா? அல்லது கர்த்தரின் வார்த்தை காட்டும் வழிப்படித்தான் நடத்த வேண்டுமா? என்ற கேள்விகளுக்கு நாம் சிந்தித்து வேதபோதனையின்படி பதிலளிக்க வேண்டும். சபை ஆராதனைபற்றிய இக்கேள்விகள் சாதாரணமானவையல்ல. இக்கேள்விகளுக்கான பதில்கள் மெய்க்கிறிஸ்தவத்திற்கும் போலிக் கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டப்போகின்றன. ஆராதனை மனித சிந்தனையின்படி நடக்கலாமா? அல்லது கர்த்தரின் வழிப்படி நடக்க வேண்டுமா? என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம் நாம் கிறிஸ்தவ ஆராதனை என்ற பெயரில் இன்று எல்லா இடங்களிலும் நடந்துவரும் கூத்துக்களை சட்டையை உரிய ஆரம்பித்திருக்கிறோம்.*

**ஆராதனையை ஏற்படுத்தியது யார்?**

*கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனின் உள்ளத்தில் இயற்கையாகவே இருந்ததா? அல்லது கர்த்தர் தாமே தம்மை ஆராதிக்கும் ஒரே நோக்கத்திற்காக மனிதனைப் படைத்தாரா? இந்தக் கேள்வியை ஆராய்ந்து பார்த்தால் மனிதனுடைய உள்ளத்தில் எப்போதுமே கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்று எண்ணம் இயற்கையாக இருந்ததில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். மனிதனைப் படைத்த கர்த்தர் அவன் தன்னை ஆராதிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகப் படைத்தார் என்பதை வேதம் உணர்த்துகிறது. கர்த்தர் மனிதனுக்குக் கொடுத்த கட்டளைகள் (யாத்திராகமம், லேவியராகமத்தில் காணப்படும் கட்டளைகள்) யாவும் கர்த்தரை அவருடைய வழிப்படி மனிதன் ஆராதிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றன.*

*மனிதன் பாவத்தில் விழுந்தபோது மெய்யான தேவனை ஆராதிக்கும் வல்லமையை இழந்து போனான். இருதயம் பாழாகி கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாதிருந்தான். ஆதாம் பாவத்தில் வீழ்ந்தபின்பு அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து கர்த்தர் துரத்திவிட்டார். கர்த்தரோடிருந்த ஐக்கியத்தையும், அன்னியோன்னியத்தையும் அவன் இழந்து போனான். மறுபடியும் அவனால் சுயமாக கர்த்தரோடு ஐக்கியத்தில் வரமுடியவில்லை. கர்த்தர் அதற்கான ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தபின்பே ஆதாமால் அவரை மறுபடியும் வழிபட முடிந்தது. இதிலிருந்து மனிதன் ஒருபோதுமே கர்த்தரை வழிபடும் எண்ணத்தை சுயமாகக் கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பாவத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் மெய்யான தேவனை வழிபடும் எண்ணமில்லாமலேயே வாழ்ந்து*

கொண்டிருக்கிறான். கர்த்தர் அதற்கான வழியை ஏற்படுத்தினால் தவிர அவனால் அவரை அறிந்து கொள்ள முடியாது. கர்த்தர் ஆதாம் தன்னை மறுபடியும் ஆராதித்து தன் வழிகளைப் பின்பற்றி வாழும் ஒரு வழியை ஏற்படுத்தித் தந்தார் என்று வேதம் போதிக்கின்றது. மனந்திருந்திய ஆதாம் அன்று முதல் கர்த்தரோடு ஐக்கியத்தில் வந்து அன்னியோன்னியமாக வாழ முடிந்தது. மனிதன் கண்டு பிடித்ததல்ல ஆராதனை. மனிதன் தன்னை வழிபடுவதற்காக ஏற்படுத்தித் தந்தது ஆராதனை.

**ஆராதனையைப் பற்றிய உறுதியான வேத விதி**

ஆராதனையை உருவாக்கித் தந்த கர்த்தர் மனிதன் தன்னை எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார். இறை ஆண்மையுள்ள தேவன் ஆராதனையையும் ஆள்கிறவராயிருக்கிறார். மனிதன் தான் நினைத்தபடி தம்மை ஆராதிக்க அவர் அனுமதிக்கவில்லை. பாவமுள்ள மனிதன் தன்னைப் பரிசுத்தமாக ஆராதிக்க வழியில்லை என்பது கர்த்தரின் முடிவு. பழைய ஏற்பாடு முழுவதும் மனிதன் தன்னை ஆராதிக்க கர்த்தர் ஏற்படுத்தித் தந்துள்ள வழிமுறைகளைப் பற்றித் தெளிவாகப் போதிக்கின்றன. அதேநேரம், பாவியான மனிதனும் கர்த்தரின் ஆராதனை வழிகளைப் புறக்கணித்து அவருக்குப் புறம்பான வழிகளில் அவரை ஆராதிக்க முயன்றதையும் பழைய ஏற்பாடு தெளிவாக விளக்குகிறது.

ஆதாமின் இரு பிள்ளைகளும் கர்த்தரை ஆராதிக்க சென்றபோது ஆபேல் மட்டுமே கர்த்தர் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆராதனையை அவருக்கு முன் வழங்கினான். காயின் தனது மனத்துக்குப்பிடித்தமான முறையில் கர்த்தரை ஆராதிக்க முயன்றான். அது பிடிக்காத கர்த்தர் அவனது ஆராதனையை நிராகரித்து ஆபேலின் ஆராதனையை ஏற்றுக் கொண்டார் என்று ஆதியாகமம் 4:3-7 சொல்லுகிறது. வேதத்தின் முதல் புத்தகத்திலே உள்ள இவ்வேதப்பகுதி கர்த்தரை மனிதன் ஒருபோதும் தான் நினைத்தவிதத்தில் ஆராதிக்க முடியாது என்றும், கர்ததரின் வழிப்படியே அவரை ஆராதிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இதுவே ஆராதனையைப் பற்றி வேதம் போதிக்கும் அழுத்தமான போதனை.

ஆபேல் கர்த்தருக்குப் பிடித்தமானமுறையில், அவரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆராதனையை செலுத்தியதற்குக் காரணம் அவன் ஆராதனையைப் பற்றி கர்த்தரின் போதனையை அறிந்திருந்து அதை மதித்து நடந்ததால்தான். ஆபேல் தன் பெற்றோர்களிடம் இருந்து அதை அறிந்து கொண்டிருந்தான். காயின் கர்த்தரை மதிக்காமல், அவர் போதனைகளை அசட்டை செய்து தனது மனத்திற்குப் பிடித்தமான வழியில் கர்த்தரை வழிபட முயன்றான். இதுவே இந்த இரண்டுபேரின் ஆராதனைமுறைகளில் நாம் பார்க்கும் வேறுபாடு. ஆத்துமாக்கள் கர்த்தர் கேட்கும் ஆராதனையை அவருக்கு முன் செலுத்த வேண்டும் என்கிறது வேதம். நமக்கு விருப்பமானதை அவருக்கு முன் செலுத்துவதல்ல மெய்யான ஆத்மீக ஆராதனை; அவர் கேட்பதை, அவரை மதித்து ஆனந்தத்தோடு அளிப்பதற்குப் பெயர்தான் ஆராதனை.

**பழைய ஏற்பாட்டில் ஆராதனை**

நாம் மேலே விளக்கிய இந்த அழுத்தமான ஆராதனையின் தத்துவத்தை பழைய ஏற்பாடு, ஆரம்பம் முதல் கடைசி வரை போதிக்கின்றது. ஆபேல் காயின் ஆகியோரின் உதாரணங்களைப் பார்த்தோம். இவ்வாராதனைத்

தத்துவத்தை விளக்கும் வேறு சில பகுதிகளையும் பழைய ஏற்பாட்டில் இனிப் பார்ப்போம்.

கர்த்தர் இஸ்ரவேலர் தன்னை ஆராதிக்க ஒரு ஆலயத்தைக் கட்டும்படி மோசேக்கு கட்டளையிட்டபோது அவ்வாலயம் சம்பந்தமான அனைத்துக் காரியங்களும் தன்னுடைய வார்த்தையை ஒருசிறிதும் மீறாமல் அமைய வேண்டும் என்று ஆதியாகமம் 25:40 ல் சொல்லியிருப்பதை வாசிக்கலாம். அத்தோடு, ஆலயத்தின் கட்டுமானத்திற்கான அத்தனை பொருட்களையும் தான் கட்டளையிட்டவாறு செய்வதற்காக பெசயேலை அழைத்து அவனுக்கு அறிவும், ஞானமும் உண்டாகும்படி அவனைத் தேவ ஆவியால் நிரப்பினேன் என்று கர்த்தர் சொல்லியிருப்பதை யாத்திராகமம் 31:1-11 வரையிலுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். தனது ஆலய சம்பந்தமான காரியங்களில் மனித சிந்தனையைப் புகுத்தி இஸ்ரவேலர் தாம் நினைத்தபடி எதையும் செய்துவிடக்கூடாது என்பதில் கர்த்தர் மிகக் கவனமாக இருந்திருக்கிறார் என்பதை இப்பகுதிகள் உணர்த்துகின்றன. அவருடைய காரியங்கள் அவருடைய சித்தப்படி நடக்க வேண்டும் என்பதை இப்பகுதிகள் விளக்குகின்றன.

ஆலய ஆராதனையை நடத்துவதற்காக பழைய ஏற்பாட்டில் லேவியர்களின் ஆசாரியப் பணியை ஏற்படுத்தித் தந்த கர்த்தர் ஆலய ஆராதனையை லேவியர்கள் தனது வார்த்தையை மீறாமல் நடத்த வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்திருக்கிறார். தன் சந்நிதியில் தனது வார்த்தைக்கு விரோதமான எந்த ஆராதனை முறையையும் லேவியர்கள் கொணடு வருவதை அவர் சகித்துக் கொள்ளவில்லை. லேவியர்கள் தங்களுடைய மனம் போனபடி எதையும் ஆராதனையில் நுழைக்கும் அதிகாரம் அவர்களுக்கிருக்கவில்லை. ஆரோனின் குமாரனாகிய நாதாபும், அபியுவும் கர்த்தர் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவர் முன் கொண்டுவந்தபோது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது (லேவியராகமம் 10:1-3). கர்த்தர் கட்டளையிட்டுத் தந்திருந்த ஆராதனை முறைகளில் மிக முக்கியமான மாற்றங்களை இந்த இருவரும் செய்ததாலேயே கர்த்தர் அவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். கர்த்தருடைய ஆராதனை முறைகளில் மாற்றத்தைக் கொண்டுவரும் அதிகாரம் ஆத்துமாக்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. இவ்வேதப்பகுதியில் “கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத” என்ற வார்த்தைகள் அவர்களிருவரும் செய்த பெரும்பாவத்தை விளக்குகின்றன. கர்த்தர் கட்டளையிடாததை அவர்கள் செய்தார்கள்; அதன் பலனையும் அனுபவித்தார்கள். அத்தோடு “அந்நிய அக்கினி” என்ற வார்த்தைகளையும் கவனிக்கவும். இவ்வார்த்தைகள் நாதாபும், அபியுவும் கர்த்தர் ஏற்கனவே ஏற்படுத்தித் தந்திருந்த ஆராதனை முறைக்கு மாறானதை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள் என்பதைப் புரிய வைக்கின்றன. எண்ணாகமம் 13:39-40 ஆகிய வசனங்களில் கர்த்தர் சொல்லியிருப்பதை கவனியுங்கள்: “நீங்கள் பின்பற்றிச் சோரம் போகிற உங்கள் இருதயத்துக்கும் உங்கள் கண்களுக்கும் ஏற்க நடவாமல், அதைப்பார்த்து கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு அது உங்களுக்குத் தொங்கலாய் இருக்க வேண்டும். நீங்கள் என் கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் தேவனுக்குப் பரிசுத்தராய் இருக்கும்படி அதைப் பார்ப்பீர்களாக” என்றார் கர்த்தர்.”

*கடைசியாக உபாகமம் 4:2 ஐப் பார்ப்போம். இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் நாட்கள் நெருங்கியபோது, மோசே தான் இறப்பதற்கு முன்பாக அவர்களுக்கு கடைசி தடவையாக அறிவுரைகளை அளித்தார். தேவனுடைய வார்த்தைகளுடன் எதையும் கூட்டவோ அல்லது அவற்றில் இருந்து எதையும் விலக்கவோ கூடாது என்று அவர்களை எச்சரித்தார். மோசேயின் இவ்வார்த்தைகள் கர்த்தர் இஸ்ரவேலருக்கு இரண்டாம் தடவையாக கொடுக்கப்போகும் நியாயப்பிரமாணங்களைக் குறித்ததாகவே இருந்தன. ஆத்துமாக்கள் எந்த வகையில் கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்று விளக்கும் உபாகமம் 12:29-32 வரையிலான வசனங்கள் இங்கு நாம் வாசிக்கும் வார்த்தைகளை அப்படியே ஒத்திருக்கின்றன. முக்கியமாக 32 வசனத்தில் கர்த்தர் நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்று குறைக்கவும் வேண்டாம். என்றார்.*

*மேலே நாம் பார்த்த வசனங்களில் மோசே கர்த்தர் தடைசெய்துள்ளவற்றை பின்பற்றாதீர்கள் என்று மட்டும் சொல்லவில்லை. கர்த்தருக்கு விரோதமாக வேறு தேவர்களை ஆராதிக்காதீர்கள் என்று சொல்லியதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. ஒட்டுமொத்தமாக கர்த்தருடைய வார்த்தையோடு எதையும் கூட்டவும் வேண்டாம்; அதிலிருந்து எதையும் குறைக்கவும் வேண்டாம் என்று சொன்னார். கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருக்கின்ற ஆராதனை முறைகளுடன் எதையும் கூட்டவும் கூடாது; அதிலிருந்து எதையும் குறைக்கவும் கூடாது என்பது இதற்குப் பொருள். சாமுவேல் வால்டிரன் எனும் சீர்திருத்த இறையியல் அறிஞர் இதைப்பற்றி விளக்கும்போது, "இந்த உலகத்து மக்கள் எந்த முறையில் ஆராதனை செய்கிறார்கள் என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து அந்தமுறையில் தங்களுடைய ஆராதனை முறைகளை மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு பெரும் ஆபத்தான சோதனை தேவமக்களுக்கு இருப்பதாகவும், அத்தகைய தவறான மனப்போக்கு கர்த்தருடைய மக்களுக்கு ஒருபோதும் இருக்கக்கூடாது" என்றும் சொல்கிறார்.*

*உபாகமம் 12:29-32 ஆகிய வசனங்களின் மூலம் கர்த்தர் ஆராதனைக்காக மட்டுமல்லாமல் இஸ்ரவேலர் தம்மை ஆராதித்து எப்படி வாழ வேண்டும் என்பதற்கான எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொதுவான கட்டளையைத் தந்தார். இதற்குள் சபத்து நாள் அனுசரிப்பும் அடங்கும். பழைய ஏற்பாட்டு மக்களின் ஆராதனையின் முக்கிய பகுதியாக சபத்து நாள் ஆராதனையும் இருந்தது. லேவியராகமம் 23:3, "ஏழாம் நாள் பரிசுத்த சபை கூடுதலான ஓய்வுநாள்" என்று ஓய்வுநாளை வர்ணிப்பதைக் காண்கிறோம். இஸ்ரவேலர் எங்கே சபைகூடி வந்தார்கள்? கானான் தேசத்தை அடைந்தபின் இஸ்ரவேலர் அத்தேசத்தின் பல பகுதிகளிலும் போய் வாழ்ந்தார்கள். அவர்களால் ஒரே இடத்தில் கூடிவரமுடியாத நிலை இருந்தது. இதற்காக அவர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்காமல் இருக்கவில்லை, இருக்கவும் கூடாது. இஸ்ரவேலர் எங்கெங்கு போய் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் ஓய்வுநாளை சபையாகக் கூடி தவறாது அனுசரித்து வந்தார்கள். லேவியராமகம் 23:3, ல் உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் (வாழும் இடங்களிலெல்லாம்) கர்த்தருக்கென்று ஓய்ந்திருங்கள் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்.*

*உள்ளூரில் ஓய்வு நாளில் கூடி வந்து கர்த்தரை ஆராதித்த இந்த ஆராதனை முறையே பின்பு ஜெப ஆலய வழிபாட்டு முறையை யூதர்கள் மத்தியில்*

*ஏற்படுத்தியது. பாபிலோனியாவில் யூதர்கள் இருந்த காலத்தில் ஆலய வழிபாட்டு வசதி அவர்களுக்கு இல்லாதிருந்ததால் ஜெப ஆலய வழிபாட்டு முறை ஏற்பட்டது. இது வேதத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழிபாட்டு முறை. அதனால்தான் இயேசு தான் வாழ்ந்த காலத்தில் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திற்குப் போய் ஆராதனை செய்ததை புதிய ஏற்பாட்டில் (லூக்கா 4:16) வாசிக்கிறோம். இயேசு ஜெப ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு அதற்கு அங்கீகாரமளித்து இது மனித சிந்தனையில் உருவான வழிபாட்டுமுறையல்ல என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் யூதர் காலத்தில் காணப்பட்ட ஜெப ஆலய வழிபாட்டில் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டு வேதபோதனை அளிக்கப்பட்டது. பிரசங்கம் முக்கிய இடத்தைப் பெற்றது. அத்தோடு ஆராதனையில் ஈடுபட்டவர்கள் சங்கீதம் பாடி ஜெபத்தில் ஈடுபட்டனர். இறுதியில் ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவுற்றது.*

**புதிய ஏற்பாட்டில் ஆராதனை**

*பழைய ஏற்பாட்டை விட்டு நாம் புதிய ஏற்பாட்டிற்கு வந்தால் அங்கும் ஆராதனையைப் பொறுத்தவரையில் பழைய ஏற்பாட்டில் கர்த்தர் ஏற்படுத்திக் கொடுத்திருந்த அதே ஆராதனை விதியை நாம் பின்பற்ற வேண்டும் என்ற போதனையையே பார்க்க முடிகின்றது. மாற்கு 7:5:13 வசனங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம்.*

*இவ்வேதப்பகுதி கைகழுவாததற்காக இயேசுவின் சீடர்களை பரிசேயர்கள் குறைகூறுவதை சுட்டிக் காட்டுகின்றது. சுகாதாரத்திற்காக கைகழுவ வேண்டும் என்று பரிசேயர்கள் அதை வற்புறுத்தவில்லை. கைகழுவுதலை ஒரு சடங்காக பரிசேயர் யூதர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தனர் (வசனம் 3). பாரம்பரியமாக இருந்து வந்த இந்த சடங்கைச் செய்ய வேண்டியது யூதர்களின் கடமை-யாயிருந்தது. சீடர்கள் அதைத் தவிர்த்ததால் பரிசேயர்கள் அவர்களில் குறை கண்டனர். இயேசு சீடர்களைக் கண்டிக்காமல் பரிசேயர்களைக் கண்டித்தார். இயேசு பரிசேயர்களின் தவறுகளை சுட்டிக்காட்டுவதை கவனித்துப் பாருங்கள்: (1) பரிசேயர்கள் உதடுகளினால் கனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடில்லை. (2) மனுஷருடைய கற்பனைகளைப் போதித்து வீணான ஆராதனை செய்கிறார்கள். வெறும் பாரம்பரியங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (3) தேவனுடைய ஆராதனை பற்றிய கட்டளைகளை தள்ளிவைத்தார்கள். இயேசு பரிசேயர்களின் பாரம்பரியங்களை ஒட்டுமொத்தமாக நிராகரித்தார். வேதபோதனைகளோடு அவற்றிற்கு சமமான இடம் இல்லை என்பதை அடித்துச் சொன்னார். சீடர்கள் மேல் எந்தத் தவறும் இல்லை என்பதை விளக்கினார்.*

*பரிசேயர்கள் செய்த முதலாவது பெரும் தவறு வேதத்தை நிராகரித்தது. இரண்டாவது, அதற்கு இணையான இடத்தைக் கொடுத்து பாரம்பரியங்களை அதோடு இணைத்துக் கொண்டது. கடைசியாக பாரம்பரியங்களுக்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்து வேதத்தை தாழ்ந்த நிலைக்குத் தள்ளியது. இவ்வாறு செய்ததன் மூலம் கர்த்தருடைய வார்த்தையின் அதிகாரத்தை பரிசேயர்கள் அழித்தார்கள். ஜே. சீ. ரைல் என்ற போதகர் இதை விளக்கியபோது, “மனித சிந்தனைகளை ஏற்று, வேதத்தோடு அதைச் சேர்ப்பதால் சத்தியத்தை நிராகரிப்பதற்கு இணையான காரியத்தை மனிதன் சுலபமாக செய்கிறான்” என்றார். இதையே பவுலும் கொலோசெயர் 2:20-23 ஆகிய வசனங்களில் சொல்கிறார். இதையெல்லாம் “சுய இஷ்டமான ஆராதனை” என்று பவுல்*

வர்ணிக்கிறார். சுய இஷ்டமான ஆராதனைக்கு, வேதபூர்வமான ஆராதனைக்கு இணையான அதிகாரம் இல்லை. தேவனால் ஏற்படுத்தித் தரப்படாத ஆராதனை தடை செய்யப்பட்ட ஆராதனை முறை என்ற வேதவிதியை கொலோசெயரில் பவுலின் வார்த்தைகள் எதிரொலிக்கின்றன. கொலோசெயர் 2:23, மனித சிந்தனையில் உருவாகும் ஆராதனை முறைகளை கடுமையாகக் கண்டனம் செய்கிறது.

கர்த்தரின் வேதம் இத்தனை தெளிவாக ஆராதனையைப் பற்றி விளக்கும்போது கர்த்தரை ஆராதிப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் இன்று வேதத்தை உதறித்தள்ளிவிட்டு பிசாசின் பாதையில் தங்களுக்கு இஷ்டமான ஆராதனையை கர்த்தர் முன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் ஆராதனை முறைகளும், கிறிஸ்தவ ஆராதனை என்ற பெயரில் இன்று நடந்து கொண்டிருக்கும் அநேக கூத்துக்களும் வேதத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. தனக்கு இஷ்டமானதை கர்த்தருக்கு முன் வைக்கப் பார்க்கிறவன் மெய்யான விசுவாசியாக இருக்க முடியாது. தேவ பயத்தோடு கர்த்தர் கேட்பதை அவர் முன் வைக்கப் பார்க்கிறவனே மெய்யான விசுவாசி.

நாம் இத்தனை நேரமும் சபை கூடி வந்து ஆத்துமாக்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய பொது ஆராதனையைக் குறித்தே பேசி வருகிறோம் என்பது வாசகர்களுக்கு தெரிந்திருக்கும். அந்தப் பொது ஆராதனைக்குள் எந்த அந்நிய அக்கினியையும் எவரும் திணிக்கக்கூடாது. வேதம் தெளிவாகப் போதிக்கும் ஆராதனையில் இருக்க வேண்டிய அம்சங்கள் மட்டுமே ஆராதனையை அலங்கரிக்க வேண்டும். பெண்கள் பிரசங்கம் செய்வதும், பெண்கள் வேதத்தை ஆராதனை நேரத்தில் பலர் முன்னால் வாசிப்பதும், தனி நபர்களின் இசைக்கச்சேரியும், பாடல்களைப் பாடும் நேரத்தில் கைதட்டுவதும், தாளம் போடுவதும், ஸ்தோத்திரம் சொல்கிறோம் என்ற பெயரில் அனைவரும் சேர்ந்து பொருளற்ற சொற்களால் கூக்குரலிடுவதும் ஆராதனைக்குரிய செயல்களல்ல. இவை மனித ஞானத்தின் பிரதிபலிப்புகள். கர்ததருடைய சிந்தையில் தோன்றிய அம்சங்களல்ல.

பாவம் உலகத்தில் தோன்றிய காலம் முதல் கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்து வரும் போராட்டமே இன்று ஆராதனையைப் பொறுத்தவரையிலும் நடந்து வருகின்றது. கர்த்தரின் வார்த்தைக்கு எதிரான ஆராதனையை கர்த்தருக்கு முன் வழங்கி தன் உள்ளத்திற்குக் குளிரூட்டிக் கொள்ள மனிதன் தொடர்ந்து போராடி வருகிறான். கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையிலான ஆராதனையா? நம் மனம் போன போக்கில் நடக்கும் ஆராதனையா? எது கர்த்தர் ஏற்றுக் கொள்ளும் ஆராதனை? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டிய நிலைக்கு இன்று ஆத்துமாக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பிரசங்கி 5:1-2 சொல்லுதைக் கவனியுங்கள்: "நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதைப்போலப் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். நாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால், உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக." சாலமோனின் இப்பொருள் பொதிந்த வார்த்தைகள் எக்காலத்துக்கும் பொருத்தமானவை.

# வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி - The Regulative Principle of Worship

*நாம் இதுவரை இவ்விதழின் முதலாவது ஆக்கத்தில் பார்த்த வேதம் போதிக்கும் ஆராதனை விதிக்கு வரலாற்றில் திருச்சபைத் தலைவர்கள் முறையாக ஒரு பெயரைக் கொடுத்தார்கள். அதற்கு வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஆராதனை விதி என்று பெயர். இதனை ஆங்கிலத்தில்* The Regulative Principle of Worship *என்று அழைப்பார்கள். இது இப்படி ஒரு பெயரைப் பெற்று அழைக்கப்பட்டு பிரபலமானதற்கு வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. சீர்திருத்தவாத காலத்திற்குப் பின்பு பதினேழாம் நூற்றாண்டில் மறுபடியும் திருச்சபையில் ஒரு ஆபத்து தலைதூக்கியது. இவ்வாபத்து முக்கியமாக ஆராதனையையும், போதக ஊழியத்தையும் பாதிப்பதாக இருந்தது. ஒரு விதத்தில் மறுபடியும் ரோமன் கத்தோலிக்க சடங்கு முறைகளை ஆராதனையில் அறிமுகப்படுத்தும் ஆபத்தாகவும் காணப்பட்டது. இவ்வாபத்து தோன்றிய வரலாற்றை முதலில் பார்ப்போம்.*

*பதினேழாம் நூற்றாண்டில் தூய்மைவாதிகள் என்று அழைக்கப்பட்ட பியூரிட்டன்களின் காலத்தில் இங்கிலாந்து திருச்சபையில் ஜோன் ஹூப்பர் என்ற ஒரு மனிதர் இருந்தார். இவரது திறமை, பக்தி விருத்தி என்பவற்றைப் பார்த்த திருச்சபை இவருக்கு சபைப் போதக ஊழியத்திற்கான நியமனத்தை அளிக்க விரும்பியது. அதைக் கேள்விப்பட்ட ஹூப்பருக்கும் அதை எற்றுக் கொள்வதில் எந்த தயக்கமும் இருக்கவில்லை. இருந்தபோதும் அவ்வூழிய நியமனத்தோடு வந்த சில நிபந்தனைகளைக் குறித்து ஹூப்பர் சந்தேங்கொண்டார். போதக ஊழியத்தைச் செய்யும்போது அதற்குரிய அங்கிகள் மற்றும் சடங்காச்சாரியங்களையும் ஹூப்பர் பின்பற்ற வேண்டும் என்று இங்கிலாந்து சபை எதிர்பார்த்தது. சீர்திருத்தவாத போதனைகளால் வேத ஞானத்தை அடைந்து அதை அன்றாடம் ஆராய்ந்து வந்த ஹூப்பர் போதக ஊழியத்திற்குவருபவர்கள் இவ்வாறு அங்கி அணிய வேண்டும் என்றோ அல்லது சடங்காச்சாரியங்களைப் பின்பற்ற வேண்டும் என்றோ வேதம் எங்கும் போதிக்கவில்லை என்பதை உணர்ந்து அவற்றை செய்ய மறுத்தார். கர்த்தர் கட்டளையிடாதவற்றை செய்வது தவறு என்றும் அவர் கட்டளையிடாதவற்றை ஊழியத்திலும், ஆராதனையிலும் இணைப்பது பெருந்தவறு என்றும் வாதாடினார். ஆனால், இங்கிலாந்து திருச்சபை அவரது வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல், கர்த்தர் அவற்றை செய்யும்படிச் சொல்லாவிட்டாலும் செய்யக்கூடாது என்று எங்கும் சொல்லவில்லையே என்று மறுவாதம் செய்து ஹூப்பர் இவற்றிற்கு சம்மதித்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தியது. ஹூப்பர் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இதனால் கோபமடைந்த திருச்சபைத் தலைவர்கள் ஹூப்பரைத் தீயில் எரித்தனர்.*

*இவ்வாறாக எழுந்த அங்கி பற்றிய பிரச்சினை பதினேழாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளான பியூரிட்டன்களை (தூய்மைவாதிகளை) பெரிதும் சிந்திக்க வைத்தது. தமது முன்னோர் இரத்தம் சிந்திப் பெற்ற மத சுதந்திரத்தை*

மறுபடியும் இழந்து போக்கூடாது என்று உணர்ந்து சபை ஆராதனையைப் பாதுகாக்கவும், ரோமன் கத்தோலிக்க சடங்காச்சாரியங்கள் மறுபடியும் புகுந்து ஆராதனையையும், ஊழியத்தையும் பாழடித்துவிடாமலிருக்கவும் ஆராதனைபற்றிய வேதபோதனைகளைத் தெளிவாக எழுதிவைத்து சபையைக் காக்கப் பாடுபட்டார்கள். இவ்வேத விதிகளே The Regulative Principle of Worship என்று அழைக்கப்படுகின்றது. பிசப்புக்கான அங்கியில் ஆரம்பித்து திருச்சபையை அங்காடியாக மாற்றும் முயற்சிகள் உலகில் தொடர்ந்திருக்கும் என்பதை உணர்ந்த பியூரிட்டன் பெரியோர்கள் இவ்விதிகளை விசுவாச அறிக்கைகளில் தெளிவாக எழுதி வைத்தனர். சீர்திருத்தவாதிகளின் வழியிலும், பியூரிட்டன் பெரியோர்களின் வழியிலும் வந்த 1689 ஆம் ஆண்டு விசுவாச அறிக்கை 22 ஆம் அதிகாரத்தில் "ஆராதனையும், ஓய்வு நாளும்" என்ற தலைப்பில் இவ்விதியைத் தெளிவாக விளக்குகிறது. இவ்வதிகாரத்தின் முதல் பாரா இவ்விதி பற்றி பின்வருமாறு விளக்குகிறது:

"அனைத்தின் மீதும் ஆளுகையையும், இறை ஆண்மையையும் கொண்ட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று உள்ளுணர்வு காட்டுகின்றது. அவர் நீதியானவரும், நல்லவருமாக இருந்து எல்லோருக்கும் நல்லதையே செய்கிறார். ஆகவே, மனிதர்கள் தங்கள் முழு இருதயத்தோடும், ஆவியோடும், வல்லமையோடும் அவருக்குப் பயந்து, அவரில் அன்பு கூர்ந்து, அவரைப்போற்றி, தொழுது, அவரில் நம்பிக்கை வைத்து அவருக்குப் பணி செய்ய வேண்டும். ஆனால், ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரே வழிபாட்டு முறையை தனது சித்தத்திற்கிணங்க கடவுளே ஏற்படுத்தியுள்ளார். ஆகவே, நமது வழிபாட்டு முறைகள் அவரது வெளிப்படுத்தப்பட்டுள்ள சித்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவரை மனிதனால் உருவாக்கப்பட்ட வழிபாட்டு முறைகள் மூலமாகவோ அல்லது பிசாசின் வழிநடத்தலின்படியோ வழிபட முடியாது. கடவுளுடைய வார்த்தையின் மூலம் ஆணையிட்டுத் தரப்படாத அனைத்து வழிபாட்டு முறைகளும், கண்களுக்குப் புலனாகின்ற கடவுளைப்பற்றிய அடையாளங்களும் (உதாரணம்: சிலைகள், கடவுளைப்பற்றிய படங்கள் போன்றவை) தெளிவாகத் தடைசெய்யப்பட்டுள்ளன."

இதுவே வேதம் போதிக்கும் ஆராதனை விதியாகும். இவ்விதி இரண்டு முக்கிய சத்தியங்களைப் போதிப்பதைப் பார்க்கிறோம் (1) கர்த்தரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனையை அவரே ஏற்படுத்தியுள்ளார் என்பது முதலாவது. அதாவது கர்த்தரை நாம் ஆராதிக்க வேண்டிய விதத்தை வேதம் தெளிவாகப் போதிக்கிறது. (2) அவரது வார்த்தையின் மூலம் ஆணையிட்டுத் தரப்படாத அனைத்து வழிபாட்டு முறைகளும் வேதத்தால் தடைசெய்யப்பட்டுள்ளன என்பது இரண்டாவது. இவ்விதமாக இவ்விதி விளக்கப்பட்டதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. தூய்மைவாதியான ஹூப்பர் விஷேட அங்கி அணிய முடியாதென்று மறுத்தபோது இங்கிலாந்து சபைத் தலைவர்கள் சொன்ன வரட்டு வாதத்தை மீண்டும் எண்ணிப் பார்ப்போம். அவர்கள், வேதம் போதகர்கள் விஷேட அங்கி அணியக்கூடாதென்று எங்கும் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். அதனால் வேதம் சொல்லாததை செய்வதில் தவறில்லை என்பது அவர்களுடைய வாதமாக இருந்தது. வேதம் விஷேட அங்கி அணியக்கூடாதென்று சொல்லியிருந்தால் அணியக்கூடாதுதான், ஆனால் அது அப்படி சொல்லாததால் சபை அதைச் செய்வதில் தவறில்லை என்றும் நீங்கள் அதற்கு உடன்பட மறுப்பது

தவறு என்றும் சபை வாதாடியது. இவ்வாதத்திற்கு Normative Principle of Worship என்று பெயர். இந்தவிதத்திலேயே இங்கிலாந்து திருச்சபை சிந்தித்தது.

இவ்வாதத்தைப் பார்த்த துய்மைவாதிகள் இதிலிருந்த தவறான சிந்தனையையும், அதனால் திருச்சபைக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் உணர்ந்தனர். அவர்கள் இந்த ஆபத்தான வாதத்திற்கெதிராக வேதம் உண்மையில் எதைப்போதிக்கிறது என்பதை விளக்கினர். தூய்மைவாதிகள், வேதம் சொல்வதை மட்டுமே நாம் செய்யவேண்டும் என்றும், வேதம் சொல்லாததை நாம் ஒருபோதும் செய்ய நினைக்கக்கூடாது என்றும் விளக்கினார்கள். வேதம் செய்யச் சொல்வது மட்டுமே ஆராதனையில் காணப்பட வேண்டும் என்பது அவர்களுடைய விளக்கமாக இருந்தது. அவற்றை செய்யாமல் இருப்பதும், அவற்றை மாற்றி அமைப்பதும், அவற்றோடு வேறு எதையும் சேர்ப்பதும் கர்த்தருக்கு விரோதமானது என்று போதித்தனர். அதுமட்டுமல்லாமல் கர்த்தர் வேதத்தில் சொல்லாத எதையும் நாம் ஆராதனையில் செய்வதும் தவறு என்று போதித்தனர். கர்த்தர் சொல்லாததை நாம் ஆராதனையில் செய்ய நினைத்துப் பார்ப்பது தவறு என்று அவர்கள் போதித்தனர். நாதாபும், அபியுவும் கர்த்தர் சொல்லாததை அவர் முன்னிலையில் கொண்டுவந்தார்கள். அதனால் அழிந்து போனார்கள். தூய்மைவாதிகளும், இங்கிலாந்து திருச்சபையும் போதித்த இரு துருவங்களான இவ்விரு விதிகளையும் பின்வரும் வரைபடத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

### இங்கிலாந்து திருச்சபையின்
### Normative Principle of Worsip

| <u>மெய்யான ஆராதனை</u> | <u>பொய்யான ஆராதனை</u> |
|---|---|
| **வேதத்தில் கட்டளையிடப்பட்டவற்றை செய்ய வேண்டும், + அத்தோடு, வேதத்தில் காணப்படாதவற்றையும், வேதத்தால் தடைசெய்யப்படாதவற்றையும் ஆராதனையிலும், ஊழியத்திலும் சேர்த்துக் கொள்ளலாம்.** | **வேதத்தில் வெளிப்படையாகவும், தெளிவாகவும் தடைசெய்யப்பட்டவற்றை மட்டும் செய்வதே கர்த்தருக்கு விரோதமான ஆராதனை.** |

### தூய்மைவாதிகளின்
### Regulative Principle of Worsip

| <u>மெய்யான ஆராதனை</u> | <u>பொய்யான ஆராதனை</u> |
|---|---|
| **வேதத்தில் கட்டளையிடப்பட்டவை மட்டுமே ஆராதனையிலும் ஊழியத்திலும் காணப்பட வேண்டும்.** | **வேதத்தில் கட்டளையிட்டுத்தரப்படாத எதையும் செய்வது பொய்யான ஆராதனை.** |

இரு துருவங்களான இவ்விரு விதிகளும் நாம் இதுவரை விளக்கியவற்றை படம்பிடித்துக் காட்டுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி வேதம் போதிக்கும் ஆராதனை விதியை விளக்குவதோடு மட்டும் நின்றுவிடாது மெய்யான ஆராதனையில் இருக்க வேண்டிய அம்சங்களையும் விளக்குகிறது. தூய்மைவாதிகள் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இன்று இருக்க வேண்டிய வேதம் போதிக்கும் அம்சங்களைப் பற்றியும் விளக்கியுள்ளனர். இங்கிலாந்து திருச்சபை கர்த்தரால் தடைசெய்யப்படாத எதையும் ஆராதனையில் சேர்த்துக் கொள்ளலாம் என்று போதிக்க, தூய்மைவாதிகள் கர்த்தர் தன் வார்த்தையில் விளக்கியிருக்கும் ஆராதனையில் இடம்பெற வேண்டிய அம்சங்களை மட்டுமே எப்போதும் ஆராதனையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று போதித்தனர். 1689 ம் ஆண்டு விசுவாச அறிக்கையின் 22 ம் அதிகாரத்தின் 4 ம் பாராவும், 5 ம் பாராவும் பின்வருமாறு விளக்குகின்றன:

“நீதியான காரியங்களுக்கும், இப்போது வாழ்பவர்களுக்கும், இனிப்பிறக்கப்போகும் எல்லாவித மனிதர்களுக்கும் ஜெபம் செய்யப்படல் வேண்டும்.” (1 தீமோத்தேயு 2:1, 2).

“வேதாகமத்தை வாசிப்பதும், கடவுளின் வார்த்தையை அருளுரை செய்வதும், அதைக் கேட்பதும், சங்கீதங்களாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனை பண்ணுவதும், திருமுழுக்கையும், திருவிருந்தையும் கடைப்பிடித்தல் ஆகிய தெய்வீக வழிபாட்டு முறைகள் கீழ்ப்படிவோடும், அறிவுபூர்வமாகவும், விசுவாசத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படல் வேண்டும். அத்தோடு சிறப்பான காலங்களில் பயபக்தியோடு கூடிய தாழ்மையுடன் உணவு மறுப்பும் (உபவாசம்), நன்றி நவிலலும் பரிசுத்தத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படல் வேண்டும்.” (யாத்திராகமம் 15:1-19; எஸ்தர் 4:16; சங்கீதம் 107; யோவேல் 2:12; மத்தேயு 28:19, 20; லூக்கா 8:18; 1 கொரிந்தியர் 11:26; எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16; 1 தீமோத்தேயு 4:13; 2 தீமோத்தேயு 4:2.)

இப்பகுதியின் மூலம் ஆராதனையில் இருக்க வேண்டிய, வேதம் தெளிவாகப் போதிக்கும் அம்சங்களை அறிந்து கொள்ள முடிகிறது. (1) ஜெபம் (2) வேத வாசிப்பு (3) அருளுரை (4) சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும் ஞானப்பாடல்களையும் பாடுதல் (5) திருமுழுக்கு, திருவிருந்து ஆகியவையே ஆராதனையில் காணப்பட வேண்டும். இவற்றோடு காணிக்கை எடுத்தலையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றைத் தவிர பொது ஆராதனையில் வேறு எதற்கும் இடமில்லை என்றார்கள் தூய்மைவாதிகள். இவை வேதத்தால் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், வேதம் அனுமதிக்காதவற்றை நாம் ஆராதனையில் சேர்ப்பது கர்த்தருக்கு விரோதமான அந்நிய அக்கினியை அவர் முன் வைப்பதாகும் என்றார்கள் சீர்திருத்தப் பெரியோர்கள். ஆராதனை எத்தேசத்தின் மூலையில், எந்த ஜாதி, இன மக்கள் மத்தியில் நடந்தாலும் வேதம் போதிக்கும் இவ்வம்சங்கள் காணப்பட வேண்டும் என்றும் இவற்றைத் தவிர வேறு எதையும் சேர்க்கக்கூடாது என்கிறது வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி. இன்று உலகெங்கும் இருக்கும் மெய்ச்சபைகள் வேதம் போதிக்கும் இவ்வறையறுக்கப்பட்ட ஆராதனை முறையைப் பின்பற்றியே ஆராதனையை நடத்தி வருகின்றனர். கர்த்தருடைய ஆராதனையில் அவருடைய வேதம் மட்டுமே அதிகாரம் செலுத்த வேண்டும், மனித ஞானத்திற்கும், நமக்கு இஷ்டமான ஆராதனைக்கும் அங்கு இடமில்லை என்பது சீர்த்திருத்தவாத ஆராதனைத் தத்துவம்.

# ஜோன் விக்ளிப்

## சீர்திருத்தவாதத்தின் விடிவெள்ளி

பதினாறாம் நூற்றாண்டில் சீர்திருத்தவாதம் ஜேர்மனியில் ஆரம்பித்து காட்டாறுபோல் சீறிப்பாய்ந்து பரவுவதற்கு முன்னர் அதற்கான வித்தை விதைக்க கர்த்தர் பயன்படுத்திய பல நல்ல மனிதர்களை சபை வரலாற்றில் சந்திக்கிறோம். இந்தவகையில் சீர்திருத்தவாதத்தின் விடி வெள்ளி என்று அழைக்கப்பட்ட மனிதர்தான் இங்கிலாந்தின் ஜோன் விக்ளிப் (John Wycliffe). விக்ளிப்பின் ஆரம்பகால வாழ்க்கைபற்றிய விபரங்கள் அதிகம் இல்லை. அவருடைய பெற்றோரைப் பற்றிய தகவல்களோ அல்லது அவர் கர்த்தரை அறிந்து கொண்டவிதம் பற்றிய விபரங்களோ கிடைக்கவில்லை. இங்கிலாந்தின் யோர்க்ஷயர் பகுதியில் அவர் பிறந்ததாக மட்டும் வரலாறு சொல்கிறது.

1356 இல் ஆக்ஸ்பர்டின் மேர்டான் கல்லூரியின் பட்டதாரி மாணவராக முதலில் ஜோன் விக்ளிப்பை நாம் சந்திக்கிறோம். அதன்பின் 1360 அவர் முதுநிலை பட்டத்தை பேலியல் என்ற இடத்தில் பெற்றார். இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது விக்ளிப் தனது கல்லூரி வாழ்க்கையை பதினான்காம் வயதில் ஆரம்பித்திருக்க வேண்டும். 1372 ஆம் ஆண்டில் விக்ளிப் இறையியலில் அறிவர் பட்டத்தைப் பெற்றார். இக்காலத்தில் விக்ளிப் ரோமன் கத்தோலிக்க போதனைகளில் அதிக ஞானத்தைப் பெற்றிருந்தார். வாதத்திறத்தையும் கொண்டிருந்தார். ஐரோப்பா முழுவதிலும் சிறந்த அறிஞர் என்றும் அறியப்பட்டிருந்தார். கர்த்தர் தன்னுடைய ஊழியத்திற்கு ஒரு திறமைசாலியைத் தெரிவு செய்திருந்தபோதும், விக்ளிப் இக்காலங்களில் ரொமன் கத்தோலிக்கப் போதனைகளிலேயே மூழ்கிப்போயிருந்தார்.

இருந்தபோதும், விக்ளிப் தத்துவ ரீதியில் எதையும் ஆராய்ந்து வாதப்பிரதாபம் செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார். இத்தகைய வாதப்பிரதாபங்கள் கற்றறிந்தவர்கள் மத்தியில் அக்காலத்தில் நடந்தது. இது பொதுமக்களையும் தனது நிலையையும் பாதிக்காததால் ரோமன் கத்தோலிக்க மதம் இதற்கு அனுமதியளித்திருந்தது. வழமையான பாரம்பரிய செயல் முறைகளில் ஆர்வம் காட்டாத விக்ளிப் அவற்றின் தவறுகளை எடுத்துக்காட்டி வாதம் செய்ய ஆரம்பித்தார். இதற்கு முன் இருந்தவர்கள் இவ்விதமாகப் பேசியிருந்தபோதும், ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகளுக்கும், அதன் அதிகாரத்திற்கும் எதிரான விக்ளிப்பின் பேச்சு சீர்திருத்தவாதத்திற்கு அடித்தளம் இட்டது. ஆரம்பத்தில் எந்தவித ஆத்மீகத்தொடர்பு இல்லாமலும், உலகப்பிரமான-மானதுமாக இருந்த போதனையில் ஈடுபட்டிருந்த விக்ளிப் பின்னால் ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடித்தளத்தை அது இருந்த இடத்திலேயே தகர்க்கக்கூடிய ஆங்கில அறிவாளிகளில் சிறந்ததொரு மனிதராக உருவானார்.

### கத்தோலிக்க மதத்திற்கு எதிர்ப்பு

1374 ல் விக்ளிப் தனது நாட்டின் சார்பாக போப்பின் அதிகாரிகளை ஒரு கூட்டத்தில் சந்தித்தார். அரசருக்கு அது பெருந்திருப்தி அளித்தது. அதே ஆண்டில் அரசரால் அவருக்கு உயர் பதவியும் அளிக்கப்பட்டது. அரசரின் அபிமானத்தை விக்ளிப் பெற்றிருந்தபோதும் குருமார்களும், சக ஊழியர்களும்

அவரை மிகவும் வெறுத்தனர். அவரைத் தொலைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர். விக்ளிப் குருமார்கள் பிச்சை எடுப்பதையும், அவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் கடுமையாகத் தாக்கினார். சிலைகளை வணங்குவதை அவர் முட்டாள்தனம் என்று வர்ணித்தார். பாவமன்னிப்பு பத்திரம் விற்பதைக் கண்டித்தார். இறந்தவர்களுக்காக மாஸ் வைப்பதையும், யாத்திரை போவதையும் சாடினார். போப்பை அகங்காரம் பிடித்த அந்திக் கிறிஸ்து என்று வர்ணித்தார்.

இங்கிலாந்து சபை இதையெல்லாம் பார்த்துத் திகைத்து தங்களை வந்து பார்க்கும்படி விக்ளிப்புக்குக் கட்டளையிட்டனர். அப்போது அவரது எதிரிகள் அவரைக் கடுமையாகத் தாக்கியபோதும், அரசரின் மகன் அவருக்கு ஆதரவாகப் பேசி எதிரிகளிடம் இருந்து அவரைக் காத்தான். அதே ஆண்டில் போப் விக்ளிப்புக்கு எதிராக ஐந்து ஆணைகளைப் பிறப்பித்தார். விக்ளிப்பின் எழுத்துக்களுக்கெதிராக பத்தொன்பது குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தார். ஆனால், விக்ளிப்பின் வாழ்க்கையில் ஏற்பட பெருந்துன்பம் நான்கு வருடங்களுக்கு பின்பு வந்தது. விக்ளிப் ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனையான யூகரிஸ்டின்போது ரொட்டியும், இரசமும் கிறிஸ்துவின் சரீரமாகவும், திரு இரத்தமாகவும் உரு மாற்றம் பெறுகின்றது என்ற போதனையைக் கடுமையாகத் தாக்கினார். விக்ளிப்பின் எதிரிகள் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்க, அரசனும் விக்ளிப்பிற்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டான். ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழக பேராசிரியர்களும், ஏனைய கல்லூரிப் பேராசியர்களும் விக்ளிப்பிற்கு எதிராகப் புறப்பட்டனர். ஆனால், பொதுமக்களின் பலமான ஆதரவு விக்ளிப்பிற்கு இருந்ததால் அவருக்கு துன்பம் விளைவிக்க அவருடைய எதிரிகள் தயங்கினர்.

விக்ளிப் சிறிது பொறுமையாக இருந்து செயல்பட்டிருந்தால் திருச்சபையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால், அவர் ஒரே அடியில் ரோமன் கத்தோலிக்க போதனைகளை ஒழித்துக் கட்டி மெய்சுவிசேஷத்தை நிலை நாட்ட விரும்பினார். காலம் செல்லச் செல்ல சீர்திருத்தத்தை ஒரே நாளிளோ அல்லது பத்துவருடங்களிலோ கொண்டு வந்துவிட முடியாது என்பதையும், அதற்கு நெடுங்கால உழைப்பும் அதிக பொறுமையும் தேவை என்பதை விக்ளிப் உணர்ந்தார். 1381 ல் நிகழ்ந்த விவசாயிகளின் எதிர்ப்பியக்கத்திற்கு விக்ளிப்பும், அவருடைய சீடர்களும்தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது விக்ளிப்பின் நிலமையை மேலும் சங்கடத்திற்குள்ளாக்கியது. ஆனால் இதற்கும் விக்ளிப்பிற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. விக்ளிப் தனது சீர்திருத்தப் போக்கைக் கைவிட வேண்டும் என்று அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. விக்ளிப் அதற்கு செவிசாய்க்காமல் இன்னுமொரு விசுவாச அறிக்கையை வெளியிட்டார்.

இந்நிலமையில் இங்கிலாந்தின் பாராளுமன்றம் கென்டபரியின் ஆர்ச் பிசப் இதில் தலையிட்டு ஒரு ஆலோசனைக்குழுவை ஏற்படுத்தி விவாதத்தை ஏற்படுத்தியிருக்கும் காரியங்களை ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இவ்வாலோசனைக்குழு நடந்து கொண்டிருந்த நேரத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் இதனை நிலநடுக்க ஆலோசனைக்குழு என்று அழைத்தனர். விக்ளிப்பும் அவருடைய ஆதரவாளர்களும் அந்நிலநடுக்கத்தை தங்களுக்கு ஆதரவான தெய்வீகத் தலையீடாகக் கருதினர். இருந்தபோதும் விக்ளிப்பின் போதனைகள்

ஆலோசனைக்குழுவால் நிராகரிக்கப்பட்டது. ரோம சபைத் தலைவரான போப் விக்ளிப் தன்னை வந்து பார்க்க வேண்டும் என்று கட்டளையிட்டார். ஆனால் விக்ளிப் ரோமுக்கு போக அடியோடு மறுத்துவிட்டார். இக்காலத்தில் இரண்டு போப்புகள் இருந்து ஒருவர் மற்றவரை அந்திக் கிறிஸ்து என்று தாக்கிக் கொண்டனர். விக்ளிப்பின் ஆதரவாளர்கள் அதிக துன்பத்திற்குள்ளானபோதும் இக்காலங்களில் விக்ளிப் எதிரிகள் கைகளில் அகப்படாமல் எப்படியோ தப்பி வாழ்ந்து கொண்டிருந்தார். விக்ளிப் லட்டர்வத் என்ற இடத்தில் போய் தனது இறுதிக் காலம்வரை வாழ்ந்து 1834 ல் கர்த்தரடி சேர்ந்தார்.

விக்ளிப் தன்னுடைய கடைசிக் காலங்களில் மக்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக ஒரு பிரசங்கிகளின் கூட்டத்தை தயார் செய்து அனுப்பினார். இவர்கள் வறிய பிரசங்கிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் விக்ளிப்பின் போதனைகளை மக்களிடம் பரப்பினார்கள். அறியாமையினால் இருண்டு கிடந்த மக்களின் கண்களைத் திறக்க இந்தப்-பிரசங்கிகளை விக்ளிப் அனுப்பி வைத்தார். இப்பிரசங்கிகள் சிவந்த மாநிறத்திலான நீண்ட அங்கிகளையும் மரக்கட்டைப் பாதணிகளையும் அணிந்து கொண்டு நாடெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். மதகுருக்கள் இவர்களை வெறுத்தபோதும் ஒரு பலமுள்ள பிரசங்கிகளின் கூட்டமாகவும் எதிரிகள் கண்டு நடுங்கும் கூட்டமாகவும் இவர்கள் இருந்தனர். இவர்களுடைய பிரசங்கத்தினால் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்தனர். விக்ளிப்பின் எதிரிகள் இவர்களை லோலார்ட்ஸ் (Lollards) என்று அழைத்தனர். இவ்வார்த்தை எங்கிருந்து புறப்பட்டது என்பது தெரியவில்லை. சிலர் இவ்வார்த்தை "உதவாக்கரைகள்" என்ற அர்த்தத்தைக் கொண்டிருப்பதாகவும், வேறு சிலர் இது "கர்த்தருக்காக துதி பாடுகிறவர்கள்" என்ற அர்த்தத்தைக் கொண்டிருப்பதாகவும் கூறுவார்கள்.

விக்ளிப்பின் சாதனைகளில் மிகவும் முக்கியானது அவர் ஆங்கில மொழியில் வேதத்தை மொழி பெயர்த்ததே. இதனால் எல்லோரும் வேதத்தை தங்கள் மொழியில் வாசித்து கர்த்தருடைய சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. ரோமன் கத்தோலிக்க சபை அக்காலத்தில் லத்தீன் மொழியில் மட்டுமே வேதத்தை வைத்திருந்தது. இதை வல்கேட் மொழி பெயர்ப்பு என்று அழைப்பார்கள். ரோமன் கத்தோலிக்க சபை வேதத்தை வேறு மொழிகளில் மொழி பெயர்க்க அனுமதி கொடுக்க மறுத்து வந்தது. இதனால் மக்களால் வேதத்தை தங்களுக்குத் தெரிந்த மொழியில் வாசித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. விக்ளிப்புக்கு எபிரேய மொழியோ கிரேக்கமோ தெரிந்திருக்கவில்லை. அதனால், அவர் இலத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தியே தனது ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்டதால் விக்ளிப்பின் மொழிபெயர்ப்பு பூரணமான மொழிபெயர்ப்பாக இருக்கவில்லை. இருந்தபோதும் வேதத்தை தங்கள் மொழியில் வாசிக்கும் வசதியே இல்லாமலிருந்த மக்களுக்கு அது பெரும் ஆசீர்வாதமாக இருந்தது. அக்காலத்தில் அச்சுக்கூடங்கள் இல்லாதிருந்ததால் விக்ளிப் தன்னுடைய மொழிபெயர்ப்பைக் கையாலேயே எழுத வேண்டியிருந்தது. விக்ளிப்பின் பிரசங்கிகள் இவற்றின் பகுதிகளை நாடெங்கும் கொண்டு போய் மக்களைக்கூட்டி வாசித்துப் பிரசங்கம் செய்தனர். விக்ளிப்பின் மொழி பெயர்ப்பே வேதத்தின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பாக இருந்தது. விக்ளிப்பிற்கு இக்காரியத்தில் வேறு சிலர் துணைசெய்திருக்கக்கூடும். ஆனால், எந்தளவுக்கு அவர்கள் துணை செய்திருப்பார்கள் என்பது தெரியவில்லை.

*அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரண்டு மோசமான காரியங்களை இங்கிலாந்தின் பாராளுமன்றம் செய்தது. முதலில், 1401 ல் அது போலிக்கோட்பாடுகளைப் பரப்புபவர்களைத் தீயில் எரிக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. விக்ளிப்பின் "லோலார்ட்ஸ்" (பிரசங்கிகள்) போலிக்கோட்பாடுகளைப் பரப்புபவர்களாகக் கருதப்பட்டனர். 1417 ல் ஜோன் ஓல்ட்காசில் தீயில் எரிக்கப்பட்டார். அடுத்ததாக, விக்ளிப் ஆங்கிலத்தில் வெளியிட்ட வேத மொழி பெயர்ப்பு முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்றும் சட்டம் கொண்டு வரப்பட்டது.*

*ரோமன் கத்தோலிக்க சபை விக்ளிப்பை எந்தளவுக்கு கொடூரமாக வெறுத்தது என்பதற்கு விக்ளிப் இறந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் காட்டலாம். 1415 ல் கொன்ஸ்டனின் ஆலோசனை சபையின் கட்டளைபடி விக்ளிப்பின் கல்லறையில் இருந்த அவருடைய எலும்புகள் தோண்டி எடுக்கப்பட்டு மறுபடியும் அவற்றைப் புதைக்க அனுமதி மறுக்கப்பட்டது. அந்தளவுக்கு ரோமன் கத்தோலிக்க சபை கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் வெறுத்தது. 1428 ல் லிங்கனின் பிசப் விக்ளிப்பின் சரீரத்தின் எஞ்சிய பகுதிகளை எரித்து சாம்பலை லட்டர்வர்த்தில் ஓடிய சுவிப்ட் என்ற ஆற்றில் தூவிவிட்டார்.*

*இதுபற்றி எழுதும் ஒருவர், விக்ளிப்பின் சாம்பல் சுவிப்ட் ஆற்றிலிருந்து ஏவோன் ஆற்றில் கலந்து, செவன் ஆற்றில் பாய்ந்து, ஒடுக்கமான கடல்களில் பரவி பெருங்கடலைச் சேர்ந்ததுபோல் அவருடைய போதனைகள் இங்கிலாந்தின் எல்லாப்பகுதிகளுக்கும் பரவி அங்கிருந்து தூர தேசங்களுக்கும் போய்ச் சேர்ந்தது என்று சரியாகவே சொன்னார். பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த சபை சீர்திருத்தத்தின் விடி வெள்ளி ஜோன் விக்ளிப் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.*

---

ரோமன் கத்தோலிக்க சபை குறித்து பல தமிழ் கிறிஸ்தவ சபைத்தலைவர்களிடமும், கிறிஸ்தவர்களிடமும் தொடர்ந்து ஒரு தவறான எண்ணம் இருப்பதை நம்மால் அறிய முடிகின்றது. ரோமன் கத்தோலிக்க மதம் கிறிஸ்தவ சபையின் ஒரு பகுதி என்பதுதான் அந்தத் தவறான எண்ணம். சபை வரலாற்றை சரியாக அறிந்து கொள்ளாதவர்கள்தான் இத்தகைய தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். இன்று தமிழில் காணப்படும் சபை வரலாற்று நூல்களும் ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகளின் அடிப்படையில் எழுதப்பட்டு கிறிஸ்தவர்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. ரோமன் கத்தோலிக்க மதத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேதத்தின் அடிப்படை உண்மைகளை நிராகரிக்கும் மனித சிந்தனையில் இருந்து புறப்பட்ட ஒரு போலி மதம் ரோமன் கத்தோலிக்க மதம். சடங்காச்சாரியங்களையும், குருமார்களையும், நற்கிரியைகளின் மூலம் பரலோகம் போகலாம் என்ற வீண் எண்ணத்தையும் இம்மதம் கொண்டுள்ளதோடு இவை எல்லாவற்றையும் விட மோசமாக பாவத்தில் பிறந்து பாவத்தில் வாழ்ந்து வரும் போப் என்ற ஒரு தனி மனிதனின் ஜெபத்தாலும், ஆசீர்வாதத்தாலும் ஆத்துமாக்கள் கடவுளை விசுவாசிக்க முடியும் என்ற அறிவீனமான போதனையையும் ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்து போதித்து வருகின்றது. கிறிஸ்தவர்கள் போலிப்போதனைகளில் இருந்து தங்களைக் காத்துக் கொள்வது இன்றும் என்றும் அவசியம். – ஆசிரியர்

# 'அடியோபரா'

அடியோபரா என்றால் என்ன? என்ற கேள்வி நிச்சயம் உங்கள் மனதில் உடனடியாக எழுந்திருக்கும். சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகவும் போதித்த வேதத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட ஆராதனை விதியை நாம் ஏற்கனவே இவ்விதழில் பார்த்திருக்கிறோம். வரையறுக்கப்பட்ட ஆராதனை விதியைப் படிக்கும்போது அதோடு சம்பந்தப்பட்ட "அடியோபராவையும்" (Adiaphora) பற்றி அறிந்து கொள்வது அவசியம். இவ்வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டது. "இதற்கு முக்கிய-மானதொன்றல்ல" (Not a thing of importance) என்று பொருள். இவ்வார்த்தையை பதினாறாம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதகாலத்திற்குப் பின்பு சில கிறிஸ்தவ சபைப்பிரிவினர் பயன்படுத்த ஆரம்பித்தனர். இவர்கள் கர்த்தருடைய வார்த்தை கட்டளையிட்டு செய்யாதே என்று நிராகரிக்காத எதையும், அது தடை செய்யாத எதையும் ஆராதனையில் சேர்த்துக் கொள்வ-தில் தவறில்லை என்று வாதாடினார்கள். உதாரணமாக கர்த்தரின் வார்த்தை-யில் சிலுவை அணியாதே! என்று எங்கும் நேரடியாகக் கட்டளையிடப்-படவில்லை. அதேநேரம், அணியக்கூடாது என்றும் எங்கும் சொல்லவில்லை. ஆகவே, சிலுவையை அணிவதில் தவறில்லை என்பது இவர்களுடைய வாதம். இதே முறையில் வாதாடி பிரசங்கிகளுக்கான விசேட அங்கி, சிலைவணக்கம், சடங்குகள் என்று பல காரியங்களை இவர்கள் ஆராதனையில் சேர்த்துக் கொண்டார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் இரட்சிப்பிற்காக கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தைத் தவிர வேறு எதுவும் முக்கியமானதாக இருக்கவில்லை. கிறிஸ்துவை விசுவாசித்தால் மட்டும் போதும், ஆராதனையில் எல்லாம் விசேட அக்கறை எடுக்க வேண்டியதில்லை என்பது இவர்களுடைய எண்ணமாயிருந்தது. முக்கியமாத ஆங்கிலிக்கன் பிரிவைச் சேர்ந்தவர்கள் இம்முறையில் சிந்தித்தார்கள்.

பியூரிட்டன்கள் என்று அழைக்கப்பட்ட தூய்மைவாதிகள் இவ்வடியோபரா வாதத்திற்கு எதிராக கர்த்தருடைய வார்த்தை கட்டளையிட்டு போதிக்கும் அம்சங்களை மட்டுமே ஆராதனையில் சேர்த்துக் கொள்ள வேண்டும், வேறு எதையும் ஆராதனையில் சேர்த்துக் கொள்வது கர்த்தருக்கு விரோதமான காரியம் என்று போதித்தார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதானால் வேதம் போதிக்கும் அத்தனை உண்மைகளுக்கும் கட்டுப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அடியோபராவை பற்றி இவர்கள் விளக்கியபோது, ஆத்மீகம் அல்லது ஒழுக்கத்துக்கு முரண்படாதவைகளும், வேதபோதனைகளுக்கு முரண்படாமலும், கர்த்தருடைய மகிமைக்கு பங்கம் ஏற்படுத்தாதவைகளும் மட்டுமே அடியோபராவிற்குள் அடங்கும் என்று விளக்கினார்கள். உதாரணமாக, கட்டடம் கட்டுவதற்கு நாம் பயன்படுத்துகிற பொருட்கள், ஆராதனை நடத்துவதற்கான நேரம், சபையில் ஆத்துமாக்கள் அமருவதற்காகப் பயன்படும் சாதனங்கள், சபையில் வாரத்துக்கு எத்தனை கூட்டங்கள் நடத்துவது, ஆராதனையின்போது எத்தனை பாடல்கள் பாடுவது, பிரசங்கம் எவ்வளவு நேரத்திற்கு இருக்க வேண்டும் போன்றவையே அடியோபரா சம்பந்தமான காரியங்களாக இவர்கள் விளக்கினார்கள். ஏனெனில், ஆராதனை நேரத்தில் பாடல்கள் பாடித்துதிக்க வேண்டும் என்று வேதம் தெளிவாகப்

போதிக்கின்றது. ஆனால், எத்தனை பாடல்கள் பாட வேண்டும் என்று ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. இவைபற்றி நாம் இயற்கைவிதிகளுக்கு அடங்கி எப்போதும் முடிவெடுக்க வேண்டும்.

ஆனால், வேதம் தெளிவாகப் போதிக்கும் ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டிய காரியங்களை நாம் உதாசீனப்படுத்துவதோ அல்லது அவற்றோடு வேறு எவற்றையும் சேர்த்துக்கொள்வதோ பெருந்தவறு என்பது சீர்திருத்தவாதிகளான தூய்மைவாதிகளின் போதனை. அடியோபராவை ஆங்கிலிக்கன்கள் தவறாகப் பயன்படுத்தி ஆராதனையைக் கர்த்தருக்கு விரோதமாக நடத்துகிறார்கள் என்று தூய்மைவாதிகள் அவர்களை எதிர்த்தார்கள். தம் காலத்திற்குப் பிறகு வரும் சந்ததியும் இப்படித் தவறிழைத்துவிடக்கூடாது என்பதற்காக அவர்கள் விசுவாச அறிக்கைகளை எழுதி ஆராதனைத் தத்துவங்களை எழுதி வைத்தார்கள். 1689 விசுவாச அறிக்கையில் 22 ம் அதிகாரம் ஆராதனை சம்பந்தமான வரையறுக்கப்பட்ட விதியை விளக்குவதோடு ஆராதனையில் இருக்க வேண்டிய கர்த்தர் தன்னுடைய வார்த்தையில் அனுமதித்துள்ள அம்சங்களையும் விளக்குகிறது. அதேபோல் இவ்விசுவாச அறிக்கை 21 வது அதிகாரத்தில் கிறிஸ்தவ சுதந்திரம் என்ற தலைப்பில் அடியோபரா பற்றியும் விளக்குகிறது. இவ்விரண்டு அதிகாரங்களும் அடுத்தடுத்து இருப்பதில் இருந்து தூய்மைவாதிகள் எத்தனை கவனத்தோடு இக்காரியங்களை ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். 21 வது அதிகாரததின் இரண்டாம் பாரா, கர்த்தருடைய வார்த்தைக்கு அடங்கிவராத எந்த மனித சிந்தனைக்கும், போதனைக்கும், அதிகாரத்திற்கும் கிறிஸ்தவர்கள் இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறது. இதன்படி கர்த்தரின் ஆராதனைக்குள் மனித சிந்தனையை நுழைப்பது எத்தனை தவறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சபையில் பொது ஆராதனை வேளையில் வேத பிரசங்கம் செய்யாமல் இசைக்கச்சேரி வைப்பதும், பெண்களைப் பிரசங்கம் செய்யவும் ஆராதனையை நடத்த விடுவதும், வாத்தியக்கருவிகளுக்கு மட்டுமே பெரு முக்கியத்துவம் கொடுப்பதும் ஆராதனையில் இருக்க வேண்டிய அமசங்களில் அக்கறை செலுத்தாமல் இருப்பதும் “அடியோபரா” வோடு சம்பந்தப்பட்டது என்று அன்று ஆங்கிலிக்கன் சபை சொன்னது போலவே இன்றும் பல சபைப்பிரிவினர் சொல்லி வருகிறார்கள். இது அடியோபரா சம்பந்தப்பட்ட காரியங்கள் அல்ல. வேதத்தின் தெளிவான ஆராதனை பற்றிய போதனைகளுக்கு முரணானவை. ஆராதனையில் இவற்றைச் சேர்த்துக் கொண்டாலும் பரவாயில்லை, சேர்த்துக் கொள்ளாவிட்டாலும் தப்பில்லை என்று சொல்லும் மலுப்பல் சாமிகள் தேவ பயம் இல்லாத சந்தர்ப்பவாதிகள். ஆத்துமாக்களைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு காலத்தை ஓட்டும் இவர்களுக்கும் சபை சீர்திருத்தத்திற்கும் தொலை தூரம்.

---

**ஸ்ரீ லங்காவில் உள்ள வாசகர்கள் கீழ்வரும் முகவரியோடு தொடர்பு கொண்டு 1689 விசுவாச அறிக்கையையும், சிறுவர்களுக்கான வேத உபதேசத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.**

Grace Literature, The Grace Evangelical Church,
19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka
(Phone & Fax: 503519)

## 1689 விசுவாச அறிக்கை

தமிழில் முதல்முறையாக 1689 ஆண்டு விசுவாச அறிக்கை வெளிவந்துள்ளது. நாம் விசுவாசிக்கும் வேத சத்தியங்களை தெளிவாக எல்லோரும் அறிந்து கொள்ளும்படி அறிவிக்கக்கூடிய ஒரு விசுவாச அறிக்கை இல்லாத குறையை இது தீர்த்து வைக்கிறது. திருச்சபைகள் தங்களுடைய சபை மக்களுக்கு வேத சத்தியங்களை முறையாகப் போதிக்கவும், தாங்கள் விசுவாசிக்கும் சத்தியங்களை வெட்கப்படாமல் விளக்கிச் சொல்லவும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சீர்திருத்தவாதிகளான பியூரிட்டன் பெரியவர்கள் 1677 ல் எழுதி 1689 ல் இதை வெளியிட்டனர். அன்று முதல் சபை வரலாற்றில் மெய்த்திருச்சபைகளால் தங்களுடைய விசுவாச அறிக்கையாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. பிரசங்கிகளின் இளவரசராம் ஸ்பர்ஜன் தனது சபையின் விசுவாச அறிக்கையாக இதைக் கொண்டிருந்தார். காலத்தால் நிரூபிக்கப்பட்ட சிறந்ததொரு விசுவாச அறிக்கையாக இது இருக்கிறது. அத்தோடு அநேக மெயத்திருச்சபைகளின் விசுவாச அறிக்கையாகவும் இன்று இருந்துவருகிறது.

திருச்சபைகளும், கிறிஸ்தவர்களும் இதனை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு சபையும் தன்னுடைய ஆத்துமாக்கள் இதை வாங்கி வாசிக்கும்படிச் செய்வது அச்சபையை நிச்சயம் உயர்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

இதன் விலை இந்திய ரூபாய் 24/-. தபால் செலவு தனி. இந்தியாவில் இருப்பவர்கள் காசோலையோ அல்லது மணியார்டரோ அனுப்பி இதைப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Reformed Baptist Publications**
**No. 22 T. P. K. Main Road**
**Pykara, Madurai 525 004**
**Tamil Nadu, S. India**

வெளிநாடுகளில் இருப்பவர்கள் எமது நியூசிலாந்து முகவரிக்கு எழுதவும்.

## சிறுவர்களுக்கான வேத உபதேசங்கள்

தமிழில் முதல் முறையாக, காலத்தால் நிரூபிக்கப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் வினா விடைப் போதனைகளைப்பின்பற்றி 134 வினாவிடைகளைக்கொண்ட சிறுவர்களுக்கான வேத உபதேசங்களை அளிக்கும் வினாவிடைப் போதனை நூல் இப்போது வெளிவந்துள்ளது. கிரேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபையால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட நூலின் தமிழாக்கமே இது. சிறுவர்களுக்கு முறையான இறையியல் போதனை அளிக்கும் வினாவிடைப் போதனை நூல் தமிழில் இல்லாத குறையை இது தீர்த்து வைக்கிறது.

சிறுவர்கள் மனத்தில் படியும்படி இருக்க வசதியாக வேத வசனங்களும் ஒவ்வொரு வினாவிடையோடும் தரப்பட்டிருக்கிறது. திருச்சபைகள் ஞாயிறு பாடசாலைகளில் போதிக்கவும், பெற்றோர்கள் குடும்ப ஜெப நேரத்தில் தங்களுடைய குழந்தைகளுக்குப் போதிக்கவும் இவ்வினாவிடை நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இதன் விலை இந்திய ரூபாய் 14/- தபால் செலவு தனி. கீழ்வரும் முகவரிக்கு எழுதி இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

**Reformed Baptist Publications**
**No. 22 T. P. K. Main Road**
**Pykara, Madurai 525004**
**Tamil Nadu, S. India**

வெளிநாடுகளில் இருப்பவர்கள் எமது நியூசிலாந்து முகவரிக்கு எழுதவும்.

## ஸ்ரீ லங்காவில்

ஸ்ரீ லங்காவில் இருப்பவர்கள் 1689 விசுவாச அறிக்கையையும், சிறுவர்களுக்கான வேத உபதேசத்தையும் பெற்றுக் கொள்வதற்கு கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**Grace Literature**
**The Grace Evangelical Church**
**19 Rajasinghe Road**
**Colombo 6, Sri Lanka**
**(Phone: 94 1 503519)**

# ‘இரகசிய கிறிஸ்தவர்கள்’

இரகசிய கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் ஒரு புது கிறிஸ்தவக் கூட்டத்தை தமிழகத்தின் சில சுவிசேஷகப் பிரசங்கிகள் உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு மனிதரைப்பற்றி எழுதிய ஒரு கிறிஸ்தவ பிரசங்கியார் அவரை இரகசிய கிறிஸ்தவர் என்று அழைத்து எழுதியிருந்ததை நான் சிலவருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். இரகசிய கிறிஸ்தவர்கள் என்று ஒரு கூட்டம் உண்மையில் இருக்கிறதா? இவர்கள் யார்? வேதம் இதுபற்றி என்ன சொல்லுகிறது என்று நாம் பார்ப்பது அவசியம்.

இரகசிய கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள், கிறிஸ்துவை விசுவாசித்தபோதும் தங்கள் வீடுகளில் கிறிஸ்துவை அறியாத பெற்றோர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ அல்லது கணவன்-மாரிடமோ படவேண்டிய துன்பங்களிலிருந்து தப்புவதற்காக இரகசியமாக கிறிஸ்துவை ஆராதிப்பவர்கள் என்று இப்பிரசங்கிகள் விளக்கம் தருகிறார்கள். இரகசிய கிறிஸ்தவர்கள் தம்மை கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படையாக அழைத்துக் கொள்ளமாட்டார்கள். பெற்றோர்கள் அல்லது கணவனுடைய கோபத்திற்குப் பயந்து புற மத சடங்குகளையும் இவர்கள் தொடர்ந்து பின்பற்றுவார்கள். வீட்டாருக்குப் பயந்து நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வதையும், கோவிலுக்குப் போவதையும், வேறு சடங்குகளைச் செய்வதையும் இவர்கள் விட்டுவிடுவதில்லை. விசுவாசி என்று தன்னை அழைத்துக்கொள்ளும் மனைவி கணவனுக்கு அது ஒருபோதும் தெரியாமலேயே வாழ்வார்கள். ஆனால் இரகசியமாக வேதத்தை வாசித்தும், ஜெபித்தும் வருவார்கள். தாம் கிறிஸ்தவர் என்ற உண்மை தெரிந்து விடும் என்பதற்காக சபைக்கும் வழமையாகப் போக மாட்டார்கள். இவர்களே இரகசிய கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

பெரும்பாலும், இந்துக்களாகவோ அல்லது வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாகவோ இருந்து கிறிஸ்துவை அறிந்து கொள்கிறவர்களுக்கு வீட்டிலும், உறவினர்கள், நண்பர்கள் மத்தியிலும் எதிர்ப்பு ஏற்படுவது சகஜம். கிறிஸ்துவை அறியாத மக்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்கிறவர்களை துன்புறுத்தி வந்துள்ளதை வேதம் விளக்குகிறது. யூத மதத்தவனாக இருந்து கிறிஸ்துவை அறிந்து கொண்ட குருடனைப் பல கேள்விகள் கேட்டுக் குடைந்து துன்புறுத்த முயன்ற யூத மதப் பரிசேயர்களைப் பற்றி புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். யூத மதத்திலிருந்து விலகி கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்களைத் துன்புறுத்திய சவுலைப் பற்றியும் வேதத்தில் வாசிக்கிறோம். ஸ்தீபன் கொலை செய்யப்படுவதை கண்ணால் பார்த்து மகிழ்ந்தான் சவுல் என்கிறது வேதம். இப்படி கிறிஸ்துவுக்காக துன்பப்பட்ட ஏராளமானவர்களைப் பற்றி வேதம் சாட்சி அளிக்கிறது. இவர்கள் எல்லோருமே கிறிஸ்துவை மெய்யாக விசுவாசித்தார்கள். தாம் வாழ்க்கையில் துன்பப்படப் போவதும் இவர்களுக்குத் தெரிந்திருந்தது. இருந்தபோதும் கிறிஸ்துவில் தமக்கிருக்கும் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்க இவர்களில் எவருமே தயங்கியதாக நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. குருடானக இருந்து கண்கள் குணமான மனிதன் யூதர்களைப்பார்த்து இயேசு என் கண்களைத் திறந்தார் எனக்கு வாழ்வு

கொடுத்தார் என்று கூறத் தயங்கியதில்லை. அதேபோல் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் இந்தவிதமாகவே கிறிஸ்துவை அறிந்து கொண்ட அனைவரும் பகிரங்கமாக எல்லோரும் அறியும்படி தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்கள் என்று வாசிக்கிறோம். அத்தோடு தாம் இதுவரை வாழ்ந்து வந்த வாழ்க்கையையும் உடனடியாகத் துறந்து கிறிஸ்துவை முழு மனத்தோடு பினபற்றினார்கள் என்றும் அறிந்து கொள்கிறோம். அப்போஸ்தலர் நடபடிகள் 17 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் யூதனாகிய யாசோன் கிறிந்துவை ஏற்றுக் கொண்டு எல்லோரும் அறியும்படியாக வாழ்ந்தான். அதனால்தான் பவுலையும், கிறிஸ்தவ நற்செய்தியையும் பிடிக்காத யூதர்கள் யாசோன் வீட்டில் புகுந்து அவனை இழுத்துக்கொண்டு போனார்கள். யாசோன் இரகசியக் கிறிஸ்தவனாக நடித்திருந்தால் யூதர்கள் அவனைத் தேடிப்போயிருக்க மாட்டார்கள். 18 ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் யூஸ்து (7), ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு (8), சொஸ்தேனே (17) ஆகியவர்களும் கிறிஸ்தவர்களாக பகிரங்கமாக எல்லோரும் அறியும்படி வாழ்ந்தார்கள். அவர்கள் எதிர்ப்பையும், துன்புறுத்தலையும் தங்களுடைய வாழ்க்கையில் சந்தித்தபோதும் இரகசியமாக வாழ ஒருபோதும் முயற்சி செய்யவில்லை.

இதேபோல் கிறிஸ்தவ வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும் கிறிஸ்தவர்கள் உலகில் இரகசியமாக வாழ முயலவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். பதினாறாம் நூற்றாண்டுக் காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபையும் போப்பும் கிறிஸ்துவை விசுவாசித்தவர்களைத் தொலைப்பதையே முழு நோக்கமாகக்-கொண்டு செயல்பட்டு வந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் மறைந்து வாழ முயலாமல் வேதத்தை பகிரங்கமாக ஏனைய மொழிகளில் மொழி பெயர்த்தும், வாசித்தும் வந்தார்கள். பிடிபட்டபோது கழுமரத்தில் மடிவதற்கு சந்தோஷத்தோடு கழுத்தை நீட்டினார்கள். மார்டின் லூதர் தன்னுடைய போதனைகளை நிராகரிக்க மறுத்து ரோமன் கத்தோலிக்க சபையை பகிரங்கமாக எதிர்த்தார். ஜோன் விக்ளிப்பும், வில்லியம் டின்டேலும் அவர்களுக்குப் பின் வந்த அனைவரும் இதையே செய்தனர். தலையே போனாலும் கிறிஸ்துவை மறுதலிப்பதில்லை என்பதே இவர்களின் இலட்சியமாக இருந்தது. சிலுவையையும், ரோமன் கத்தோலிக்க சடங்கு முறைகளையும் இவர்கள் பகிரங்கமாக நிராகரித்து கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சிகளாக இருந்தனர். பொக்ஸ் என்பவர் எழுதிய கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சிகளாக வரலாற்றில் மரித்தவர்களுடைய வாழ்க்கை (Fox's Martyrs) கிறிஸ்தவர்கள் ஒருபோதுமே இரகசியமாக வாழ முயற்சி செய்யவில்லை என்பதற்கு சாட்சியாக இருக்கின்றது. இவர்களெல்லாம் இரகசியமாக வாழ்ந்திருந்தால் சுவிசேஷக் கிறிஸ்தவத்தை இன்று நாமெல்லாம் அறிந்துகொள்ளும் வழி ஏற்பட்டிருக்காது. இரகசிய கிறிஸ்தவர்கள் என்ற வார்த்தைப் பிரயோகமே கிறிஸ்தவ வரலாறு அறியாத வார்த்தைப் பிரயோகம்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இரகசியமாக வாழலாம் என்ற போதனையை உருவாக்கிவர்கள் அரிமத்தியா ஊரைச்சேர்ந்தவனான யோசேப்பு என்ற மனிதனின் வாழ்க்கையை உதாரணத்திற்கு எடுத்துக்-கொள்வார்கள் (மத்தேயு 27:57; யோவான் 19:38). இந்த மனிதன் செல்வந்தனாகவும், யூத ஆலோசனை சபையில் அங்கத்தவனாகவும் இருந்தான். இவன் இயேசுவை விசுவாசித்தபோதும் யூதர்களுக்குப் பயந்தான். உத்தமனும், நீதிமானாயுமிருந்த இவன் இயேசுவுக்கெதிரான யூத ஆலோசனை சபையின் முடிவுகளுக்கும் செய்கைகளுக்கும் ஒருபோதும் ஒத்துப் போகவில்லை (லூக்கா

23:51). ஆரம்பத்தில் இவன் யூதர்களுக்குப் பயந்தபோதும் இயேசு இறந்தபின் தைரியத்தோடு பிலாத்துவிடம் போய் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போக அனுமதிபெற்று அதனை மெல்லிய துப்பட்டியிலே சுற்றி கல்லறையிலே வைத்தான்.

யோசேப்பு யூதர்களுக்குப் பயந்தது மனித சுபாவத்தால். அதற்காக அவன் வெளிப்படையாக தன்னை ஒருபோதும் விசுவாசியாகக் காட்டிக் கொள்ளவில்லை என்று வேதம் சொல்லவில்லை. யூத ஆலோசனை சபையின் முடிவுகளுக்கெதிரான தனது சம்மதமின்மையையும் அவன் ஏதோ ஒருவிதத்தில் சபையில் வெளிப்படுத்தியிருக்கிறான். வேதம் அவன் யூதர்களுக்குப் பயந்ததைப் பாராட்டிப் பேசவில்லை. அவனைப்போல பயப்பட வேண்டும் என்றும் போதிக்கவில்லை. யோசேப்பு நல்ல மனிதனாக இருந்தபோதும் யூர்களுக்கு அவன் பயந்தது சரியல்ல. அத்தோடு, இறுதியில் யோசேப்பு மனம்மாறி தைரியத்துடன் தான் யார் என்பதையும் காட்டிக்கொண்டான். சாதாரண மனிதர்களுக்குப் பயப்படுகிறவர்கள் மட்டுமே இரகசியமாக வாழப்பார்ப்பார்கள். மெய்க்கிறீஸ்தவர்கள் அத்தகைய பயங்களிலிருந்து விடுதலை பெறவே முயற்சிப்பார்கள். ஆகவே, யோசேப்புவை உதாரணமாக எடுத்துக்கொண்டு விசுவாசிகள் துன்புறுத்தலில் இருந்து தப்புவதற்தாக தங்களைக் காட்டிக்கொள்ளாமல் வாழலாம் என்ற போதனை தவறானது. வேதத்தில் இல்லாதது. வேதத்தில் வேறு எந்த ஒரு மனிதனும் இந்தவிதமாக வாழ்ந்ததாக நாம் வாசிப்பதில்லை.

இதுபற்றிய தெளிவான வேதபோதனைகளைப் பார்த்தால் அவை கிறிஸ்தவர்கள் தம்மை மனிதர்கள் முன் வெளிப்படுத்திக் கொள்ளாமல் வாழ்வதை மோசமான செயலாகவே கருதுவதைப் பார்க்கிறோம். இதைப்போதிக்கும் தெளிவான ஒரு வேதபகுதியைப் பார்ப்போம். மார்க்கு 8:34-38 வரையிலான வசனங்களைப் பார்ப்போம். இவ்வேதப்பகுதிக்கு முன்னால் உள்ள பகுதியில் (31-33) கிறிஸ்து தன்னுடைய மரணத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதைப் பேதுரு தடைசெய்ய முயலுவதைப் பார்க்கிறோம். ஆனால் இயேசு பேதுருவைக் கடுமையாகக் கண்டித்துப பேசுவதைப் பார்க்கிறோம். இதிலிருந்து மனிதர்களுக்குப் பயந்து இரகசியமாக இந்த உலகத்தில் வாழ்வதற்காக தான் வரவில்லை என்றும், இவ்வுலக இன்பத்தை அனுபவிப்பதைவிட மேலான காரியங்களைச் செய்யவே தான் வந்திருப்பதாகவும் இயேசு உணர்த்துகிறார்.

இதற்கு அடுத்த பகுதியில் (34-38) இயேசு உடனடியாக சீடர்களை தம்மிடத்தில் வரும்படி அழைத்து தன்னைப் பின்பற்றுபவர்கள் தங்களை வெறுத்து தாங்கள் சுமக்க வேண்டிய சிலுவையை சுமந்து தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று போதிக்கிறார். அதாவது, தாம் சுமக்க வேண்டிய பாரத்தையும், அனுபவிக்க வேண்டிய துன்பத்தையும் இவ்வுலகில் அனுபவிக்க மறுக்கிறவன் தன்னுடைய மெய்யான சீடனாக இருக்க முடியாது என்கிறார் இயேசு. 38 வது வசனத்தில் முடிவாக, "இந்த சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக்குறித்து மனுஷ குமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" என்றார். இதன் மூலம் இயேசு, எந்த ஒரு கிறிஸ்தவனும் மனிதர்கள் முன்னால் தன்னுடைய போதனைகளைக் குறித்தும் தம்மைக் குறித்தும் வெட்கப்படாமலும், தம்மைப்பற்றி வெளிப்படையாகப் பேசி தனக்காக வாழ முயற்சி செய்ய

வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். மனிதர்களுக்குப் பயந்து தன்னை வெளிப்படையாக அறிக்கையிடாமல் வாழ்பவர்களைப் பார்த்து நியாயத்தீர்ப்பு நாளில் தான் வெட்கப்படப்போவதாகவும் கூறுகிறார். இந்த உலகத்து மக்களை சமாதானப்படுத்தி அவர்கள் மனங்கோனாமல் இருக்க இரகசியமாக வாழ முயல்கிறவன் மெய்யான கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்பதையே 35 ம் வசனத்தில், "தன் ஜீவனை இரட்சிக்க முயல்கிறவன் அதை இழந்து போவான்" என்று எச்சரிப்பதன் மூலம் விளக்குகிறார். உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டு தன்னுடைய ஜீவனை நஷ்டப்படுத்திக் கொள்வதால் ஒருவனுக்கு எந்த ஆதாயமுமில்லை என்கிறார் இயேசு (36). ஆகவே, இந்த சந்ததியில் ஒரு கிறிஸ்தவன் மறைமுகமாக வாழ முயற்சி செய்யக்கூடாது. தன்னுடைய மக்கள் இரகசிய வாழ்க்கை வாழ்வதற்காக கிறிஸ்து பகிரங்கமாக சிலுவையில் தன்னைப் பலி கொடுக்கவில்லை. பாவம் நிறைந்த மனிதர்களின் கரங்களில் அகப்பட்டு துன்புறுத்தலுக்குள்ளாகி, நிந்திக்கப்பட்டு இறுதியில் சிலுவையில் மரித்த தேவன் தமது மக்கள் தாம் இலவசமாகக் கொடுத்த இரட்சிப்புக்குரிய வாழ்க்கையை எல்லா மக்களும் அறிந்து கொள்ளும்படி தேவ பலத்தோடு வாழும்படியே போதித்துள்ளார். கிறிஸ்து காட்டிக் கொடுக்கப்பட்டு சிறைபட்டபின் பேதுரு மாம்சத்தின் பலத்தால் ஒரு பெண் முன்னால் கிறிஸ்துவை மறுதலித்தான். அவரைத் தனக்குத் தெரியாது என்று கூறினான். பேதுரு பின்பு தன் செயலைக்குறித்து வெட்கப்பட்டு இருதயத்தில் குத்தப்பட்டு அழுதான். மனம் வருந்தினான் என்று வேதம் சொல்லுகிறது. மனிதர்களுக்குப் பயந்து தன்னைப்பற்றிக் கேள்விப்படவில்லை என்று கூறி பேதுரு வாழ்வதை இயேசு விருப்பவில்லை. பேதுருவை பின்பு கிறிஸ்து சந்தித்து திருத்தியதாக வேதத்தில் வாசிக்கிறோம்.

இந்துக் குடும்பங்களில் இருந்து கிறிஸ்துவை அறிந்து கொள்பவர்களும், இந்துக்களான கணவர்களுடன் வாழ வேண்டிய சூழ்நிலையில் இருக்கும் பெண்களும் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. பெற்றோராலும், கணவன்மாராலும் துன்புறுத்தலுக்குள்ளாகும் நிலை உள்ளது. இருந்தபோதும் இத்தகைய குடும்ப சூழ்நிலைகளில் இருந்து சுவிசேஷத்தைக் கேட்டு பாவத்திலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்களாலேயே அவர்களுடைய குடும்பங்களுக்கும் மீட்பு வரமுடியும். பல துன்பங்களுக்கும் மத்தியில் கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்கு சாட்சியாக வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. இதையே, என்னைப் பின்பற்றுவாயானால் உன்னுடைய சிலுவையை நீ சுமக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று சொன்னதன் மூலம் இயேசு விளக்குகிறார். துன்பமே இல்லாத வாழ்க்கையைத் தருவதாக இயேசு ஒருபோதும் வாக்களிக்கவில்லை. துன்பமில்லாத வாழ்க்கையை இயேசு தருவார் என்று சொல்லுபவர்கள் பொய்யர்கள். மறைமுகமாக கிறிஸ்துவைத் தெரியாது என்று மறுத்து வாழ முயலாமல் தங்களுடைய நல்ல விசுவாசமுள்ள நடத்தையாலும், அன்பாலும், உறுதியான ஜெபத்தாலும் கிறிஸ்தவர்கள் கர்த்தரை அறியாதவர்களுக்கு சாட்சியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவை அறிந்து கொண்ட ஒரு வாலிபனோ, வாலிபப் பெண்ணோ பெற்றோர்களை மதித்து அன்போடு நடந்து கொண்டால் அதைப் பார்க்கும் பெற்றோரின் மனம் மகிழாமலா போகும்? அதற்காக அவர்கள் உடனடியாக மனம் மாறிவிடுவார்கள் என்று நான் சொல்லவில்லை. கிறிஸ்தவ வாழ்க்கையின் பலமும், வல்லமையான சாட்சியும் கிறிஸ்துவை அறியாதவர்களை அவரைப்பற்றி சிந்திக்க வைக்கும் என்பதுதான் வேதம் போதிக்கும் உண்மை.

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 58 மூன்றாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: கடவுள் தன்னை வெளிப்படுத்தப் பயன்படுத்துகிற எதையும் அசுத்தப்படுத்து-வதையும், அவமரியாதை செய்வதையும் மூன்றாம் கட்டளை தடை செய்கிறது.*

*மல்கியா 1:6-7, 12; 2:2; 3:14.*

*கேள்வி: 59 மூன்றாம் கட்டளையை வலியுறுத்தும் காரணிகள் யாவை?*

*பதில்: இம்மூன்றாம் கட்டளையை மீறுகிறவர்கள் மனிதர்கள் கொடுக்கும் தண்டனைகளில் இருந்து எப்படியாவது தப்பினாலும், ஆண்டவராகிய நமது கடவுள் தமது நீதியான நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்களைத் தப்பவிடமாட்டார் என்ற காரணத்தை வலியுறுத்துகிறது.*

*1 சாமுவேல் 2:12, 17, 22, 29; 3:13; உபாகமம் 28:58-59.*

**விளக்கக்குறிப்பு:** *கடந்த இதழில் மூன்றாம் கட்டளையை நாம் ஆராய்ந்தபோது கர்த்தருடைய ஆராதனையைப்பற்றி ஆத்துமாக்கள் தங்களுடைய அகத்தில் கொண்டிருக்கவேண்டிய புனிதமான எண்ணங்களைக் கவனித்தோம். இதனால்தான் மூன்றாம் கட்டளை கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணில் வழங்குகிறவர்களைத் தண்டியாமல் விடமாட்டார் என்று எச்சரிக்கை செய்கிறது. ஆத்துமாக்களின் உள்ளங்களை ஆராய்வது நமது வேலையல்ல. கர்த்தர் மட்டுமே அதைச் செய்யக்கூடியவராக இருக்கிறார். "நீதியுள்ள-வராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்." (சங்கீதம் 7:9). மனிதர்கள் வெளிப்படையாக கர்த்தரை விசுவாசித்து, அறிக்கையிட்டு நமது பார்வைக்குத் தெரியும்படி வேதம் போதிக்கும் விதத்தில் வாழ்க்கை நடத்தினால் அவர்களை நாம் மெய்யான விசுவாசிகள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். சில வேளைகளில் அவர்களில் சில குறைபாடுகள் இருந்தாலும் நம்மைவிட மேலானவர்களாகத்தான் அவர்களைக் கருத வேண்டும். சத்தியத்திற்குப் புறம்பானதை அவர்கள் பின்பற்றினாலோ (போலிக் கோட்பாடுகளைப் பின்பற்றினால்) அல்லது பலரறியும்படி திருநியமங்களுக்குக் கீழ்ப்படியாமல் போனாலோதான் (சபைக்-குத் தொடர்ந்து வராமலும், திருவிருந்தை அசட்டை செய்தும், போத கண்காணிப்பைப் புறக்கணித்தும், சபை ஒழுங்கை மீறியும் நடந்தால்) அவர்கள் விசுவாசிகள் என்று தம்மை அழைத்துக்கொண்டு கிறிஸ்துவின் நாமத்தை வீணில் வழங்கினார்கள் என்ற முடிவுக்கு வரலாம். அப்போஸ்தலருடைய காலத்தில் இப்படியாக தவறாக நடந்து கொண்டவர்களைப்பற்றி யோவான் பின்வருமாறு சொல்கிறார்: "அவர்கள் நம்மைவிட்டு பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்-களாயிருந்தார்களானால், நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்." (1 யோவான் 2:19). அப்போஸ்தலரும்கூட விசுவாசிகள் என்று தம்மை அறிவித்துக் கொண்டவர்கள் சபை ஐக்கியத்தைப் புறக்கணித்து அதைவிட்டு விலகிப்போகிறவரை அவர்கள் கடவுளுடைய நாமத்தை வீணில் வழங்கினார்கள் என்று சொல்லவில்லை.*

கர்த்தருடைய வார்த்தை இத்தகைய எச்சரிக்கையை விடுத்திருப்பதால் ஆத்துமாக்கள் கர்த்தரை இருதய சுத்தத்தோடு ஆராதிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். மெய்யான ஆராதனையை நாம் கர்த்தருக்கு அளிக்க வேண்டுமானால் தவறான ஆராதனைக்கு நம் வாழ்க்கையில் இடம் கொடுக்கக் கூடாது. தவறான ஆராதனைக்கு இடம்கொடுக்காமலிருக்க நாம் முதலில் வெறும் உதட்டளவிலான ஆராதனையில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஏசாயா தீர்க்கதரிசி அத்தகைய ஆராதனை முறையை இவ்வாறாக விளக்குகிறார்: “இந்த ஜனங்கள் தம் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகி இருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.” (ஏசாயா 29:13). பவுல் ,இத்தகைய ஆராதனையையே, தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலித்தல் என்று வர்ணிக்கிறார். (2 தீமோத். 3:5). சம்பிரதாயத்துக்காக வெறுமே சபைக்கு போவதாலும், கிளிப்பிள்ளை போல் ஜெபம் செய்வதாலும், காணிக்கை கொடுப்பதாலும் நம் ஆராதனை மெய்யான ஆராதனையாகிவிடாது. மனந்திரும்புதலுக்கான கனிகளைக் கொண்டு விசுவாசத்துடன் ஆராதிக்காவிட்டால் நமது ஆராதனை உதட்டளவிளான ஆராதனையே. அதை கர்த்தர் அடியோடு வெறுக்கிறார்.

இதேபோல, நாம் பாரம்பரியமான ஆராதனையையும் கைவிட வேண்டும். பரிசேயர்களும், சதுசேயர்களும் இத்தகைய ஆராதனையையே செய்தார்கள். அவர்கள் வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று இயேசு சொன்னார். நீங்கள். . . உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள் என்றார் இயேசு. (மாற்கு 7:7, 13). வேதவசனத்தை நிராகரித்து இவர்கள் பாரம்பரியத்தையும், தங்களுடைய சொந்த போதனைகளையும் பின்பற்றி கர்த்தரை ஆராதிப்பதாக எண்ணி தங்களை ஏமாற்றிக் கொண்டார்கள். உதாரணமாக பரிசேயர்கள் ஐந்தாம் கட்டளையை சரிவரக் கடைப்பிடிக்கவில்லை. அக்கட்டளையின் போதனைப்படி பெற்றோரைக் கனம்பண்ணுவதைத் தவிர்ப்பதற்காக ஒரு புது வழியைக் கடைப்பிடித்தார்கள். ஒரு மனிதன் தன்னுடயை பணத்தையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணிக்க முடியும் என்று இவர்கள் சொன்னார்கள். பரிசேயர்கள் போதனைப்படி அம்மனிதன் கோபன் என்ற வார்த்தையை சொன்னால் அவனுடைய பணம் எல்லாம் கடவுளுக்கே சொந்தமாகிவிடுகின்றது. எனவே, கடவுளுக்கு சொந்தமான பணத்தை பெற்றோருக்கு செலவிடக்கூடாது என்ற போலிபக்தியின் வேஷத்தை தரித்துக் கொண்டு அவன் தன் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமையைத் துப்பரவாக புறக்கணித்து விடுகிறான். இத்தகைய போலித்தனத்தை இன்று கிறிஸ்தவ சபைகள் என்று தம்மை அறிவித்துக் கொள்கிற பல சபைகளில் காண முடிகின்றது. பாரம்பரியம் என்ற கோணிப்பைக்குள் நுழைந்து கொண்டு கர்த்தரின் வேதத்தை அடியோடு புறக்கணிக்கும் இச்சபைகள் மெய்ச்சபைகளே அல்ல. பாரம்பரியத்தைப் பற்றிய ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது எப்போதும் மெய்யான கிறிஸ்தவத்திற்கு எதிரியாக இருந்து விடுகிறது. நாம் எப்போதும் செய்து வந்திருக்கிற காரியங்களை தொடர்ந்து அப்படியே செய்து வந்தால் மட்டும் போதும் என்ற தவறான எண்ணத்தை இது ஏற்படுத்தி விடுகிறது. நாம் செய்து வந்திருக்கிற காரியங்களுக்கும் வேதத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? என்ற கேள்வியை பாரம்பரியங்களைப் பின்பற்றுபவர்கள் ஒருபோதும் கேட்க

*மாட்டார்கள். ஆனால், அந்தக் கேள்வியைத்தான் மெய்க்கிறிஸ்தவர்களும், மெய்க்கிறிஸ்தவ சபைகளும் எப்போதும் கேட்பார்கள். நான் செய்வது கர்த்தருக்குப் பிடிக்குமா? இதைப்பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று தேவபயத்தோடு கேட்பவனே மெய்க்கிறிஸ்தவன்.*

*இன்னுமொரு போலித்தனமும் உண்டு. அதுதான் கிறிஸ்தவ விசுவாசத்தை உருமாற்றி அதற்கு போலிவிளக்கம் கொடுக்கும் "மொடர்னிசம்"* (Modernism) *இது வரலாற்று கிறிஸ்தவ போதனைகளுக்கும் கிறிஸ்தவ வார்த்தைகளுக்கும் வேதத்திலில்லாத விளக்கத்தைக் கொடுக்க முயற்சிக்கிறது. இதற்கு நல்ல உதாரணங்கள் இந்திய வேதங்களில் இயேசுவைத் தேடி அலையும் புலவர் தெய்வநாயகத்தின் எழுத்துக்களும், சாது செல்லப்பாவின் வேத விரோத போதனைகளும். "ரெட் டுளிப்" என்று சென்னையில் இருந்து வரும் ஒரு சிற்றேட்டின் ஆசிரியரும் இதே மாதிரியான போலி விளக்கங்களை கிறிஸ்தவ வேதபோதனைகளுக்கு கொடுத்து வருவதைப் பற்றி கடந்த வருடத்தில் எழுதியிருந்தோம். இவர்கள் எல்லோருமே கிறிஸ்தவ வேத போதனைகளை திரித்து பொய்யான விளக்கங்களை அளிக்கிறார்கள். இது கர்த்தருடைய நாமத்தை வீணில் வழங்கும் செயல்.*

*இயேசு சொன்னார்: ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்லுகிற எல்லோரும் பரலோக இராஜ்யத்தை அடையப்போவதில்லை என்று. இதன் மூலம் இயேசு ஆத்துமாக்கள் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொள்ள முடியும் என்பதை சுட்டிக்காட்டுகிறார்.*

*கடவுளுடைய நாமத்தை நாம் வீணில் வழங்கவில்லை என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு யாக்கோபு 1:22-25 ஆகிய வசனங்களில் பதில் சொல்லுகிறார். இவ்வசனங்கள் முதலில் ஒரு கிறிஸ்தவன் யார் என்று விளக்குகின்றன. வசனத்தைக் கேட்டு அதை மீறாமலும், திரிக்காமலும், உள்ளது உள்ளபடியே தேவபயத்தோடு செய்கிறவன் மட்டுமே கிறிஸ்தவன் என்று யாக்கோபு சொல்கிறான். இரண்டாவதாக, தன்னை விசுவாசி என்று அழைத்துக் கொண்டு விசுவாசி வாழ வேண்டிய வாழ்க்கைக்கு எதிர் வாழ்க்கை வாழ்கிறவனையும் இவ்வசனங்கள் படம் பிடித்துக் காட்டு- கின்றன. அப்படி பொய் வாழ்க்கை வாழ்கிறவன் கிறிஸ்தவன் அல்ல. இவ்வசனங்கள் மெய்க்கிறிஸ்தவன் எப்போதுமே வேதத்தை ஆராய்ந்து பார்த்து கிறிஸ்துவின் மகிமையை அதில் கண்டு, தன்னுடைய உண்மை நிலையையும் உணர்ந்து ஜெபத்தோடும் ஆவியோடும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வான். தேவ சித்தத்தை அன்றாடம் விசுவாசத்தோடு செய்வதை இலட்சியமாகக் கொண்டிருப்பான்.*

*இதனால்தான் மெய்க்கிறிஸ்தவ சபைகள் சடுதியாக எவருக்கும் சபையில் திருவிருந்து கொடுக்கவோ அல்லது அவர்களை அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளவோ மாட்டார்கள். அச்சபைகள் விசுவாசிஎன்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள் உண்மையான விசுவாசிகள் தாமா என்று நன்றாக அறிந்து கொண்டபின்பே அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்வார்க்ள். போலிக் கிறிஸ்தவர்கள் அதிகரித்து வரும் இந்நாட்களில் இத்தகைய சோதனை அவசியம். ஆத்துமாக்களை ஆராய்ந்து பார்க்காமல் இது நம் வேலையல்ல கர்த்தருடைய வேலை என்று அசட்டையாக இருந்து திருமுழுக்கையும், திருவிருந்தையும் கேட்பவர்களுக்கெல்லாம் பஞ்சாமிர்தமாக கொடுத்துவரும் சபைகள் கர்த்தருடைய நாமத்தை அவர்கள் வீணில் வழங்குவதற்கு ஊக்குவிக்கிறார்கள்.*

# சபைப் பிதாக்கள்
# (Church Fathers)

*இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கன்னா பின்னாவென்று வேதபோதனைகளைப்பற்றி விநோதமாக சிந்திக்கத் தொடங்கிய நொஸ்டிசிசத்தாலும், வேத ஆராய்ச்சியை உதாசீனம் செய்து எல்லைமீறி வெறித்தனமாக உணர்ச்சிகளுக்கு தூபம் போட்ட மொன்டனிசத்தாலும் திருச்சபைக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டது. திருச்சபையின் ஆத்மீகம் பலவீனமடைந்திருந்தது. இக்காலப்பகுதிகளிலேயே சபைப்பிதாக்கள் தங்களுடைய சபையில் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கினர். அவர்கள் மிகவும் திறமைசாலிகளாகவும், கடமைப்பாடுடையவர்களாகவும் இருந்தனர். இவர்களில் ஐரேனியஸ், டர்டூலியன், சிப்பிரியன், அலேக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமன்ட், ஒரிகன் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்கள் மூன்று பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இப்பிரச்சனைகளை இவர்கள் தீர்மானத்துடன் சந்தித்தபோதும், இப்பிரச்சனைகளைக் குறித்து இவர்கள் எடுத்த தீர்மானங்கள் பிற்காலத்தில் மேலும் பெரிய பிரச்சனைகளை உருவாக்கின.*

### புதிய ஏற்பாட்டுத் தொகுப்பு (New Testament Canon)

*புதிய ஏற்பாட்டு நூல்களாக எவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கேள்விக்கான பதில் இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்படாமல் இருந்தது. நொஸ்டிசிசத்தைப் பின்பற்றியோர் தங்களுடைய சொந்த நூல்களையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி வந்தனர். அவற்றில் சில நல்லவையாகவும், ஏனையவை மோசமானவையாகவும் இருந்தன. எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கக்கூடிய சத்தியத்தை எப்படித் தீர்மானிப்பது என்பது தொடர்ந்து ஒரு பிரச்சனையாக இருந்தது. மெய்யான வேத நூல்களை நிராகரிக்க முயன்று கொண்டிருந்த மார்க்கியனுக்கு எதிராக திருச்சபை போராட வேண்டியிருந்தது. புதிய ஏற்பாட்டில் அடங்க வேண்டிய நூல்கள் அப்போஸ்தலரால் எழுதப்பட்டதாகவோ அல்லது அவர்களுடன் மிக நெருக்கமாக இருந்தவர்களால் எழுதப்பட்டதாகவோ இருக்க வேண்டும் என்று ஐரேனியஸ் கூறினார். அவற்றை மட்டுமே அப்போஸ்தல போதனைகளாகவும், வேதமாகவும் ஐரேனியஸ் கணித்தார். சில காலத்திற்குப் பின்பு டர்டூலியன் ஒரு புதிய ஏற்பாட்டை எழுதி அது பழைய ஏற்பாட்டிற்கு சமமானது என்று அறிவித்தார். நான்காம் நூறாண்டின் இறுதிப் பகுதியில் (கி.பி 397) எந்தெந்த நூல்கள் புதிய ஏற்பாட்டில் இருக்க வேண்டும் என்ற முடிவான தீர்மானத்திற்கு சபையால் வர முடிந்தது. கி.பி 367 ல் கிழக்கில் அலெக்சாந்திரியாவில் இருந்த சபையும், கி.பி.397 ல் மேற்கில் கார்த்தேஜில் இருந்த சபையும் புதிய ஏற்பாட்டு நூல்கள் எவை என்ற தீர்மானத்திற்கு வந்தன.*

### விசுவாச அறிக்கை

*நொஸ்டிசிசத்தைப் பின்பற்றியோரோடு தர்க்கம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. அவர்கள் எல்லாவற்றையும் உவமைகளாகக் கருதி விளக்கம் கொடுத்து வந்தனர். அவர்கள் வேத சத்தியங்களையும்கூட திரித்து*

உவமைகளாகப் பயன்படுத்தி அவற்றிற்கு உண்மைக்கு மாறான விளக்கங்களைக் கொடுத்து வந்தனர். வேதத்திற்கு விளக்கங்கொடுக்கும் இந்தத்தவறான முறையால் திருச்சபைக்கு பெரும் ஆபத்திருந்தது. திருச்சபையை இத்தகைய ஆபத்திலிருந்து காப்பதற்காக அக்காலத்தில் ஞானஸ்நானம் எடுத்தவர்கள் ஒரு அடிப்படை விசுவாச அறிக்கையை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட்டார்கள். இது வேத சத்தியங்களை அவர்கள் உண்மையிலேயே புரிந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள உதவியது. இவ்விசுவாச அறிக்கையே பின்பு அப்போஸ்தலரின் அறிக்கை (Apostle's Creed) என்ற பெயரை அடைந்தது. சபை எதை விசுவாசிக்க வேண்டும் எனபதைத் தீர்மானிப்பதற்காக அப்போஸ்தலர் காலத்து ஆதி சபை விசுவாசித்த போதனைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றார் ஐரேனியஸ். அச்சபைகளின் பாரம்பரியங்கள் இதற்கு உதவும் என்பது ஐரேனியஸின் நம்பிக்கையாக இருந்தது. அக்காலத்தில் ஐரேனியஸின் இக் கருத்துக்கள் ஓரளவிற்கு பயன்தருவதாக இருந்தன. பின்பு காலம் செல்லச் செல்ல அப்போஸ்தலர்களின் போதனைகள் என்ன, பாரம்பரியங்கள் என்ன என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு குழப்பமே உருவாகியது.

இக்காலத்தில் Catholic என்ற வார்த்தையை திருச்சபையைக் குறித்து பயன்படுத்தத் தொடங்கினார்கள். இதற்கும் இன்று நம் மத்தியில் இருக்கும் கத்தோலிக்க சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்நூற்றாண்டில் சபையைத் தாக்கிய நொஸ்டிசிச கள்ளப்போதனை எதிர்ப்பதற்காக இந்தப் பெயரை சபை பயன்படுத்தியது. வேத சத்தியங்களை மட்டும் பின்பற்றிய சபைகள் இணைந்திருந்து எதிரியைத் தாக்க இது உதவும் என்று சபை நம்பியது. இவ்வார்த்தை சபை ஒற்றுமையைக் குறிக்கும் வார்த்தையே தவிர ரோமன் கத்தோலிக்க மதத்துடன் சம்பந்தமுடையது அல்ல. ரோமன் கத்தோலிக்க மதம் புரட்டஸ்தாந்து, சீர்திருத்த போதனைகளுக்கு எதிரான ஒரு சமயம். இதற்கும் வேதம் போதிக்கும் கிறிஸ்தவ திருச்சபைக்கும் ஒருக்காலும் தொடர்பில்லை. இரண்டாம் நூற்றாண்டில் கிழக்கில் அலெக்சாந்திரியாவிலும், மேற்கில் கார்த்தேஜிலுமாக ஆதி சபை Catholic church (ஒரே சபை) என்று அழைக்கப்பட்டது. மேற்கில் இருந்த சபையே பின்பு வேதத்தை விட்டு விலகிப்போய் ரோமன் கத்தோலிக்க சபையாக உருமாறியது.

### அப்போஸ்தலைப்போன்ற சபைத்தலைவர்கள் (Apostolic succession)

அப்போஸ்தலர்களைப்பின்பற்றி அவர்களைப்போல ஒரு தலைமை திருச்சபைக்கு வேண்டும் என்ற கருத்தையும் ஐரேனியஸ் முன்வைத்தார். அப்போஸ்தலரிடமிருந்து வந்துள்ள போதனைகளையும், பாரம்பரியங்களையும் பாதுகாப்பதற்கு இது அவசியமாகக் கருதப்பட்டது. பெரிய சபைகளில் யார் இவ்வாறாக தலைமை வகிக்க வேண்டும் என்ற பட்டியலும் போடப்பட்டது. ஐரேனியஸ், இக்காலத்தில் பிசப்புகளுக்கும் மூப்பர்களுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் பார்க்கவில்லை. அவை இரண்டும் ஒரே பதவியைக் குறிக்கும் பெயர்களாகவே கருதினார். இதுவே ஆதி சபையில் அப்போஸ்தலர்களின் போதனையாகவும் இருந்தது. இதேவிதமாகவே ரோம சபையின் எல்லாத் தலைவர்களும் சம அதிகாரமும், தகுதியும் கொண்டவர்களாக ஐரேனியஸ் கருதினார். இக்காலத்தில் மூப்பர் பணி மற்ற சபைத் தலைவர்களில் இருந்து வேறுபட்டு பிசப்பாக அதிகாரம் கொண்டதாக மாறிக் கொண்டிருந்தது. மூன்றாம் நூற்றாண்டில் டர்டூலியனுடையதும், கிளெமன்டினதும் காலத்துக்கு

நாம் வரும்போது இத்தகைய அதிகாரம் கொண்ட பிசப்பாட்சி ஏற்பட்டுவிட்டதைக் கவனிக்கலாம். அதன் பின்பு திருச்சபை எபிஸ்கொப்பே ஆட்சி முறையில் ஒற்றுமை கண்டு இதற்கு முன்பிருந்த பிசப்புகளின் பாரம்பரியங்களைப் பின்பற்றத் தொடங்கியது. இதுவே பின்பு ரோமன் கத்தோலிக்க சபை ஆட்சிக்கும், பாரம்பரியங்களுக்கும் இலகுவாக வழி விட்டது. வேதத்தின் அதிகாரமும் நிராகரிக்கப்பட்டு சபைப் பாரம்பரியங்கள் அதிகாரபூர்வமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### கோலைச் சேர்ந்த ஐரேனியஸ் (Irenaeus of Gaul)

180-250களுக்கிடையில் வாழ்ந்த சபைப்பிதாக்களில் முதல்வரான ஐரேனியஸ் 130 ல் ஆசியாவில் பிறந்தவர். அப்போஸ்தலரான யோவானின் சீடராக இருந்த பொலிகார்ப்பின் சீடராக ஐரேனியஸ் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரேனியஸுக்கு பொலிகார்ப்பை நன்கு தெரிந்திருந்ததால், பொலிகார்ப் மூலம் யோவானின் போதனைகளையும், ஆதி சபை நடவடிக்கைகளையும் அறிந்து வைத்திருக்க முடிந்தது. ஆகவே, இரண்டாம் நூற்றாண்டின் கடைசிக் காலப்பகுதியில் ஐரேனியஸ் தனக்குள் (யோவான், பொலிகார்ப் ஆகியோரின்) 200 வருடகால அனுபவங்களைக் கொண்டிருந்து நொஸ்டிசிசத்தைப் பின்பற்றியவர்களோடு தர்க்கம் செய்ய முடிந்தது. இக்காலத்தில் ஐரேனியஸ் பாரம்பரியம் என்று அழைத்தவை பெரிதும் உண்மையானவைகளாக ஆதி சபை கடைப்பிடித்த போதனைகளாக இருந்தன. காலம் செல்லச் செல்ல பாரம்பரியம் என்பது உண்மைக்குப் புறம்பானதாக மனிதனால் உண்டாக்கப்பட்டவையாக இருந்தன.

கோலில் (பிரான்ஸ்) பிசப்பாக இருந்த போதீனஸ் கொலை செய்யப்பட்டபோது ஐரேனியஸ் சபையின் பிசப்பாக நியமிக்கப்பட்டார். அவருடைய எழுத்துக்கள் திருச்சபைக்கு நல்ல பலனளித்தன. ஐந்து நூல்களாக ஐரேனியஸ் எழுதிய Against Heresies என்ற நூல் இன்றும் பதிப்பில் இருக்கின்றது. நொஸ்டிஸிசப் போதனைகளில் இருந்து திருச்சபையைக் காப்பதற்காக எழுதப்பட்ட இந்நூலின் முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது.

### அலெக்சாந்திரியாவும், கார்த்தேஜும்

அக்காலத்தில் ரோமர்கள் ஆபிரிக்கா என்று குறிப்பிட்டது வட ஆபிரிக்காவையே. இப்பகுதியில் இன்றைய டுனீசியா, அல்ஜீரியா, மொராக்கோ ஆகிய நாடுகளும் அடங்கும். நாம் இப்பகுதியில் மத்தியத்தரைக்கடலைச் சூழ்ந்த நாடுகள் அடங்கிய பிரதேசத்தைக் குறிக்க ஆப்ரிக்கா என்ற பதத்தைப் பயன்படுத்துவோம். இதில் எகிப்து, லிபியா போன்ற நாடுகளும் அடங்கும். ரோமர்களின் காலத்தில் இப்பிரதேசத்தில் இரு முக்கிய நகரங்கள் முதன்மையான இடத்தை வகித்தன. அவை வட கிழக்கிலிருந்த அலெக்சாந்திரியாவும், வட மேற்கிலிருந்த கார்த்தேஜுமாகும்.

### அலெக்சாந்திரிய திருச்சபை: கிளெமென்டும் ஓரிகனும்

ரோம சாம்ராஜ்யத்தில் ரோமுக்குப் பிறகு அலெக்சாந்திரியா முக்கிய இடத்தை வகித்தது. ரோம், ரோம சாம்ராஜ்யத்தின் சட்ட நிர்வாகத் தலைநகராக இருந்தால், அலெக்சாந்திரியா அதன் கலாச்சார மற்றும் புத்திஜீவிகளின் தலைநகராகவும் ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு முக்கிய

*துறைமுகமாகவும் விளங்கியது. ஹெலனிசக் கலாச்சாரத்தைக் கொண்டிருந்த இந்நகரில் ஒரு பெரும் யூத சமுதாயமும் வாழ்ந்து வந்தது. அலெக்சாந்திரியாவில் கிறிஸ்தவம் எப்போது ஆரம்பித்தது என்பது தெரியவில்லை. அப்போலஸ் அங்கிருந்து வந்ததாக அறிகிறோம் (அப்போஸ். 18:24-28). ஹெலனிசத்தைப் பின்பற்றிய யூதர்கள் மத்தியில் கிறிஸ்தவம் தலைதூக்கியிருக்கலாம்.*

### அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளெமன்ட்

*அலெக்சாந்திரியாவின் முதல் பெரும் கிறிஸ்தவ போதனையாளராக கிளெமன்ட் இருந்தார். இவருடைய எழுத்துக்களை காலம் அழித்துவிட வில்லை. கி. பி. 170-180 களுக்கிடையில் அலெக்சாந்திரியாவில் இருந்த கிளெமன்ட் கிறிஸ்தவர்களுக்கெதிராக எழுந்த துன்புறுத்தல்களால் 202 க்குப்பிறகு அலெக்சாந்திரியாவில் இருக்கவில்லை. 215 இல் அவர் ஆசியா மைனரில் மடிந்ததாக அறிகிறோம். கிறிஸ்தவராக மாறிய கிளமென்ட் ரோம ராஜ்யம் முழுவதும் பிரயாணம் செய்து பல கிறிஸ்தவ ஆசிரியர்களை சந்தித்து அவர்களிடம் கிறிஸ்தவ போதனைகளைப் பெற்றுக் கொண்டார். பென்டேனஸ்* (Pantaenus) *என்ற மனிதர் கிளெமன்டை மிகவும் கவர்ந்தார். அலெக்சாந்திரியாவிலிருந்த பென்டேனஸ் ஸ்டொயிக் தத்துவஞானியாக இருந்து கிறிஸ்துவை அறிந்து கொண்ட மனிதன். கிழக்கிற்கு இந்தியாவரை மிஷனரியாகப் போய்வந்த பென்டேனஸ் அலெக்சாந்திரியாவில் நொஸ்டி-சிசத்தைவிட கிறிஸ்தவம் மேலானது என்று காட்டும்படியாக ஒரு கிறிஸ்தவ தத்துவ கல்லூரியை நிறுவி நடத்தி வந்தார். கிளெமன்ட் பென்டேனஸுடன் இருந்து 190 ல் அவர் இறந்தபிறகு இக்கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றார்.*

*கிளெமன்டின் எழுத்துக்களில் மூன்று நம்மை வந்தடைந்துள்ளன. முதலாவது, "கிரேக்கர்களுக்கான போதனை" என்ற நூல். கிரேக்கர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளுவதற்காக கிளெமன்ட் இதை எழுதினார். கிறிஸ்துவை தெய்வீக வார்த்தையாக இதில் கிளெமன்ட் விளக்கியுள்ளார். இரண்டாவது, "ஆசிரியர்" என்ற நூல். இது புதிதாக கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்களுக்கான நூல். கிறிஸ்தவன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற எளிமையான போதனையை இந்நூல் அளிக்கிறது. மூன்றாவது, "தரைவிரிப்புப் பை" என்ற தலைப்பைக் கொண்ட ஒரு விநோதமான நூல். கிரேக்க தத்துவத்தில் நல்ல அறிவைக் கொண்டிருந்த கிளமென்ட் தன் நூல்களில் அவற்றை நன்றாகப் பயன்படுத்தி கிரேக்கர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் விதத்தில் கிறிஸ்தவ போதனை அளித்தார். தமது கிரேக்க தத்துவ அறிவைப் பயன்படுத்தி நொஸ்டிசிசப் போதனைகளுக்கெதிராக வாதாடி கிறிஸ்துவை கிரேக்கர்களுக்கு விளக்க கிளெமன்டின் நூல்கள் முயன்றன. சில வேளைகளில் கிளெமன்டின் எழுத்துக்களில் தத்துவம் அவர் மேல் தேவைக்குமேலான பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததையும் பார்க்க முடிகின்றது. கிரேக்க தத்துவங்களையெல்லாம் விட கிறிஸ்தவம் மேலானது என்பதை தத்துவத்தை நாடி அலைந்த கிரேக்கர்களுக்கு எளிதாக எடுத்துக்கூறக்கூடிய வல்லமை கிளெமன்ட்டுக்குப்-பின் அவருடைய சீடரான ஒரிகனுக்கு மட்டுமே இருந்தது என்று கூற வேண்டும்.*

*இக்காலப்பகுதியில் திருச்சபை சந்தித்திருந்த மிகத்திறமைசாலியான போதகர்களில் ஒருவரான ஒரிகனை அடுத்த இதழில் சந்திப்போம்.*

*(வளரும்)*

# வில்லியம் கேரி

கிறிஸ்துவின் அன்பை இந்திய மக்கள் அனுபவிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு வார்ட், மார்ச்மன் ஆகியோரோடு இந்தியாவில் காலடி எடுத்து வைத்த வில்லியம் கேரி தனது இறுதிக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். பெங்காலி மொழியில் அவர் உழைத்துத் தயாரித்த வேதாகமம் முழுவதுமாக அச்சிடப்பட்டு வெளிவந்தது. கேரிக்கு அது அளவில்லாத ஆனந்தத்தைத் தந்தது. கேரியின் உடல் நலம் தளர்ந்து கொண்டிருந்த காலம் இது. அதே நேரம் அவரோடிருந்த பலர் கர்த்தரின் சந்நிதானத்தை அடைந்திருந்தனர். ஆகஸ்டு 1822 ல் கிருஷ்ணபால் தனது 56 வது வயதில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு கர்த்தரடி சேர்ந்தார். கிருஷ்ணபாலின் போதக ஊழியத்தின் மூலம் அநேக இந்தியர்கள் கர்த்தரை அறிந்து கொண்டிருந்தனர். அவர் இறக்கும் தருவாயில் இருக்கும்போது ஒருவர், கிருஷ்ணா, நீங்கள் இன்னும் இயேசுவை நேசிக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு கிருஷ்ணபால், இயேசு என்னை நேசிக்குமளவுக்கு என்னால் அவரை நேசிக்க முடியவில்லை என்று பதிலளித்தார்.

கேரியை விட எட்டு வயது குறைந்த வார்ட் மார்ச் 7, 1823 ல் காலாரா நோயினால் கர்த்தரடி சேர்ந்தார். இறுதியில் கேரியும் ஜூன் 9 , 1834 ல் கர்த்தரடி சேர்ந்தார். வார்டும், மார்ச்மனும், கேரியும் இணைந்து செய்த சுவிசேஷ பணிகளை வெறும் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. அவர்களுடைய நேர்மையும், இறைபக்தியும், கடுமையான உழைப்பும், துணிவும் சாதித்த காரியங்களை முழுமையாக எழுத்தில் வடித்துவிட முடியாது. உலக சுகத்தை நாடாது, பெயருக்கு ஆசைப்படாது, தங்களை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யாது, மனைவி பிள்ளைகளையும்கூட பலி கொடுத்து கர்த்தருக்காக உழைத்த நல்மனிதர்கள் இவர்கள். தான் இறந்தபிறகு தன்னைப் புதைக்கும் இடத்தில், "ஏழ்மையானவனும், பலவீனமான புழுவுமான நான் உமது கருணைக் கரங்களில் வீழ்கிறேன்" என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எதையும் எழுதிவைக்கக்கூடாது என்று கேரி கட்டளையிட்டிருந்தார். அவர் எப்படிப்பட்ட தாழ்மையுள்ள ஊழியர் என்பதை இது விளக்குகிறது.

கேரியின் வாழ்க்கை சரிதத்தை இதுவரை பார்த்து வந்த நாம் அவருடைய பெரும் சாதனைகளில் முக்கியமான மொழிபெயர்ப்புப் பணிகளை ஒரு முறை திரும்பிப்பார்க்காமல் இதை முடிக்க முடியாது. கேரி இந்தியாவின் வங்காளத்தில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்தபோது இந்திய மொழிகளில் தமிழ் வேதாகமம் மட்டுமே முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இதை சீகன்பால்க், சுள்ட்ஸ், பெப்ரிசியஸ் ஆகியோர் மொழிபெயர்த்திருந்தனர். இந்தியில் புதிய ஏற்பாட்டையும், சங்கீதத்தையும் சுள்ட்ஸ் மொழிபெயர்த்திருந்தார். பிளிப்ஸ் என்பவர் புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டில் மோசேயின் ஐந்து நூல்களையும் சிங்கள மொழியில் மொழி பெயர்த்திருந்தார். இந்தி மொழிபெயர்ப்பு அத்தனை துல்லியமாக அமைந்திருக்கவில்லை. ஆகவே, தமிழரும், சிங்கள மக்களும் மட்டுமே தங்களுடைய மொழிகளில் வேதாகமத்தை வாசிக்கக்கூடியதாக இருந்தது. இந்தியாவின் தென்பகுதியிலும், அதற்கு வெளியில் இருந்த இலங்கைத்தீவிலும் இவ்விரு விளக்குகள் மட்டுமே அக்காலத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

*இந்தியாவின் பெரும் பகுதி இருட்டில் இருந்தது. தன் வாழ்நாள் முடியுமுன் முழு இந்தியாவிலும் வேதவிளக்கேற்றி அவ்விருளை அகற்றியிருந்தார் வில்லியம் கேரி.*

*1803 ல், கர்த்தர் தனக்கு இன்னும் பதினைந்து வருட வாழ்வைத் தந்தால் பெங்காலி, இந்தி, பஞ்சாபி, ஒரிசா, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் இலட்சியத்தை மனதில் கொண்டிருந்தார் கேரி. புதிய ஏற்பாட்டை மட்டுமாவது இந்த எட்டு மொழிகளிலும் எப்படியாவதுமொழி பெயர்த்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்தார். 1819 ம் ஆண்டு முடிவதற்குள் கேரி பெங்காலியிலும், இந்தியிலும் வேதாகமத்தை மொழிபெயர்த்தது மட்டுமல்லாமல் அவற்றின் பல பதிப்புகளையும் வெளியிட்டிருந்தார். பஞ்சாபியில் புதிய ஏற்பாடு முழுவதையும், பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியையும் வெளியிட்டிருந்தார். ஒரிசா, மராத்திய மொழிகளில் முழு வேதத்தையும், புதிய ஏற்பாட்டை குஜராத்தி மொழியிலும் வெளியிட்டிருந்தார். தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளில் புதிய ஏற்பாடு முழுவதையும் வெளியிட்டிருந்தார். தான் மனதில் கொண்டிருந்த திட்டங்களையெல்லாம் தாண்டி மொழி பெயர்ப்பு வேலை-களில் முன்னேற்றம் கண்டிருந்தார் கேரி.*

*அதுமட்டுமல்லாமல், சமஸ்கிருத மொழியில் வோதாகமத்தை வெளியிட்டிருந்தார் கேரி. இது அவரது திட்டங்களில் ஒன்றாக இருக்கவில்லை. ஆப்கானிஸ்தானிய பெஸ்த்தோ மொழியில்புதிய ஏற்பாடு முழுவதையும் மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தார். அசாமிய, காஷ்மீர் மொழிகளிலும் புதிய ஏற்பாட்டின் பகுதிகளை வெளியிட்டிருந்தார். கேரி வெளியிட்ட சமஸ்கிருத வேதாகமம் சமஸ்கிருதத்தோடு தொடர்புகொண்டிருந்த ஏனைய இந்திய மொழிகளில் வேதத்தை மொழி பெயர்க்க பண்டிதர்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.*

*முழு வேதாகமத்தையும் ஐந்து வால்யூம்களாக வெளியிடுவதே கேரியின் திட்டமாக இருந்தது. பெங்காலி, ஒரியா, இந்தி, சமஸ்கிருதம், மராத்தி, ஆசாமி ய மொழிகளான ஆறு இந்திய மொழிகளில் இதனை கேரி செய்து முடித்திருந்தார். இம்மொழிகளை வட இந்தியாவின் பல கோடி மக்கள் பேசி வந்தனர். சமஸ்கிருதமோ தெற்கிலும் புழக்கத்தில் இருந்தது. தனது மொழிபெயர்ப்புகள் அனைத்தும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் கேரி அதிக கவனம் செலுத்தி உழைத்திருந்தார்.*

*1803 ல் இந்திய மொழிகள் பலவற்றில் வேதாகமத்தை மொழி பெயர்க்க கேரி கர்த்தரிடம் பதினைந்து ஆண்டுகள் வாழக்கேட்டிருந்தார். ஆனால், கர்த்தர் அவருக்கு முப்பது ஆண்டுகால வாழ்வை அளித்தார். இந்திய மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்க்க ஆரம்பித்தபோது சமஸ்கிருத மொழியை அறிந்திருப்பதன் முக்கியத்துவதை கேரி உணர்ந்தார். வட இந்திய மொழிகள் இந்தியில் இருந்து வளராமல் சமஸ்கிருதத்தையே அடிப்படை மொழியாகக் கொண்டிருந்தன என்பதை கேரீ அறிந்து கொண்டார். மொழி பெயர்ப்பு வேலைகளுக்கு ஒவ்வொரு மொழிக்கும் தகுந்த பண்டிதர்களைப் பயன்படுத்திக் கொள்வதில் கேரி அதிக கவனம் செலுத்தினார். சில வேளைகளில் தகுதியான ஒருவருக்காக பல காலங்கள் காக்க வேண்டியிருந்தது. இந்தியாவின் முக்கிய மொழிகளில் மட்டுமல்லாமல் குறு மொழிகள் பலவற்றிலும் வேதாகமத்தை மொழி பெயர்க்க ஆர்வம் கண்டு அதிலும் கேரி பல வெற்றிகள் கண்டிருந்தார்.*

தன் வாழ்நாளில் இந்தியாவின் முப்பத்தி ஐந்து மொழிகளில் முழு வேதாகமத்தையோ அல்லது அதன் பகுதிகளையோ கேரி மொழி பெயர்த்திருந்தார்.

இங்கிலாந்தின் ஒரு கிராமப்புற சபையில் போதகராக இருந்த கேரி கர்த்தரின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு வந்து இத்தனை பெரும் சாதனைகளை செய்து கர்த்தரின் திருச்சபை அலங்கரிக்கும் சிறந்த கற்களில் ஒன்றாக மாறியிருந்தார். இந்தியா இருக்கும்வரை கேரியின் பெயர் மறையாது. அவர் போற்றித் துதித்த கிறிஸ்துவின் பெயரும் இந்திய மொழிகளில் உள்ள வேதாகமத்தின் மூலம் பாரதத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும். இப்பகுதியை முடிக்கு முன் கேரியின் வாழ்வின் மூலம் நாம் படிக்க வேண்டிய சில படிப்பினைகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

**1) கர்த்தரின் அழைப்பு** - கேரி கர்த்தரின் அழைப்பை ஏற்று ஊழியத்திற்காக தன்னைத் தயார் செய்து கொண்டார். போதக ஊழியத்தை அவர் சாதாரணமானதொன்றாகக் கருதவில்லை. அதற்குத் தேவையான திறமைகளை அவர் தன்னில் வளர்த்துக் கொண்டார். பள்ளிக்குப் போய் படிக்காவிட்டாலும் அவர் படிப்பதை ஒருபோதும் கைவிடவில்லை. கேரியைப் பொறுத்தவரையில் ஊழியத்திற்கான அழைப்பு என்பது ஒருவர் தன் மனதில் ஏற்படுத்திக் கொள்ளும் சுயநலமுள்ள ஒரு குருட்டு ஆர்வமாக இருக்கவில்லை. அது நெருப்புப்போல் பற்றி எரிந்து ஒரு ஆத்துமாவை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் கர்த்தரின் உடும்புப் பிடி. கர்த்தர் என்னோடு பேசினார், கர்த்தர் என்னை அழைத்தார் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு எந்தவித தகுதியுமி ல்லாமல் சுயநலத்திற்காக இன்று ஊழியம் செய்ய வருகிறவர்கள் கேரியின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து திருந்திக் கொள்ள வேண்டும்.

**2) திருச்சபைக்கு கேரி தந்த மதிப்பு** - கர்த்தர் தன்னை அழைத்த நாளில் இருந்தே கேரி திருச்சபைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தார். ஆரம்பத்தில் ஒரு கிராமத்தில் ஆனந்தத்தோடு போதக ஊழியத்தை ஏற்றுக் கொண்டார். ஊழியத்தில் சிறியது, பெரியது என்ற எண்ணம் எல்லாம் அவர் மனதில் ஒருபோதும் தோன்றியதில்லை. செய்யும் அனைத்தையும் கர்த்தரின் துணையோடு கர்த்தருக்காக செய்வதாகவே கேரி கருதினார். அவ்வாறு சபை ஊழியத்தில் ஈடுபட்டிருந்தபோதே இங்கிலாந்துக்கு வெளியே வேற்று நாடுகளில் கர்த்தரை அறியாதவர்கள் மத்தியில் சுவிசேஷத்தை போதிக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் கேரிக்கு ஏற்பட்டது. அதற்காக கேரி தான் நினைத்தபடி நடந்து கொள்ளவில்லை. அவ்வூழியத்திற்குத் தேவையான தகுதிகளை அவர் தம்மில் வளர்த்துக் கொள்ளத் தொடங்கினார். திருச்சபையிடம் தன்னுடைய விருப்பத்தைக் குறித்து எடுத்துச் சொல்லி அதன் அனுமதிக்காகக் காத்திருந்தார். பல முறை பிரசங்கித்து திருச்சபைத் தலைவர்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியத்திற்கான ஆர்வத்தை ஏற்படுத்த பாடுபட்டார். இறுதியில் திருச்சபை-யின் அனுமதியுடன் இந்தியாவிற்கு புறப்பட்டார். இந்தியாவிலும் கேரி திருச்சபை ஊழியத்திலேயே ஈடுபட்டிருந்தார் என்பதை மறக்கக்கூடாது. அவர் செய்து வந்த அனைத்து ஊழியங்களும் திருச்சபை ஊழியங்களின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. சபையை உதாசீனம் செய்வது கேரி வாழ்ந்து வளர்ந்த நாட்டு ஆத்துமாக்களுக்கு இன்று வழமையாக இருக்கிறது. கேரியைப் போல நாமும் திருச்சபைக்கு உரிய இடத்தைக் கொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

**3) கடுமையான உழைப்பு** - *கேரியின் சாதனைகளைப் பற்றி பெருமை அடித்துக்கொள்ளும் சிலர் கேரியின் உழைப்பை மறந்து விடுகிறார்கள். சும்மா இருந்து சோறு சாப்பிடுவது கேரியின் வாழ்க்கையாக இருக்கவில்லை. ஊழியத்தை வைத்து தன்னை வளர்த்துக் கொள்ளும் வித்தையை கேரி அறிந்திருக்கவில்லை. இங்கிலாந்துக்கு பணம் வேண்டும், பணம் வேண்டும் எனறு எழுதி தன் கையை உடைத்துக் கொள்ளவில்லை. தானே சக ஊழியர்களுடன் சேர்ந்து தோட்டம் வைத்து வீட்டுக்குத் தேவையானதை வளர்த்துக் கொண்டார். கல்லூரி ஆசிரியர் பதவியின் மூலம் அவர் ஊழியத்திற்கும் வீட்டுக்கும் தேவையான வருவாயைத் தேடிக் கொண்டார். இவ்வாறு வேலை செய்தால் ஊர் என்ன நினைக்கும், அது போதகனான தனக்கு மதிப்பளிக்காத செயல் என்றெல்லாம் கேரி கனவிலும் நினைக்கவில்லை. உழைக்க மறுக்கிறவனுக்கு உண்ணும் தகுதியில்லை என்பது கேரியின் கொள்கை. இதற்காக அவர் எந்த உதவியையும் பெற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. உதவி கிடைக்காதபோது அவர் பேர் தெரியாதவர்களுக்கெல்லாம் 'இமெயில்' அனுப்பி பணம் கேட்டு அலையாமல் மானத்தோடு உழைத்து போதக ஊழியம் செய்தார்.*

*கேரி உழைத்த உழைப்பை அவருடைய சாதனைகளே சொல்லும். ஆங்கிலம் மட்டுமே தெரிந்திருந்த கேரி இந்தியாவுக்கு வந்து இந்திய மொழிகளில் அநேக மானவற்றில் பாண்டித்தியம் அடைந்து அம்மொழிகளில் முதல் முறையாக இலக்கண நூல்களையும் எழுதி அறிமுகப்படுத்தி வேதாகமத்தையும் மொழி பெயர்த்தார் என்றால் அத்தனையும் கடும் உழைப்பில்லாம் ஆகிற காரியமா என்ன? இத்தனையையும் செய்வதற்கு எத்தனை நேரம் இரவு பகலாக படித்திருக்க வேண்டும். தாய் வயிற்றில் இருந்து வந்தது முதல் தெரிந்திருந்த மொழியில் பேசுவதற்கும், எழுதுவதற்குமே நமக்குத் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறது. முப்பதி ஐந்து மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பது என்றால் சாதாரணமான காரியமா? அதற்கு எத்தனை பாடுபட்டிருக்க வேண்டும் கேரி. இத்தனையும் கடும் உழைப்பு. கடுமையாக உழைத்து, வேதத்தைப் படித்துப் பிரசங்கிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கும் போதகர்கள் இதைக் கவனிக்க வேண்டும். உழைத்துப் படித்துப் போதிக்காத வர்கள் மெய்யான போதக அழைப்பை ஒருபோதும் பெற்றிருக்க முடியாது.*

**4) தாழ்மைக்கும், எளிமைக்கும் வாழ்வில் சிறப்பு** - *கேரி மிகத் தாழ்மையுள்ள ஒரு மனிதர் என்பதற்கு அவர் இறக்கும்போது கூறிய வார்த்தைகளே நல்ல உதாரணம். தனது கல்லறையில் தன்னைப் பற்றிய எந்த விபரங்களையும் எழுதி வைக்க அவர் விரும்பவில்லை. நிர்ப்பந்தமான, சாதார-ணமான மனிதன் என்று மட்டுமே எழுதி வைக்க அவர் உத்தரவிட்டிருந்தார். இருக்கும்போதே பெயருக்குபின் பல 'டிகிரிகளை' எழுதி வைக்க ஆசைப்படும் நம்மவர்கள் கேரியிடம் இருந்த தாழ்மையை எண்ணிப் பார்க்க வேண்டும். கேரி மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். பகட்டையும், பந்தோபஸ்தையும் அவரிடம் பார்க்க முடியாது. தன் பிள்ளைகளையும் கூட சாதாரண மனிதனின் பிள்ளைகளைப் போலவே அவர் வளர்த்திருந்தார். பதவிக்கும், பெருமைக்கும் அவர் ஒருபோதும் ஆசைப்படவில்லை. இந்தத் தாழ்மையும், எளிமையுமே அவரை இந்திய மக்கள் இலகுவாக ஏற்றுக் கொள்ளுவதற்குக் காரணமாக இருந்தன. கேரியின் வாழ்க்கை நம்மை மாற்றுமா? நம்மூழியங்களைத் திருத்துமா?* *(நிறைவு)*

# 1 கொரிந்தியர் 12-14

இதுவரை 12 வது அதிகாரத்திலிருந்து பவுல் ஆவிக்குரிய வரங்கள் பற்றி கொடுத்துவரும் விளக்கங்களைப் பார்த்து வருகிறோம். மலர் 7 இதழ் 4 ல் 14 வது அதிகாரத்தில் 1 முதல் 25 ம் வசனம் வரைக்குமான விளக்கங்களைத் தந்தோம். இதுவரை பவுல் அன்பே மேலான வரம் என்றும், எத்தனை வரங்களிருந்தாலும் அன்பில்லாவிட்டால் ஒரு பயனும் இல்லை என்றும் சொல்லியிருப்பதைக் கவனித்தோம். அது மட்டுமல்லாமல் வெறுமனே அந்நிய பாஷையைத் தேடி அலையாமல் கேட்பவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் இருக்கும் தீர்க்கதரிசனத்தை, அதாவது கர்த்தருடைய வேதத்தை வெளிப்படையாக அறிவிக்கும் வரத்தை நாடுங்கள் என்றும் பவுல் அறிவுரை கூறியிருப்பதைப் பார்த்தோம்.

இனி 26 முதல் இவ்விதிகாரத்தின் இறுதிப்பகுதிவரையுள்ள வசனங்களில் பவுல் அளிக்கும் போதனையைப் பார்ப்போம். 26 ம் வசனத்தைப் பார்த்தால் அவ்வசனத்தில் நாம் ஏற்கனவே சந்தித்துள்ள ஒரு வார்த்தைப் பிரயோகம் இருப்பதை அறிய முடிகிறது. “நீங்கள் கூடி வந்திருக்கிறபோது” என்பதே அந்த வார்த்தைப் பிரயோகம். இதை நாம் 11:20 ல் ஏற்கனவே கவனித்தோம். இவ்வார்த்தைப் பிரயோகம் திருச்சபை அதிகாரபூர்வமாக கூடிவருகிறதை குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் இவ்வசனத்தில் இருந்து இப்பகுதியின் முடிவுவரை சபை கூடிவரும்போது கிறிஸ்தவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறைகளைக் கொடுப்பதை நாம் இனி விளக்கமாகப் பார்ப்போம். சபை கூடி வரும்போது என்பது சபை ஆராதனைக்காக கூடிவருவதைக் குறிக்கும். அப்படி ஆராதனைக்காக சபை கூடிவரும் வேளையில் விசுவாசிகளின் நடத்தை எப்படி இருக்க வேண்டும் என்பதுதான் இங்கே தரப்படுகிற விளக்கம்.

முதலில் 26 ம் வசனத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வசனத்தில் பவுல், “நீங்கள் கூடிவருகிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான்; ஒருவன்போதகம் பண்ணுகிறான்; ஒருவன் அந்நிய பாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான், சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது” என்கிறார். இவ்வசனத்தை நாம் தெளிவாக ஆராய வேண்டும். வசனங்களை நாம் நினைத்தவிதத்தில் பொருள்கொடுத்துப் புரிந்து கொள்ளக்கூடாது என்று ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். ஒரு வசனத்தின் மொழி நடை, இலக்கணம், சந்தர்ப்பம் ஆகியவற்றை ஆராய்ந்து எப்போதும்அதை விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவ்வேதப்பகுதியின் முழுப்பொருளையும் நாம் தவறாகப் புரிந்துகொள்ள நேரிடும். அதனால் கர்த்தர் சொல்லியிருப்பதை நாம் அறிந்துகொள்ள முடியாமல் போய்விடும்.

பவுல் இந்த வசனத்தில் கொரிந்தியர்கள் இப்படித்தான் சபைகூடிவரும்போது நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறாரா? அல்லது இப்படித்தான் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்று சொல்லி அவர்கள் சபையில் நடந்து கொள்ளும்விதத்தை வர்ணிக்கிறாரா? இந்தக் கேள்விக்கான பதில் மிகவும்

அவசியமானது. ஏனென்றால், பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், சபையில் யாரும் எதையும் செய்யலாம் அதற்கு வேதம் எந்தக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை என்று சொல்லுபவர்களும் இவ்வசனத்தை வைத்துக் கொண்டு பவுல் இப்படித்தான் சபையில் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார் என்று விளக்கம் தருகிறார்கள். அதாவது, இவ்வசனத்தில் காணப்படும் பவுலின் போதனையின்படி ஐந்து பேரோ அதற்கு மேலானவர்களோ சபையில் எப்போதும் ஆராதனையில் பங்கு கொள்ளலாம். ஆராதனையில் ஒருவர் அல்லது இருவர் மட்டும் பங்கு கொள்வது ஆகாது. சரீரத்திலுள்ள அங்கங்கள் எல்லாம் ஏதாவது ஒரு தொழிலை செய்வதுபோல் ஆராதனையில் சபை மக்கள் எல்லோரும் எதையாவது செய்ய வழி செய்து கொடுக்க வேண்டும் என்று பவுல் சொல்வதாக விளக்கம் தருகிறார்கள். இவர்கள் இவ்வசனத்தை கொரிந்து சபையில் நடக்க வேண்டிய காரியங்களை விளக்கும் வசனமாக (Prescriptive sentence) எடுத்துக் கொள்கிறார்கள்.

இந்த விளக்கம் சரியா? என்பதை நாம் ஆராய வேண்டும். இவ்வசனத்தை மீண்டும் படித்துப் பார்த்தால் அது சபையில் ஆராதனை இந்தமுறையில்தான் நடக்க வேண்டும் என்று பவுல் கூறுவதுபோல் எனக்குத் தோன்றவில்லை. பவுல் இது என்ன? என்ற கேள்விக் குறி எழுப்பியிருப்பதைக் கவனியுங்கள். பவுல் நீங்கள் செய்வது சரியா? என்ற கேள்விக் குறி எழுப்புகிறார். இப்படித்தான் நடக்க வேண்டும் என்று பவுல் சொல்லியிருந்தால் இப்படி ஒரு கேள்விக்குறி இவ்வசனத்தில் எழ வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, இந்த வசனம் இப்படித்தான் நடக்க வேண்டும் (Prescriptive) என்ற போதனை-யைத் தரும் வசனமல்ல. மாறாக பவுல் இவ்வசனத்தில், இப்படித்தான் நீங்கள் சபை கூடி வரும்போது நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் செய்வது சரியா? என்று கேட்கிறார். நம்மொழியிலே சொல்லப்போனால், “என்னப்பா! சபை கூடிவரும்போது ஒருத்தன் சங்கீதம் பாடுகிறான், ஒருத்தன் போதகம் பண்ணுகிறான், இன்னொருத்தன் அந்நிய பாஷை பேசுகிறான். இன்னொருத்-தன் இரகசியம் பேசுகிறான். இப்படி ஒவ்வொருத்தனும் தான் நினைத்தபடி சபையில் காரியம் செய்யலாமா? இது அழகா? இப்படி செய்வது சரியா?” என்றுதான் பவுல் கேட்கிறார். ஆகவே, இவ்வசனத்தை நாம் அக்காலத்தில் சபையில் நடந்து கொண்டிருந்ததை வர்ணிக்கும் வசனமாகத்தான் (Descrip-tive) எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவே இவ்வதிகாரம் முழுவதற்கும் பொருத்தமான விளக்கம். இப்பகுதியை நாம் மேலும் விபரமாகப் பார்க்கும்போது இது இன்னும் தெளிவாகும்.

சபையில் கொரிந்தியர்கள் நடந்து கொள்ளும் முறையை வர்ணித்து அது சரியல்ல என்று சுட்டிக் காட்டிய பவுல் அதைத் தொடர்ந்து 27 ம் வசனம் முதல் சபையில் கொரிந்தியர்கள் எப்படி ஆராதனை செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளை விளக்கத் தொடங்குகிறார்.

### அந்நிய பாஷையில் பேசுவதற்குக் கட்டுப்பாடு

முதலாவதாக, அந்நிய பாஷை பற்றிய விளக்கத்தை பவுல் அளிக்கிறார். அந்நிய பாஷை பேச வேண்டிய நிலை ஏற்பட்டால் (யாராவது அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால்) இரண்டு பேர் மட்டுமே பேச வேண்டும் என்பது பவுலின் கட்டளை. அந்நிய பாஷையில் பேச வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பேச வேண்டிய நிலை ஏற்பட்டால் இரண்டு பேர் மட்டும் பேசுவது

*நல்லது என்பது பவுலின் முடிவு. இது அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகள் என்பதையும் பவுலின் வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தைகள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு பவுல், மூன்று பேருக்கு மேல் ஒருபோதும் சபையில் அந்நிய பாஷையில் பேசக்கூடாது என்கிறார் (மிஞ்-சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும்). பவுல் இங்கே அந்நிய பாஷை பேசுகிறவர்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதைக் கவனியுங்கள். இன்று பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டம் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் தான் நினைத்ததை செய்து கொண்டிருக்கிறது.*

*இந்த மூன்று பேரும் ஒவ்வொருவராக மட்டுமே அந்நிய பாஷையை பேச வேண்டும் என்றும் அப்படி பேசுகிறவர்கள் சொல்கிறவற்றிற்கு அர்த்தஞ் சொல்ல ஒருவர் இருக்க வேண்டும் என்றும் பவுல் 27 ம் வசனத்தில் சொல்கிறார். அர்த்தஞ் சொல்கிறதற்கு ஒருவர் இல்லாவிட்டால் சபையில் ஒருவரும் அந்நிய பாஷையில் பேசக் கூடாதென்று பவுல் கட்டளையிடுகிறார். அர்த்தஞ் சொல்ல ஒருவனும் இல்லாத பட்சத்தில், அந்நிய பாஷை பேச எண்ணுகிறவன் "தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன் (28)" என்கிறார் பவுல். இதை எங்கே இன்று பெந்தகொஸ்தே கூட்டம் படித்துப் பார்க்கிறது. 28 ம் வசனத்தில் பவுலின் வார்த்தைகள் கேலி செய்யும் முறையில் அமைந்துள்ளன. கர்த்தருடைய காரியங்களை நகைச்சுவையாக பேசுவது தவறு. ஆனால், பவுல் இங்கே கொரிந்தியர்களின் செயலைப் பார்த்து நகைக்கிறார். "தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன் (28)" என்பதற்கு நீ தனியாக ஜெபத்தில் கர்த்தருக்கு முன்னால் அந்நிய பாஷை பேசு என்று பொருள் கொடுக்கக்கூடாது. இது கேலி வார்த்தைகள். அதாவது பொருளற்ற வார்த்தைகள். இவ்வார்த்தைகளுக்கு எழுத்து பூர்வமான* (Literal) *விளக்கம் கொடுக்கப் பார்க்கக் கூடாது. ஜெபத்தில் அந்நிய பாஷை பேசுவது என்று ஒன்று என்றுமே இருக்கவில்லை. அது பெந்தகொஸ்தே கூட்டத்தின் புதுக் கண்டுபிடிப்பு. பவுல் இவ்வார்த்தைகள் மூலம், கொரிந்திலிருந்த அந்நிய பாஷை பேசியவர்களைப் பார்த்து, நீங்கள் பேசப் பேசும் காரியங்களுக்கு அர்த்தஞ் சொல்ல ஒருவர் சபையில் இல்லை என்று கர்த்தர் காட்டினால் நீங்கள் ஒருவரும் அந்நிய பாஷையில் சபையில் பேசக் கூடாது. நீங்கள் சொல்ல வந்ததை உங்களுக்குள்ளேயே அமைதியாக இருந்து விடுங்கள் என்கிறார். இதுதான் இங்கே பவுல் தரும் போதனை.*

**தீர்க்கதரிசனம் பேசுவதற்குக் கட்டுப்பாடு**

*அடுத்ததாக தீர்க்கதரிசனத்தை சபைகூடி வரும்போது எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று பவுல் விளக்குகிறார். ஏற்கனவே அந்நிய பாஷை பேசுபவர்களுக்கு விதித்த கட்டளைகளையே தீர்க்கதரிசனம் பேசுபவர்களுக்கும் பவுல் விதிக்கிறார். மூன்று பேருக்கு மேல் சபையில் எவரும் தீர்க்கதரிசனம் பேசக்கூடாது (14:29ம் வசனம்). அப்படிப் பேசுபவர்களும் ஒவ்வொருவராகத்-தான் பேச வேண்டும். ஆனால், அந்நிய பாஷை பேசுபவர்களுக்கு விதிக்காத ஒரு புது நிபந்தனை தீர்க்கதரிசனத்தைக் குறித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் "மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்" என்று சொல்லியிருக்கிறார். அதாவது, தீர்க்கதரிசனத்தை கேட்டுக்கொண்டிருக்கிற ஆத்துமாக்கள் கொடுக்கப்படுகிற தீர்க்கதரிதனம் தேவனின் வெளிப்படுத்தலா? என்று ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும் என்பது இதன் பொருள். ஆங்கில வேதத்தில்* "let the others judge" *என்றிருக்கிறது.*

பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டம் இதற்கு விளக்கம் கொடுக்கும்போது தீர்க்கதரிசனம் சில வேளைகளில் தவறானதாகவும் அமைந்துவிடலாம். அதனால் கேட்பவர்கள் எப்போதும் சரியானதை ஏற்றுக்கொண்டு தவறானதை நிராகரிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்பார்கள். தீர்க்கதரிசனம் தவறில்லாததாக இருக்காது என்று இவர்கள் நம்புகிறார்கள். தமிழுலகிற்கு வெளியில் வாழும் ஒரு மேற்கு நாட்டு கெரிஸ்மெட்டிக் பிரசங்கி, "எல்லோரும் கூடியவரை முயற்சி செய்து தீர்க்கதரிசனம் செய்ய வேண்டும். அது சில வேளை தவறானதாக அமைந்து விட்டாலும் தொடர்ந்து சொல்லச் சொல்ல சரியாகிவிடும்" என்று சொல்லியிருக்கிறார். இப்படியான பேச்சுக்கெல்லாம் காரணம் முதலில், தீர்க்கதரிசனத்தில் வேதம் சார்ந்ததும், வேதம் சாராததுமான தீர்க்கதரிசனம் என்று இரண்டுவகை இருப்பதாக இவர்கள் முடிவு செய்திருப்பதுதான். இரண்டும் கர்த்தருடைய பிள்ளைகளிடம் இருந்தே புறப்படும் என்றும் ஆத்துமாக்கள் அத்தீர்க்கதரிசனங்களைக் கேட்டு சரியானதை ஏற்றுக்கொண்டு தவறானதை விட்டுவிட வேண்டும் என்று வேதம் போதிப்பதாக சிலர் நம்புகிறார்கள். ஆனால், அந்தவிதமான போதனையே வேதத்தில் கிடையாது. "ஆவிகளைச் சோதித்துப் பார்" என்று வேதம் ஓரிடத்தில் சொல்லுகிறது. ஆனால் அதற்கு, தேவ ஆவியை மகிமைப்படுத்தாத எதையும் நிராகரிக்கத் தயங்காதே என்று மட்டும்தான் பொருள். இவ்வசனம் சரியான தீர்க்கதரிசனம், தவறான தீர்க்கதரிசனம் என்று இரண்டுவகை இருப்பதாக சொல்லவில்லை. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டம்தான் இன்று தவறாக தீர்க்கதரிசனம் சொல்லுத்திரியும் ஒரே போலிக்கூட்டம். தீர்க்கதரிசனம் பொய்யானதாக இருந்துவிடலாம் என்று வேதம் எங்குமே போதிக்கவில்லை. பொய்யான தீர்க்கதரிசிகள் நிச்சயமாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் கர்த்தருடைய மனிதர்களாக இருந்ததில்லை. ஆனால், மெய்யான ஒரு தேவ மனிதனிடம் இருந்து பொய்யான தீர்க்கதரிசனம் புறப்பட்டதாக செய்தியே கிடையாது.

தீர்க்கதரிசனத்தின் தன்மையை நாம் சரியாக விளங்கிக் கொள்வது அவசியம். தீர்க்கதரிசனம் என்பது கர்த்தரின் சித்தத்தின் வெளிப்பாடு. இது எப்பொழுதும் ஆத்துமாக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியிலேயே இருக்கும். தீர்க்கதரிசனம் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தவிருப்பதை எடுத்துச் சொல்லும் சாதனம். இதை Forthtelling என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்தும் தீர்க்கதரிசனம் எதிர்காலத்தில் நடக்கப்போவதையும் சொல்லுவதாக இருந்துவிடலாம். ஆங்கிலத்தில் இதனை Foretelling என்று சொல்லுவார்கள். அப்போஸ்தலர்கால ஆதி சபையில் சபைத்தலைவர்களாக தீர்க்கதரிசிகளும் இருந்திருக்கிறார்கள் (எபேசியர் 4:11). அவர்கள் மக்களுக்குக்குப் புரியக்கூடிய மொழியில் கர்த்தரின் வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்கு கர்த்தர் தனது சித்தத்தை நேடியாக வெளிப்படுத்தினார். சில வேளைகளில் சபைத் தலைவர்களாக அல்லாத ஆத்துமாக்களில் சிலரும் தீர்க்க தரிசனம் சொல்லக்கூடியவர்களாக இருந்துள்ளனர். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனம் கர்த்தரிடம் இருந்து வந்ததால் அவை ஒருபோதும் தவறானதாகவோ அல்லது பொய்யானதாகவோ இருக்கவில்லை. இருக்கவும் முடியாது. பொய்த்தீர்க்கதரிசியும், பொய்த்தீர்க்கதரிசனமும் கர்த்தரின் மனிதர்களாக ஒருபோதும் இருக்கவில்லை. அவர்களுக்கு கர்த்தர் தனது சித்தத்தை வெளிப்படுத்தவில்லை. எனவே, கர்த்தரின் மனிதர்களுக்கு கர்த்தர்

*கொடுக்கும் தீர்க்கதரிசனம் தவறானதாக இருந்துவிடலாம் என்றும் அதில் சரியானவற்றை ஆத்துமாக்கள் சோதித்து தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் போதனைக்கு வேதத்தில் இடமில்லை. கர்த்தரின் தீர்க்கதரிசிகளுடைய தீர்க்கதரிசனம் தவறிழைக்காது.*

*இவ்வதிகாரத்தின் 29 வது வசனத்தில் பவுல் ஆத்துமாக்களைப் பார்த்து, தீர்க்கதரிசனத்தை "மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்" என்கிறார். தீர்க்கதரிசனத்தை ஆராயந்து பாருங்கள் என்பது இதற்குப் பொருள். ஆராய்ந்து பாருங்கள் என்று பவுல் சொல்லியிருப்பதால் தீர்க்கதரிசனத்தில் பொய்யானதும் இருந்துவிடலாம் என்று தவறாக பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் கூட்டம் ஊகம் செய்து கொள்கிறது. ஆனால், நிதானியுங்கள் என்ற இந்த வார்த்தைக்கு, நீங்கள் காது கொடுத்து கேட்கும் கர்த்தரின் வார்த்தையான தீர்க்கதரிசனத்தை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நோக்கத்தோடு சிந்தித்துப் பார்த்துப் பின்பற்றுங்கள் என்பதே பொருள். "நிதானி" என்ற வார்த்தைக்கு நாம் நினைத்த பொருளைக் கொடுக்காமல் அவ்வார்த்தை வேதத்தின் வேறுபகுதிகளில் எப்படிப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது? என்பதை ஆராய்ந்து பார்த்தால் இந்தப்பொருளையே இப்பகுதியில் இவ்வார்த்தை கொண்டிருக்கிறது என்பதை அறிய முடிகின்றது. கர்த்தர் தீர்க்கதரிசிகளுக்கு கொடுக்கும் தீர்க்கதரிசனம் ஒருபோதும் தவறாக இருந்துவிட முடியாததால் அதில் தவறிருக்குமா? என்று ஆராய வேண்டிய அவசியமேயில்லை.*

*அடுத்ததாக, தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய சித்தம் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்காக தம் மனம் போனபோக்கில் சபையில் தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது என்கிறார் பவுல் (30-32). தீர்க்கதரிசிகள் சில கட்டுப்பாடுகளை சபையில் பின்பற்ற வேண்டும் என்பது பவுலின் போதனை. ஒரே நேரத்தில் மூன்று பேரும் பேசக்கூடாது என்று ஏற்கனவே பார்த்தோம். அத்தோடு ஒருவர் பேசியபின் இன்னொருவருக்கு சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் முதலில் பேசியவர் மீண்டும் பேச முயற்சிக்கக்கூடாது. தீர்க்கதரிகள் சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்கிறார் பவுல். கர்த்தருடைய சித்தம் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால் இக்கட்டுப்பாடுகளை மீறி சபையில் தீர்க்கதரிசிகள் நடந்து கொள்ளக்கூடாது என்கிறார் பவுல்.*

**ஆராதனையில் ஒழுங்கு**

*இதுவரை நாம் 14:1-32 வரையுள்ள வசனங்களில் பார்த்தவற்றை மீண்டும் ஆராய்ந்து பார்க்கும்போது சபை கூடி வரும்போது நடக்கும் ஆராதனையைப்* (Public Worship) *பற்றிய ஒரு முக்கியமான உண்மையைப் புரிந்து கொள்ளலாம். அதாவது, சபை ஆராதனையில் எப்போதும் ஒழுங்கு இருக்க வேண்டும். சபையில் தாம் நினைத்தவாறு எவரும் எதுவும் செய்துவிடக்கூடாது. ஆராதனை சபைத்தலைவர்களால் மட்டுமே நடத்தப்பட்டு சத்தியம் ஒரு சிலரால் மட்டுமே வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது கர்த்தரின் கட்டளை. ஏனையோர் அமைதியாக சத்தியத்தைக் கேட்டு ஆராதனையில் பங்குபற்றி கர்த்தரை ஆராதிக்க வேண்டும். ஆதி சபையில் அந்நிய பாஷை பேசவும், தீர்க்கதரிசனம் சொல்லவும் அதிகாரம் கொண்டிருந்தவர்களும் கூட கர்த்தருடைய சபைக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி, சிலருக்கு மட்டுமே ஆராதனையில் பேச அனுமதி இருந்தது. கொரிந்து சபையில் இருந்தவர்கள் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி தாம் நினைத்தபடி பேச முயன்றதாலேயே பவுல் அவர்களுடைய தவறுகளை*

சுட்டிக் காட்டி ஆராதனையில் அவர்கள் தாம் நினைத்தபடி நடக்க முடியாது என்று எச்சரிக்கை செய்கிறார்.

நாம் ஏற்கனவே 13 ம் அதிகாரத்தில் பார்த்தபடி இன்று அந்நிய பாஷையோ, தீர்க்கதரிசனமோ திருச்சபையில் இல்லாததால் சபையார் போதகர்களால் வழிநடத்தப்பட்டு அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்க வேண்டும். பவுல் தொடர்ந்து இப்பகுதியில் பல முறை ஆராதனையில் ஒழுங்கு இருக்க வேண்டும் என்று சொல்லி வந்திருப்பதை எண்ணிப் பாருங்கள். ஒழுங்கும், கட்டுப்பாடும் இல்லாதது கர்த்தரின் ஆராதனையாக இருக்க முடியாது. இன்று சபைகளில் ஆராதனை வேளையில் ஒழுங்கைப் பார்க்க முடியாதிருக்கிறது. யார், யார் தங்களுக்கு தாலந்துகள் இருக்கிறதென்று நினைக்கிறார்களோ அவர்கள் எல்லோருமே ஆராதனையில் ஏதோ ஒருவிதத்தில் பங்கு கொள்ள விரும்பு-கிறார்கள். தங்களுக்கு ஆராதனையில் ஏதாவது செய்ய இடம் கொடுக்கும்படி போதகர்களை வற்புறுத்துகிறார்கள். இதனால் பல போதகர்களும் ஆராதனையைக் கர்த்தரின் வழிப்படி நடத்தாமல் ஆத்துமாக்கள் தங்களுடைய தாலந்தைக் காட்டுவதற்கு பயன்படும் அரங்கமாக மாற்றி வைத்திருக்கிறார்கள்.

பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் கூட்டம் தோன்றியபோதுதான் ஆராதனையில் எல்லோரும் தங்களுடைய தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற புது வியாதி வைரஸைப்போல பரவத் தொடங்கியது. கர்த்தர் கேட்பதைக் கர்த்தருடைய சித்தப்படி ஆராதனை மூலம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் அழிந்து ஆத்துமாக்கள் தங்களை சந்தோஷப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக அது மாறியது. இதனால்தான் இன்று சபை சபையாக வயலின் வாசிப்பவர்களும், கிட்டார் வாசிப்பவர்களும், கச்சேரி செய்பவர்களும், கொயர்களுமாக ஆராதனையின் பெரும் பகுதியை ஆக்கிர-மிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இது வேதம் போதிக்கும் ஆராதனை முறையல்ல. கொரிந்து சபை ஆராதனையில் இருந்த அதே குழப்பத்தை இன்று அநேக சபைகளில் பார்க்க முடிகின்றது.

**ஆண்கள் மட்டும் . . .**

மேலும், ஆராதனையில் ஆண்கள் மட்டுமே அதிகாரபூர்வமாக கர்த்தருடைய வார்த்தையை எல்லோரும் கேட்கும்படியாக வெளிப்படுத்த வேண்டும் என்று பவுல் சொல்லி வந்திருக்கிறார். அந்நிய பாஷையையும், தீர்க்கதரிசனத்தையும் ஆதி சபையில் சொன்னவர்கள் ஆண்கள் மட்டுமே. ஆராதனைவேளையில் அகிகாரபூர்வமான எந்தக் காரியத்தையும் (போதிப்பதும், ஜெபிப்பதும்) செய்ய பெண்களுக்கு அனுமதி இல்லை என்று வேதம் சொல்லுகிறது. இப்பகுதியில் இனி வரும் வசனங்களின் மூலம் பவுல் அதைத்தான் விளக்குகிறார்.

இனி வரப்போதும் வசனங்கள் பெண்கள் சபை கூடிவரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தரும் போதனைகளைப் பார்ப்பதற்கு முன் நாம் பல இதழ்களுக்கும் முன் சந்தித்த ஒரு உண்மையை மறுபடியும் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. 1 கொரிந்தியர் 12-14 வரையுள்ள வேத பகுதிகளை நாம் ஆராய ஆரம்பித்தபோது அதை பதினோறாம் அதிகாரத்தின் 18 ம் வசனத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று விளக்கியிருந்தோம். ஏனெனில், அந்த 18 ம் வசனத்தில் இருந்து தான் பவுல் "சபை கூடிவரும் போது" ஆத்துமாக்கள் சபையில் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைப் பற்றிய போதனைகளைத் தர ஆரம்பித்ததாகக் கூறியிருந்தோம். அவ்வசனத்தில் (18)

பவுல் "நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது . . ." என்று சபை கூடிவருதலைப் பற்றிச் சுட்டிக் காட்டுகிறார். இந்த "சபைகூடிவருதல்" என்ற பதம் மேலும் சில தடவைகள் 12-14 அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன (11:20, 33, 34; 14:23, 26). இதெல்லாம் பவுல் இப்பகுதி முழுவதிலும் முக்கியமாக சபை கூடிவருகின்றபோது நடக்கும் காரியங்களைப் பற்றி விளக்கம் கொடுக்கிறார் என்பதை மேலும் தெளிவாக்குகின்றன. ஆகவே, 14 அதிகாரத்தில் 34 ஆம் வசனத்தில் பவுல், பெண்கள் சபைகூடிவரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியே விளக்குகிறார். இன்னுமொரு உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். 11 வது அதிகாரம் 18 வசனம் சபைகூடிவரும் போது நடக்கும் காரியங்களைப் பற்றி பேசுவதாக இருக்குமானால் அவ்வதிகாரத்தில் அதற்கு முன்புள்ள வசனங்கள் சபை கூடிவரும்போது ஆத்துமாக்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றிப் பேசாமல், சபை கூடி வராத வேளைகளில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றியே பேசுபவையாக இருக்கும். 11 வது அதிகாரத்தின் முதல் 17 வசனங்களும் ஆண்களுக்கு அடங்கி பெண்கள் நடந்து கொள்ள வேண்டும் என்ற போதனையைத் தருகின்றன. சிருஷ்டியில் ஆணுக்கே கர்த்தர் தலைமைப் பதவியைத் தந்து படைத்தார் என்றும் பெண்கள் ஆண்கள் இருக்கும் பொது இடங்களிலெல்லாம் அவர்களை மதித்து அடங்கி நடந்து கொள்ள வேண்டும் என்றும் பவுல் இப்பகுதியில் விளக்குகிறார். இயற்கையாகவே கர்த்தர் பெண்ணுக்கு நீண்ட கூந்தல் இருக்கும்படியாகப் படைத்திருப்பது அவள் ஆணுக்கு அடங்கி இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே. அதேபோல் ஆண் நீண்ட கூந்தல் வைத்துக் கொள்வது அவனுக்குத் தகாது. ஏனெனில், அப்படிச் செய்வது அவன் தன் தலைமைத்துவத்தையும், கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் பாத்திரத்தையும் அவமதிக்கும் செயலாகும். இப்பகுதி போதிக்கும் உண்மை புரியாமல் சிலர் இது பெண்கள் ஆராதனையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று போதிப்பதாக தவறாக விளங்கிக் கொள்கிறார்கள். அத்தோடு இப்பகுதி சபைகூடிவரும்போது நடந்து கொள்ள வேண்டிய முறையைப்பற்றி விசேடமாகப் போதிக்காமல் பொதுவாக எல்லா இடங்களிலும் ஆணும், பெண்ணும் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றியே போதிக்கின்றன. இந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் 11:13 க்கு விளக்கமளிக்க வேண்டும். 13 ம் வசனத்தில் ஒரு பெண் ஆத்துமா ஜெபம் பண்ணுகையில் என்று இருக்கின்றது. அதாவது, பெண்கள் சாதாரணமாக ஜெபிக்கலாம் என்பது வேதம் போதிக்கும் உண்மை. அது ஆண்களுக்கு மட்டும் சொந்தமான கிருபையின் சாதனமல்ல. ஆனால், இப்பகுதியின்படி பெண்கள் சபைகூடிவருதலைத் தவிர்ந்த இடங்களில் ஜெபிக்கலாம் என்பதே போதனை. (சபை கூடிவருதலைத் தவிர்த்த ஏனைய இடங்கள், குடும்பம், நண்பர்களோடு கூடிவரும் சந்தர்ப்பங்கள், பெண்கள் கூட்டம் என்பவையாகும்). சபை கூடிவரும் இடத்தில் அவர்கள் பேசவோ, ஜெபிக்கவோ கூடாது. எனவேதான் சபைகூடிவரும் போது ஆத்துமாக்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி 11:18 ல் இருந்து 14:40 வரையும் உள்ள பகுதிகளில் விளக்கும் பவுல் பெண்கள் சபைகளில் பேச அனுமதி இல்லை என்று அழுத்தமாக சொல்கிறார். பேசுவது என்பதில் போதிப்பது, ஆண்களுக்கு முன்பாக குரலெடுத்து ஜெபிப்பது எல்லாமே அடங்கியிருக்கிறது. இந்த உண்மைகளின் அடிப்படையில் அடுத்த இதழில் 14 ம் அதிகாரத்தின் ஏனைய வசனங்களை ஆவியின் துணையோடு ஆராய்வோம்.

# தெய்வீக பராமரிப்பு

***1689 விசுவாச அறிக்கை (அதிகாரம் 5)***

***எழுதியவர்: லாமார் மார்ட்டின் தமிழில்: ஆசிரியர்***

*1. அனைத்தையும் படைத்த நல்லவராகிய கடவுள், தமது அளவற்ற வல்லமையாலும், ஞானத்தாலும் மிகுந்த விவேகமுள்ள தமது பரிசுத்த பாரமரிப்பினாலும் பெரிதானதிலிருந்து சிறியதான எல்லாப்படைப்புயிர்களையும், பொருட்களையும், தன்னுடைய படைப்பின் நோக்கத்தின் நிறைவேற்றுதலுக்காகத் தாங்கி, வழிகாட்டி ஆண்டு வருகிறார். தவறாநிலையுடைய முன்னறிவாலும் தமது சுயசித்தத்தின் தன்னுரிமையுள்ள மாறாத்திட்டத்தின் மூலமும், மகிமையுள்ள தமது ஞானம், வல்லமை, நீதி, எல்லையற்ற நற்குணம், இரக்கம் ஆகியவற்றின் துதிக்காகவும் கடவுள் அனைத்தையும் ஆண்டு வருகிறார்.*

*யோபு 38:11; சங்கீதம் 135:6; ஏசாயா 46:10, 11; மத்தேயு 10:29-31; எபேசியர் 1:11; எபிரேயர் 1:3.*

*2. அனைத்திற்கும் காரணகர்த்தாவாகிய கடவுளுடைய முன்னறிவின் மூலமும், ஆணையின் மூலமும் எல்லாக் காரியங்களும் மாறாத்தன்மையுடனும், தவறா-நிலையிலும் நேரிட்டபோதும் எதுவுமே எவருக்கும் தற்செயலாகவோ அல்லது அவரது பராமரிப்புக்கு (தெய்வ செயல்) அப்பாற்பட்டோ நிகழ்வதில்லை. அதேவேளை, கடவுள் இடைக்காரணங்களின் தன்மையின்படி தமது பராமரிப்பின் மூலம் தேவைக்கேற்பவும், சுதந்திரமாகவும், எதிர்பாராவேளைகளிலும் சம்பவங்கள் நிகழ உத்தரவிடுகிறார். (இயற்கையின் விதிகள் போன்ற துணைக்காரணங்களின் நடவடிக்கைகள் அல்லது மனிதனின் சுதந்திரமான நடவடிக்கைகள் அல்லது காரணகாரியம் என்ற விதி போன்றவற்றின் மூலம் சம்பவங்கள் நிகழ அவற்றை ஒழுங்குபடுத்தி அனுமதி-யளிக்கிறார்). இத்தகைய வழிமுறைகளைப்பயன்படுத்தி அவற்றின் மூலமாக கடவுள் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்.*

*ஆதியாகமம் 8:22; நீதிமொழிகள் 16:33; அப்போஸ்தலர் 2:23; லூக்கா 22:22*

*3. சாதாரணமாக தனது பராமரிப்பில் கடவுள் பல சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார். அவற்றின் துணையில்லாமல் அவரால் தன்னுரிமையோடு இயங்க முடியும். அவரால் சுயவிருப்பப்படி அச்சாதனங்களுக்கு வழமைக்குமாறாக பயன்திறத்தை அளிக்கவும் அல்லது அவற்றிற்கு எதிர்மறையாக செயல்படவும் முடியும்.*

*ஏசாயா 55:10, 11; தானியேல் 3:27; ஓசியா 1:7; அப்போஸ்தலர் 27:31; 44; ரோமர் 4:19-21.*

**விளக்கம்:** *விசுவாச அறிக்கையின் நான்காவது அதிகாரமான தெய்வீக பராமரிப்பின் மூலம் நமது முன்னோர்கள் நமக்களித்துள்ள வேதபோதனை-களை நான்கு தலைப்புகளின் மூலம் நாம் ஆராயவிருக்கிறோம். இவ்வதிகாரத்தின் முதல் பாராவில் (1) பராமரிப்பு பற்றிய போதனையின் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2) 2ம், 3ம் பாராக்களில் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் விளக்கப்படுகிறது. (3) 4-6 வரையிலான பாராக்களில் தெய்வீகப் பராமரிப்பில் நமது பாவமும் எவ்வாறு உள்ளடங்கியுள்ளது என்பதைப் படிக்கலாம். (4) 7வது பாரா சபையைப் பற்றிய*

ஒரு உண்மையை விளக்குகிறது. இவ்விதழில் முதல் மூன்று பாராக்களுக்கான விளக்கத்தை மட்டும் பார்ப்போம்.

**பராமரிப்பு பற்றிய விளக்கம் (பாரா 1)**

இப்பாரா தெய்வீக பாராமரிப்பின் அடிப்படை உண்மையை விளக்குகிறது. நமது முன்னோர்கள் இதன் மூலம் தெய்வீக பராமரிப்பு என்றால் என்ன? என்ற கேள்விக்கான விளக்கத்தைத் தருகின்றனர். "அனைத்தையும் படைத்த நல்லவராகிய கடவுள், தமது அளவற்ற வல்லமையாலும், ஞானத்தாலும் மி குந்த விவேகமுள்ள தமது பரிசுத்த பாரமரிப்பினாலும் பெரிதானதிலிருந்து சிறியதான எல்லாப்படைப்புயிர்களையும், பொருட்களையும், தன்னுடைய படைப்பின் நோக்கத்தின் நிறைவேற்றுதலுக்காகத் தாங்கி, வழிகாட்டி ஆண்டு வருகிறார்" என்பது அவர்களின் விளக்கம். கடவுள் எல்லாவற்றையும் படைத்தார் என்று நாம் மூன்றாவது அதிகாரத்தில் பார்த்த போதனை அடிப்படையிலும், அக்கடவுள் தனது எல்லையற்ற வல்லமையாலும் ஞானத்தாலும் அவறைப் படைத்தார் என்று நாம் 2 வது அதிகாரத்தில் பார்த்த சத்தியத்தின் படியும் கடவுள் தனது படைப்பு அனைத்தையும் காத்தும், ஆண்டும் வருகிறார் என்று இப்பாரா போதிக்கிறது. ஆகவே, தான் படைத்த அனைத்தும் தம்மைத் தாமே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிடாமல், கடவுள் தானே அவற்றைக் காத்தும் பராமரித்தும் வருகிறார். தற்செயலாகவும், விபத்தாகவும் எதுவுமே உலகத்தில் நடப்பதில்லை. எல்லாவற்றையும் கண்காணித்து கடவுள் ஆண்டு வருகிறார். நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்ற வார்த்தைகளுக்கு கடவுளின் அகராதியில் இடம் இல்லை. எல்லாம் அவர் கட்டளைப்படி அவரது பராமரிப்பின் கீழ் ஒவ்வொரு நிமிடமும் இயங்கி வருகின்றன. இந்த உண்மையை பின்வரும் வசனங்களை வாசித்துப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். எபிரேயர் 1:1-3; நெகேமியா 9:6; சங்கீதம் 36:6; 115:1-3; 135:6; தானியேல் 4:35; ஏசாயா 46:10; அப்போஸ். 17:25. கடவுள் தாம் படைத்த அனைத்தையும் நுணுக்கமாக, கவனத்தோடு ஆண்டு வருகிறார். நமக்குத் தேவையான அனைத்தையும் நாம் அவரிடமிருந்தே பெற்றுக் கொள்கிறோம்.

நமது முன்னோர்கள் பராமரிப்பு பற்றிய அடிப்படை உண்மையை மட்டும் விளக்குவதோடு விட்டுவிடாமல் அத்தெய்வீக பராமரிப்பு எதையெல்லாம் தொட்டு எந்தளவுக்கு பரவி ஆளுகிறது என்பதையும் விளக்கியுள்ளார்கள். முதல் பாரா, கடவுள் தான் படைத்த, பெரிதானதிலிருந்து சிறியதான எல்லாப் படைப்புயிர்களையும், பொருட்களையும் தாங்கி ஆண்டு வருகிறார் என்று போதிக்கிறது. கடவுள் தான் படைத்த அனைத்தையும், சிறிது, பெரிது என்ற வித்தியாசமில்லாமல் தாங்கியும், வழிநடத்தியும், ஆண்டும் வருகிறார். இவ்வுண்மையை வேதத்தின் பல பகுதிகள் தெளிவாக விளக்குவதைப் பார்க்கலாம். பின்வரும் வசனங்களை ஆராய்ந்து பாருங்கள் - சங்கீதம் 104:6-9. இவ்வசனங்கள் நோவாவின் காலத்தில் கடவுள் தண்ணீரைக் கட்டுப்படுத்தியதை விளக்குகிறது. 10-13 வரையிலான வசனங்கள் கடவுள் தான் படைத்தவற்றிற்கு தண்ணீரை அனுப்பியதை விளக்குகின்றன. 14-17 ஆகிய வசனங்கள் கடவுள் தாவரவகைகளைப் பராமரிப்பதை விளக்குகின்றன. புல் போன்ற சாதாரண பொருட்களையும் கடவுள் கவனித்துக் கொள்கிறார். 27 ம் வசனம், அனைத்தும் கர்த்தரை நோக்கிக் காத்திருப்பதாகவும், அவரே அனைத்திற்கும் உணவளிப்பதாகவும் சொல்கின்றன. கடவுள் முகம் சுளித்தால் எல்லாமே சுவாசமிழந்து போய்விடும் என்பது இச்சங்கீதத்தின் போதனை.

*எபிரேயர் 1:14, யோபு 1:12 ஆகிய வசனங்கள் மூலம் நல்ல தேவதூதர்களும், கெட்ட தூதர்களும் கூட கடவுளின் ஆட்சிக்குள் அடங்கியிருக்கின்றன என்று அறிந்து கொள்கிறோம். எல்லாவற்றையும் கடவுள் ஆள்கிறார், பராமரிக்கிறார் என்ற உண்மையை யோபு 12 வது அதிகாரமும் விளக்குகின்றது. 13ம் வசனத்திலிருந்து வாசித்துப் பாருங்கள். நீதிமொழிகள் 21:1 கடவுள் உலகை ஆளும் அரசர்களையும் கூட ஆள்கிறார் என்கின்றது. மத்தேயு 10:29-31 வரையிலான வசனங்கள் கடவுள் சிறு பறவைகளையும், நம் தலைகளில் உள்ள முடியையும்கூட கவனித்துக் கொள்கிறார் என்று விளக்குகின்றன. இப்பகுதிகள் அனைத்தும் கடவுள் தாம் படைத்த எல்லாவற்றையும் தாங்கி, வழிநடத்தி, ஆண்டு, பராமரித்து வருவதை தெளிவாக விளக்குகின்றன. வேதத்தில் இன்னும் அநேக பகுதிகள் இவ்வுண்மையைப் போதிப்பனவாக உள்ளன.*

*கடவுள் பாராமரிக்கிறவராக இருக்கிறார் என்றும், அவருடைய பராமரிப்பு சிறியது, பெரியது என்று பார்க்காமல் அவர் படைத்த அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது என்று விளக்கிய முதல் பாரா இனி அவருடைய பராமரிப்பின் இறுதி இலக்கைப் பற்றி விளக்குகிறது. அத்தகைய இரண்டு இலக்குகளை நாம் முதல் பாராவின் இறுதிப் பகுதியல் வாசிக்கிறோம். முதலாவது, கடவுள் தன்னுடைய தவறாநிலையுடைய முன்னறிவாலும், மாறாத தனது சித்தத்தின் ஆலோசனையாலும் எல்லாவற்றையும் பராமரித்து வருகிறார் என்று பார்க்கிறோம். கடவுள் எலலாவற்றையும் பராமரிக்கும் விதம் அவர் யார்? எத்தகையவர்? என்பதை நமக்குப் புரிய வைக்கின்றன. தனது சுய-தன்மையை மீறி அவர் எதையும் பராமரிக்கவில்லை. அவருடைய பராமரிப்பு அவருடைய தன்மையை நமக்கு விளக்குகிறது. இந்த உண்மைகளின் அடிப்படையில்தான் விசுவாச அறிக்கை எந்நோக்கத்திற்காக எல்லாம் படைக்கப்பட்டிருக்கின்றன என்று விளக்குகின்றன.*

*நமது முன்னோர்கள் இங்கே நாம் இதுவரை 2ம் அதிகாரத்திலும், 3ம் அதிகாரத்திலும், 4ம் அதிகாரத்திலும் பார்த்த உண்மைகளுக்கும் இவ்வதிகாரத்தில் பார்க்கும் உண்மைகளுக்கும் பிரிக்க முடியாத தொடர்பு இருப்பதை சுட்டிக் காட்டுகின்றனர். அதாவது, கடவுளின் தன்மை, அவருடைய ஆணை, அவருடைய படைப்பு, பராமரிப்பு எல்லாமே ஒன்றோடொன்று தொடர்புடையதாக பிரிக்க முடியாததாக இருக்கின்றன என்பது விசுவாச அறிக்கையின் போதனை. கடவுள் மாறாதவராகவும், தவறாநிலையுடைய முன்னறிவுள்ளவராகவும், எல்லையற்ற வல்லமையுடையவராகவும் இருப்பதாலும், நித்தியத்திலிருந்து அவர் ஆணையிட்டுள்ளவைகள் ஒருபோதும் மாற்றமடையமுடியாததாலும், அவர் தீர்மானித்துள்ள அனைத்தும் நிச்சயம் நிகழப்போவதாலும், அவர் எந்நோக்கத்திற்காக அனைத்தையும் படைத்தாரோ அந்நோக்கம் நிறைவேறுவதற்காக அவர் அனைத்தையும் தாங்கி, வழிநடத்தி ஆண்டு, பராமரித்து வருகிறார். கடவுள் அனைத்தையும் படைத்ததற்கு ஒரு காரணம் இருந்தது. ஒரு நோக்கம் இருந்தது. அதையே இங்கு நமது முன்னோர்கள் விளக்க முயல்கின்றனர். அநோக்கம் தான் என்ன? முதல் பாராவின் கடைசி வசனம் சொல்கிறது - தனக்கு மகிமை தேடிக் கொள்ளும்படியாக கடவுள் இவற்றைச் செய்தார் என்று.*

*மூன்றாம் அதிகாரம் கடவுள் அனாதி காலத்தில் எல்லாவற்றையும் தமது மகிமையின் பொருட்டு முன்குறித்தார் என்று விளக்கியது. நான்காம் அதிகாரம் கடவுள் தமது மகிமையின் பொருட்டு இவ்வுலகத்தைப் படைத்தார் என்று*

*விளக்கியது. ஐந்தாம் அதிகாரம் கடவுள் தமது மகிமையின் பொருட்டு எல்லாவற்றையும் பராமரிக்கிறார் என்று விளக்குகின்றது. பவுல் எபேசியர் 1:11-12 கிறிஸ்துவைப்பற்றி சொல்லும்போது நாமெல்லோரும் கிறிஸ்துவின் மகிமைக்காகவே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம் என்கிறார். இதே உண்மையை யாத்திராகமம் 9:16 ம் போதிக்கிறது.*

*இதுவரை முதலாம் பாரா விளக்கிய பராமரிப்பு பற்றிய அடிப்படை உண்மையைப் பற்றியும், அப்பராமரிப்பு எதையெல்லாம் உள்ளடக்கியது என்பதையும், கடவுளின் அப்பராமரிப்பாகிய பணி எந்த நோக்கத்தை இலக்-காகக் கொண்டிருக்கிறது என்றும் பார்த்தோம்.*

**பராமரிப்பில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் (பாரா 2, 3)**

*இனி 2 ம் பாரா விளக்கும் பராமரிப்பில் பயன்படுத்தப்படும் சாதனங்களைப் பார்ப்போம். 2ம் பாராவில் விசுவாச அறிக்கை பராமரிப்பை பற்றி விளக்கும் உண்மை ஏற்கனவே 3ம் அதிகாரத்தில் (கடவுளின் ஆணை) விளக்கப்-பட்டுள்ளது. அதை இப்பாரா மீண்டும் வலியுறுத்துகிறது. விசுவாச அறிக்கை, எல்லாக் காரியங்களும் சரியானபடி நிறைவேறுவதற்குக் காரணம் அவை ஏற்கனவே அநாதி காலத்தில் கடவுளால் தீர்மானிக்கப்பட்டு ஆணையிடப்-பட்டிருப்பதால்தான் என்று விளக்குகிறது. அத்தோடு, ஆணையிடப்பட்ட அனைத்துக் காரியங்களும் நிறைவேறுப்படி அவர் சர்வலோகத்தையும் ஆண்டு, பராமரித்தும் வருகிறார். இதே உண்மையை இந்த 2ம் பாரா மீண்டும் வலியுறுத்துகிறது. இது எல்லாவற்றிற்கும் முதற்காரணம் கடவுள் என்று விளக்குகிறது. அவர் எல்லாம் நிறைவேறும்படி ஆணையிட்டிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் படைத்துப் பராமரிப்பதால் அவை அனைத்தும் நிச்சயம் நிகழும். இது உண்மையாதலால் விசுவாச அறிக்கை தொடர்ந்து, எதுவும் தற்செயலாக நடக்காது என்றும், தெய்வீக பராமரிப்பை மீறி நடக்காது என்றும் விளக்குகிறது. வேதம் போதிக்கும் இந்த உண்மையையே 5ம் அதிகாரத்தின் இந்த 2ம் பாரா வலியுறுத்துகிறது.*

*உதாரணமாக அப்போஸ். 1:26 ல் வாசிக்கும், போடப்பட்ட சீட்டு பர்னபாவின் மேல் விழாமல் ஏன் மத்தியாவின் மேல் விழுந்தது? ஏனெனில், கடவுள் மத்தியாவை தெரிவு செய்திருப்பதால்தான். கடவுள் தனது சித்தத்தை சீட்டின் மூலம் தனது சீடர்களுக்கு தெரியப்படுத்தினார். அதனால்தான், சீடர்கள் யாரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சீட்டின் மூலம் காட்டித் தரும்படி கர்த்தர் முன் ஜெபித்தார்கள். சீட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட உண்மை தற்செயலாக நிகழவில்லை என்பதை சீடர்கள் அறிந்திருந்தார்கள். இன்னுமொரு உதாரணத்தை அப்போஸ். 2:23 ல் பார்க்கலாம். கிறிஸ்துவை கேடான மனிதர்கள் கொலை செய்தபோதும் பேதுரு, அதற்கு முதற் காரணம் கடவுளின் அநாதித் தீர்மானம் என்பதை உணர்ந்திருந்தார். விசுவாச அறிக்கை இப்பாராவில் போதிக்கும் உண்மை பேதுருவுக்குத் தெரிந்திருந்தது. கடவுளின் முன்னறிவுக்கும், ஆணைக்கும் இடையில் உள்ள தொடர்பு பேதுருவுக்கு புரிந்திருந்தது. கிறிஸ்துவின் மரணத்திற்கான முதற்காரணம் கடவுளின் ஆணை என்பது பேதுருவுக்குத் தெரிந்திருந்தது.*

*கடவுளின் ஆணை நிச்சயம் நிறைவேறும் என்பதை மறுபடியும் வலியுறுத்தியபின் இப்பாரா பாரமரிப்பில் பயன்படுத்தப்படும் சாதனங்களை விளக்க முயல்கிறது. (இரண்டாம் பாராவை ஒருமுறை வாசியுங்கள்). அநாதி*

காலத்தில் இருந்தே கடவுள் எல்லாவற்றையும் ஆணையிட்டிருப்பதாலும், தன் ஆணைப்படி எல்லாம் நிறைவேறும்படி அனைத்தையும் அவர் ஆண்டு, பாரமரிப்பதாலும், அவர் தனது நோக்கங்கள் நிறைவேறும்படியாக சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்கிறார். முதற்காரணியாகிய தான் ஆணையிட்ட அனைத்தும் இறுதியில் நிறைவறும்படி இடைக்காரணிகளையும் அவர் பயன்படுத்திக் கொள்கிறார். சர்வ லோகத்தையும் ஆண்டு வரும் கடவுள் இடைக்காரணங்களின் மூலமாக அதைச் செய்கிறார். தனது நோக்கங்கள் நிறைவேற இவற்றை அவர் பயன்படுத்திக் கொள்கிறார்.

இதை விளக்க இப்பாரா குறிப்பிடும் ஆதியாகமம் 8:22 பகுதியைப் பார்ப்போம். கடவுள் உலகத்தை தண்ணீரால் அழித்தார். 8:21 ல் மனிதனுக்காக மீண்டும் நான் பூமியை சபிக்க மாட்டேன் என்றும், நான் இப்போது செய்தது போல் இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை என்றும் கடவுள் சொன்னார். ஆகவே, தேவனுடைய சித்தம் பூமி நிலைக்க வேண்டும் என்பதும், மனிதனுடைய தேவைகள் நிறைவேற வேண்டும் என்பதும் தான் என்று அவருடைய வார்த்தைகள் மூலம் தெளிவாகின்றது. ஆனால், 8:22 ல் கடவுள் சொல்வதைப் பாருங்கள். பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடை காலமும், மாரிக்காலமும், பகலும், இரவும் ஒழிவதில்லை என்றார். பூமி நிலைப்பதற்காகவும், மனிதனின் தேவைகள் நிறைவேறுவதற்காகவும் கடவுள், வானத்தில் இருந்து உணவைக் கொட்டப்போவதில்லை. இயற்கை விதிகளின் சாதனங்களை அவர் தன் நோக்கம் நிறைவேறுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறார். விதைப்பையும், அறுப்பையும், சீதளத்தையும், உஷ்ணத்தையும், பகலையும், இரவையும் தன் திட்டங்களும், நோக்கங்களும் நிறைவேற கடவுள் பயன்படுத்திக் கொள்வார். தான் படைத்த இயற்கையின் விதிகளை அவர் பயன்படுத்திக் கொள்வார். அப்போஸ். 27:21-44 யும், 1 இராஜாக்கள் 22:28-34 யும் வாசிக்கவும்.

3 வது அதிகாரத்தின் மூலம் கடவுள் சிலரை நித்திய வாழ்விற்காக முன்குறித்திருக்கிறார் என்று அறிந்து கொண்டோம். லூக்கா 13:5 ல் இயேசு தன்னை நாடி வந்தவர்களைப் பார்த்து அவர்கள் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். மத்தேயு 5:20 ல் அவர் பரிசேயருடையதும், சதுசேயருடையதுமான நீதியைவிட நமது நீதி மேலானதாக இல்லாவிட்டால் நாம் பரலோகம் போக முடியாது என்றார். கடவுள் நித்திய வாழ்விற்காக சிலரை ஆணையிட்டு நியமித்திருந்தபோதும், அவர்கள் நித்திய வாழ்வை அடைய சில சாதனங்களையும் நியமித்துள்ளார். இரட்சிப்பின் முதற்காரணி கடவுளே. ஆனால், இரட்சிப்பை அடையப்போகும் அனைவரும் அதை அடைவதற்கான இடைக்காரணிகளையும் கடவுள் நியமித்துள்ளார். மனந்திரும்புதலும், இயேசுவிடம் பரிசேயர், சதுசேயர்களுடைய நீதியையும் விட மேலான நீதியோடு ஆண்டவரிடம் ஓடிவருதலுமே அந்த இடைக்காரணிகளாகும்.

ஐந்தாம் அதிகாரத்தின் 2ம் பாராவில் இப்படி இருக்கிறது: “அனைத்திற்கும் காரணகர்த்தாவாகிய கடவுளுடைய முன்னறிவின் மூலமும், ஆணையின் மூலமும் எல்லாக் காரியங்களும் மாறாத்தன்மையுடனும், தவறா நிலையிலும் நேரிட்டபோதும் எதுவுமே எவருக்கும் தற்செயலாகவோ அல்லது அவரது பராமரிப்புக்கு (தெய்வ செயல்) அப்பாற்பட்டோ நிகழ்வதில்லை. அதேவேளை, கடவுள் இடைக்காரணங்களின் தன்மையின்படி தமது பராமரிப்பின் மூலம்

தேவைக்கேற்பவும், சுதந்திரமாகவும், எதிர்பாராவேளைகளிலும் சம்பவங்கள் நிகழ உத்தரவிடுகிறார்." கடவுள் நடக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ள எந்தக் காரியமும் நிச்சயம் நடந்தே தீரும். ஆனால், அதற்காக இடைக்-காரணிகளை அவர் பயன்படுத்திக் கொள்ளாமல் போவதில்லை. தனது ஆணைகளை நிவைவேற்ற கடவுள் தனது வார்த்தை, ஜெபம், விசுவாசம், மனந்திரும்புதல் ஆகிய இடைக்காரணிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார். முதற்காரணியாகிய கடவுளுடைய ஆணைக்காக அவரை நாம் துதித்து மகிமைப்படுத்தத்தான் வேண்டும். ஆனால், அத்தோடு நின்றுவிடாமல் இடைக்-காரணிகளைப் பற்றி சிந்தித்து அவற்றில் நாம் அதிக கவனம் செலுத்துவது மிகவும் பயன்தரும்.

கடவுளின் ஆணையின் நிச்சயத்துவத்தை மீண்டும் வலியுறுத்தியதோடு, அவர் பயன்படுத்திக் கொள்ளும் சாதனங்களையும் பற்றி அறிந்து கொண்டுள்ளோம். இனி ஐந்தாம் அதிகாரத்தின் 3ம் பாராவைக் கவனிப்போம். "சாதாரணமாக தனது பராமரிப்பில் கடவுள் பல சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார். அவற்றின் துணையில்லாமல் அவரால் தன்னுரிமையோடு இயங்க முடியும். அவரால் சுயவிருப்பப்படி அச்சாதனங்களுக்கு வழமைக்குமாறாக பயன்திறத்தை அளிக்கவும் அல்லது அவற்றிற்கு எதிர்மறையாக செயல்படவும் முடியும்." இப்பாரா, கடவுள் தமது ஆணைகளை நிறைவேற்றிக் கொள்ள சாதாரணமாக இடைக்காரணிகளைப் பயன்படுத்திக் கொண்டபோதும் அதற்கு விதிவிலக்கும் உண்டு என்பதை நினைவுபடுத்துகிறது. அதாவது, தனது நோக்கங்களும், ஆணைகளும் நிறைவேறவும், தான் படைத்த அனைத்தையும் பராமரிக்கவும் கடவுள் இடைக்காரணிகளைப் பயன்படுத்திக் கொண்ட போதும் அவற்றை அவர் நிச்சயம் பயன்படுத்தித்தான் தனது ஆணைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவருக்குப் பிடித்தமானால் அவற்றை அவர் பயன்படுத்திக் கொள்ளாமலும் விடலாம். அவருக்குப் பிடித்தமானால் அச்சாதனங்களைப் பயன்படுத்தாமலும், அச்சாதனங்களுக்கு எதிராகவும் நடந்து தனது ஆணைகளை கடவுளால் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இதற்கு உதாரணமாக 2 இராஜாக்கள் 6:6 ஐப் பார்ப்போம். அங்கே இரும்பாலான ஒரு கோடரியைக் கடவுள் மிதக்க வைப்பதாக அறிந்து கொள்கிறோம். கடவுள் உலகத்தைப் படைத்தபோது பாரமான பொருட்கள் காற்றில் மிதக்க முடியாமலும், மெல்லிய பாரமற்ற பஞ்சு போன்ற பொருட்கள் மிதக்கும்படியுமான இயற்கை விதியுடன் படைத்தார். ஆனால், இப்பகுதியில் கடவுள் அந்த பாரமான கோடரியை மீட்டுக் கொள்ள இயற்கை விதிகளையெல்லாம் மீறி நடந்து கொள்வதைப் பார்க்கிறோம். ரோமர் 4:19-21 ஆகிய வசனங்கள் கடவுள் ஆபிரகாமுக்கும், அவனுடைய மனைவிக்கும் இயற்கையாக பிள்ளை பெற முடியாத நிலையை மீறிய பிறகு ஒரு பிள்ளையைக் கொடுத்ததை நினைவூட்டுகின்றன. ஓசியா 1:7 இல் கடவுள், தான் யூதாவின் மீது கருணை காட்டுவேன் என்றும், அவர்களை வில்லும், அம்பும், போரும், குதிரைகளும் இல்லாமல் தன்னால் காக்க முடியும் என்றும் சொல்லுகிறார். கடவுள், வழமையாக இடைக்காரணிகளைப் பயன்படுத்தியே தன்னுடைய காரியங்களை சாதித்துக் கொண்டாலும், தன்னுடைய மக்களின் விடுதலைக்காக அவற்றையும் மீறி அற்புதங்களைச் செய்வேன் என்கிறார்.

தானியேல் 3:27 ல் சாதராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோருடைய

சரீரத்தையும், உடைகளையும் அக்கினி ஒன்றுமே செய்யவில்லை என்று பார்க்கிறோம். அக்கினி கொடூரமாக எரிந்து கொண்டிருந்தபோதும் அது அவர்களை எரிக்கவில்லை. சாதாரணமாக நடக்கும் எல்லாவற்றயும் மீறி கடவுள் இவர்களைக் காத்தார். இதேபோலத்தான் தானியேலை மிகவும் பசியுடன் காத்திருந்த சிங்கத்திடமிருந்தும் கடவுள் காத்தார். பசியோடிருக்கும் எந்த சிங்கமும் சாதாரணமாக தானியேலைக் கொன்று தீர்த்திருக்கும். ஆனால், வழக்கத்தையும் மீறி கடவுள் செயல்பட்டார். இடைக்காரணிகள் அவரைக் கட்டுப்படுத்தாது. அவற்றை மீறி நடந்து தன் காரியங்களைக் கடவுளால் சாதித்துக் கொள்ள முடியும்.

நாம் இதுவரை பார்த்த ஐந்தாம் அதிகாரத்தின் இம்மூன்று பாராக்களும் கடவுள் தான் ஆணையிட்ட அனைத்தையும் காத்து, வழிநடத்தி, தாங்கி ஆண்டு பராமரிக்கும்போது வழமையாக இடைக்காரணிகளை தனது ஆணைகளின் நிறைவேற்றுதலுக்காக பயன்படுத்திக் கொள்கிறார் என்றும், அதேநேரம் அவ்விடைக்காரணிகள் அவரைக் கட்டுப்படுத்தாது என்றும் பார்த்தோம். கடவுள் படைத்து உருவாக்கியவைகள் இறை ஆண்மையைக் கொண்டிருக்கவில்லை. கடவுள் மட்டுமே இறை ஆண்மை உடையவர். அவர் படைத்தவைகளால் அவரை ஆள முடியாது. அவரோ, தான் படைத்தவற்றை ஆள்கிறார். எத்தனை மகத்தான கடவுளை நாம் ஆராதிக்கிறோம்! (வளரும்)

*(இவ்வதிகாரத்திற்கான குறிப்புகளை எழுதிக் கொண்டிருக்கும் லாமார் மார்டின் இதுவரை நியூஜேர்சியில் உள்ள திரித்துவ பாப்திஸ்து சபையின் போதகர்களில் ஒருவராக இருந்தார். இப்போது அச்சபையால் அனுப்பப்பட்டு அட்லாண்டாவில் ஒரு சீர்திருத்த பாப்திஸ்து சபை அமைக்கும் ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார்.)*

---




*தங்களுடைய திருமறைத்தீபம் இதழை நான் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் படிக்கும்போது படித்துப் பரசமடைந்ததுண்டு. இருப்பினும் தற்போது மதுரையிலுள்ள நண்பர் ஒருவர் மூலம் ஜனவரி–மார்ச 2002 இதழை வாசிக்கும் முழுமையான சந்தர்ப்பம் கிடைத்தது. உண்மையாகவே கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி கிறிஸ்தவனாக வாழ்வதற்கு திருமறைத்தீபம் வழிகாட்டியாக இருப்பதை நினைத்து மகிழ்சியடைகிறேன். அதிலும் தமிழ் கிறிஸ்தவ உலகில் புதிய சுவிசேஷ இயக்கம் என்ற தலைப்பில் எழுதிய பகுதி லிபரலிசம் மூலம் எவ்வாறு கிறிஸ்தவ உலகை சமயசமரசப் போக்கு பாதித்து வருகிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இப்படிப்பல நிலைகளில் இறையியல் கருத்துக்களை தாங்கி வெளிவருகின்ற திருமறைத்தீபம் இதழை பெற்றுக் கொள்ள மிகவும் ஆவலாக இருக்கிறேன். நீங்கள் வெளியிட்டுள்ள நூல்களைப் பற்றி பதிரிகையில் பார்த்தேன். தயவு செய்து அவற்றை அனுப்பி வையுங்கள். இவற்றின் மூலம் எனது தனிப்பட்ட வாழ்வை மேம்படுத்திக் கொள்ளவும், மற்றவர்களையும் அதன் மூலம் மாற்றத்திற்குள் கொண்டுவரவும் வாய்ப்பாக அமையும். உங்கள் பத்திரிகை ஊழியத்திற்காக ஜெபிக்கும். – ஏ. ஜெபராஜ், தமிழ்நாடு*

# அடக்கி வாசிப்போம்!

இன்று ஆராதனையில் இசைக்கும், இசைக்கருவிகளுக்கும் அளவுக்கு அதிகமாக இடம் கொடுக்கப்படுகிறது. இசையும் ஆராதனையின் ஒரு அம்சம் என்று தவறாகக் கருதப்படுகிறது. கர்த்தர் ஒருபோதும் இசையையும், இசைக்கருவிகளையும் ஆராதனையின் அம்சங்களாக வேதத்தில் வெளிப்படுத்த-வில்லை. ஜெபம், பிரசங்கம், பாடல்கள், வேதவாசிப்பு, திருவிருந்து, திருமுழுக்கு, காணிக்கை எடுத்தல் ஆகியனவையே ஆராதனையின் முக்கிய அம்சங்கள். இசைக்கு இதில் இடம் கொடுக்கப்படவில்லை. அதனால் ஆராதனையில் இசை இருக்கக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. இசை ஆராதனை-யின் ஒரு முக்கிய அம்சம் அல்ல; முக்கிய அம்சமாகக் கருதப்படக்கூடாது. அது நாம் கர்த்தரின் மகிமையைப் பாடுவதற்கு உதவும் வெறும் கருவியாக மட்டுமே இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, பிரசங்கம் ஆராதனையின் முக்கிய அம்சம். ஆனால், பிரசங்க மேடை ஆராதனையின் முக்கிய அம்சமல்ல. அதற்காக பிரசங்க மேடை இருக்கக்கூடாது என்று சொல்வோமா? பிரசங்க மேடை பிரசங்கம் செய்ய நமக்கு உதவும் வெறும் கருவியே. பிரசங்கத்தில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர பிரசங்க மேடை எத்தனை அழகாக இருக்க வேண்டும் என்பதில் அல்ல. இதைப்போலத்தான் ஆராதனையில் நாம் ஆவியோடும், உண்மையோடும் கர்த்தரைப் பாடித் துதிப்பதில்தான் அதிக கவனம் செலுத்த வேண்டுமே தவிர இசைக்கருவிகளில் அல்ல.

இன்று அநேகர் தங்களுக்கு வாத்தியக் கருவிகள் வாசிக்கும் திறமை இருப்பதாகவும் அதற்கு ஆராதனையில் இடம் கொடுக்க வேண்டும் என்றும் வாதாடுகிறார்கள். வயலின், வில்லுப் பாட்டு, கிட்டார் அடிக்கும் இளசுகள் எல்லாம் (பெரிசுகளும்) இந்த நோக்கத்திலேயே சபைக்கு வருகிறார்கள். எங்கள் திறமையைக் காட்ட ஆராதனையில் இடம் கொடுக்காவிட்டால் எங்களுடைய வரங்கள் என்னாவது? என்று கேட்கிறார்கள். ஆராதனை என்பது நமது வரங்களைக் காட்டும் சந்தர்ப்பம் அல்ல; நமது இருதயத்தையும், மனத்தையும் கர்த்தருக்கு முன் திறந்து துதிக்கும் வேளை என்பது இதுகளுக்குப் புரிவதில்லை. எந்தவிதத்திலும் நம்முடைய திறமைகளை ஆராதனையில் காட்டும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்பதே இவர்கள் சிந்தையில் படுவதில்லை. மனத்தாழ்மை-யுடனும், இருதய சுத்தத்துடனும் கர்த்தருக்கு முன் அவர் கேட்கும் ஆரா-தனையை அவர் வார்த்தைப்படி ஆவியின் வழிநடத்தலோடு வழங்க வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஈவுகளைப் பயன்படுத்தும் இடமல்ல ஆராதனை வேளை.

பாப்திஸ்துகள் பல்லவிபாடி பெரிசுபடுத்தும் பெரும் பிரசங்கியாராகிய ஸ்பர்ஜன் தன் சபையில் இசைக்கருவிகளுக்கு இடம் கொடுக்கவில்லை. ஏன் தெரியுமா? இன்றுபோல் அன்றும் இசைக்கருவிக்கு அநாவசியமான இடத்தைக் கொடுக்கும் கூட்டம் சபைகளில் பெருகத் தொடங்கியதால்தான். "இசைக்-கருவிகள் தன்னைப் படைத்தவனைப் பாடட்டும், நாம் நம்மைப் படைத்த-வரைப் பாடுவோம்" என்று இசைக்கருவிகளுக்காக அலைந்த ஒருவரைப் பார்த்து ஸ்பர்ஜன் அந்தக்காலத்தில் சொன்னார். இசையும், இசைக்கருவியும் நமக்கு நிச்சயம் உதவும். அவற்றைப் பயன்படுத்த வேண்டியவிதத்தில் ஆரா-தனையில் அளவோடு அடக்கி வாசிக்க நமக்கு தேவ பயம் இருக்க வேண்டும். காயினைப் பின்பற்றி கர்த்தருடைய சாபத்தை சம்பாதித்துக் கொள்ளாதே!

**இப்போது முதன் முறையாக தமிழில் வெளிவந்துள்ளன,**

# 1689 விசுவாச அறிக்கை

**(இந்திய ரூபாய் 24.00)**

# சிறுவர்களுக்கான வேத உபதேசம்

**(இந்திய ரூபாய் 14.00)**

தபால் செலவு தனி. 25 க்கு மேற்பட்ட தொகை ஓடர்களுக்கு கழிவு விலையில் (Discount) அளிக்கப்படும். இந்தியாவில் இருப்பவர்கள் மட்டும் இவ்விரு நூல்களையும் கீழே தரப்பட்டுள்ள இந்திய முகவரிக்கு காசோலையோ அல்லது மணியார்டரோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Reformed Baptist Publications
22 T. P. K Main Road
Pykara, Madurai 525004
Tamil Nadu. S. India
Phone: (452) 371659

வெளிநாடுகளில் இருப்பவர்கள் எமது நியூசிலாந்து முகவரிக்கு பேங்க் டிராப்ட் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

1689 விசுவாச அறிக்கை - NZ$8.00
சிறுவர்களுக்கான வேத உபதேசம் - NZ$5.00

பேங்க் டிராப்டை "Sovereign Grace Church Trust" என்ற பெயரில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

Sovereign Grace Publications
P O Box 62 159, Sylvia Park, Auckland, New Zealand
Phone: 64 09 272 8061/Fax: 64 09 272 8032




மலர் 8 ஏப்ரல் - ஜீன் 2002 இதழ் 2


1. ஆராதனை! மனிதனின் சிந்தனைப் போக்கிலா? அல்லது கர்த்தரின் வழியிலா?

2. வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி

3. ஜோன் விக்ளிப்

4. ‘அடியோபரா’

5. தகவல்கள்

6. ‘இரகசிய கிறிஸ்தவர்கள்’

7. கிறிஸ்தவ கோட்பாடுகள்

8. சபைப் பிதாக்கள்

9. வில்லியம் கேரி

10. 1 கொரிந்தியர் 12-14

11. தெய்வீக பராமரிப்பு (1689 விசுவாச அறிக்கை)

12. அடக்கி வாசிப்போம்


Te Rau Herald Print